Stay connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 308 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 15, செவ்வாய் 01.10.2013



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c

தீவிரவாதத்தின் மையம் பாக். 06

கல்லூரிக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு நைஜீரியாவில் வெறியாட்டம் 07

அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற அணிகள் 22

ஹைதராபாத்தை வென்றது ரைற்றன்ஸ் 23

# முதல்வராக விக்கிக்கு இன்று நியமன கடிதம்

## வடக்கு ஆளுநர் சந்திரசிறி வழங்குகிறார்



யாழ்ப்பாணம், ஒக். 1
வடக்கு மாகாண சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கான நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி இன்று செவ்வாய்க் கிழமை வழங்கவுள்ளார்.

ஆளுநருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பில் நியமனக்கடிதத்தை இன்று வழங்குவது என முடிவாகியது.

இதன்மூலம் வடக்கு முதல்வராக விக்னேஸ்வரன் அரசினால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற க.வி.விக்னேஸ்வரனை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சராக ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.

இது தொடர்பான கடிதம் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறிக்கு அனுப்பப்பட்டு அவரும் அதனை ஏற்றுக்கொண்டு பதிலளித்திருந்தார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறிக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்று காலை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் இல்லத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாண முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தையும், நான்கு அமைச்சர்களுக்கான நியமனக் கடிதங்களையும் மாகாண ஆளுநரே வழங்க வேண்டும்.

இதனடிப்படையில் வடக்கு ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கான நியமனக் கடிதத்தை மட்டும் இன்று கையளிப்பார் எனவும் அதன் பின்னரே அவர் பதவிப் பிரமாணம் செய்வார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-5)

## 'பைக்கற்' பாலைக் குடித்த மாணவர்களுக்கு வாந்தி

### தென்மராட்சி வலயத்தில் நேற்று சம்பவம்

தென்மராட்சி, ஒக்.1
தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பலர் நேற்று திடீரென வாந்தி, வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டனர். உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்ட அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. மூன்று மாணவர்கள் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுமளவுக்குப் பாதிக்கப்பட்டிருந்தனர். கொழும்பில் இருந்து தருவிக்கப்பட 'பைக்கற்' பாலைக் அருந்தியமைமேலேயே தமது பிள்ளைகள் நோய்வாய்ப்பட்டனர் என்று அவர்களின் பெற்றோர் கூறினர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

குறித்த பாடசாலைகளில் வழங்கப்பட்ட பாலைக் குடித்ததனால் மாணவர்கள் வாந்தி, வயிற்றோட்டம், குமட்டலுக்கு உள்ளாகினர். உடனே வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த மாணவர்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட பால் பைக்கற்றுக்களைக் குடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மாணவர்களுக்குத் தேவையான பால் யாழ்ப்பாணத்தில் சேகரிக் 21

## ஜனாதிபதி, ஆளுநர் முன்பாக பதவியேற்காது கூட்டமைப்பு


### சந்திரசிறியிடம் நேரில் தெரிவித்தார் விக்னேஸ்வரன்

கொழும்பு, ஒக். 1
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையிலோ அல்லது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முன்னிலை யிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை முதலமைச்சர் மற்றும் சபை உறுப்பினர்கள் பதவியேற்கமாட்டார்கள் எனத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி அல்லது ஆளுநர் முன்னிலையில் பதவியேற்பதா என்பது தொடர்பில் ஆராயப்பட்டது. இதற்கு பங்காளிக் கட்சித் தலைவர்கள் விருப்பம் தெரிவிக்க வில்லை என கூட்டமைப்பு வட் 21

## இருளில் நின்ற வாகனத்தால் குடும்பஸ்தரின் உயிர் பறிப்பு

### மண்டான் சந்தியில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக். 1
வீதியோரத்தில் சமிக்ஞை இன்றி வாகனத்தை நிறுத்திவிட்டு மது அருந்துவதற்காகச் சென்றனர் சாரதியும் நண்பர்களும். எதிரே மோட்டார் சைக்கிளில் வந்தவர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்தார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்றிரவு வல்லை மண்டான் சந்தியில் புதிதாக திறக்கப்பட்ட மதுபான நிலையத்துக்கு அருகில் நடைபெற்றது. சம்பவத்தில் துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த கிராமசேவகரான சோதிநாதன் 21

## இராணுவ வாகனம் மோதி இளம் பெண் நேற்று சாவு

### தட்டாதெருச் சந்தியில் நேற்றிரவு கோரச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ். தட்டாதெருச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - இராணுவ வாகன விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளம் குடும்பப் பெண் பஸ்சில்லில் நசியுண்டு உயிரிழந்தார். கணவன் படுகாயமடைந்தார். இராணுவ வாகனம் மோட்டார் சைக்கிளின் பின்புறம் மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். யாழ். தட்டாதெருச் சந்தியில் நேற்றிரவு 10.15 மணியளவில் இந்த 21

## போனஸ் ஆசன பெயர்கள் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரு போனஸ் ஆசனங்களுக்குரியவர்களின் பெயர்கள், வடமாகாணப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளரிடம் நேற்றுக் காலை கட்சியின் பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராசாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரு போனஸ் ஆசனங்கள் கிடைத்திருந்தன.

இந்த போனஸ் ஆசனங்களுக்குரியவர்களின் பெயர்களைத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிப்பதற்கான இறுதி நாள் நேற்றாகும்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட அ.அஸ்மினுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட திருமதி மேரி கமலா குணசீலனுக்கும் குறித்த இரு போனஸ் ஆசனங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பிலான உத்தியோக பூர்வ எழுத்துமூல அறிவித்தல் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராசாவினால் 21

## மாகாண சபைக் கட்டடம் 12 ஆம் திகதி கையளிப்பு

### சம்மதித்தார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஒக். 1
வடக்கு மாகாண சபைக் கட்டடத்தை எதிர்வரும் 12 ஆம் திகதி தம்மிடம் கையளிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி சம்மதித்துள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்ரவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சந்திப்புத் தொடர்பாக 'உதயனு'க்குத் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடினோம். இதன் போது அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா என்று ஆளுநர் எம்மிடம் கேட்டார். நாங் 21

## இந்தியத் தூதரகத்தில் முள்ளிவாய்க்கால் அவலம்

### கவிதையில் வடித்தனர் கவிஞர்கள்




யாழ்ப்பாணம், ஒக். 1
முள்ளிவாய்க்கால் போர்க் காலச் சூழலை உள்ளடக்கிய போர்க் காலக் கவிதைகளை இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெற்ற, ரஜீவ விஜேசிங்காவின் நூல் வெளியீட்டில் ஈழத்துக் கவிஞர்கள் வாசித்து பார்வையாளர்களின் நெஞ்சங்களை நெகிழ வைத்தனர்.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனர்திபதியின் ஆலோசகருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவின் தொகுப்பில் உருவாக்கப்பட்டு, இந்திய தேசிய புத்தக அறக்கட்டளை நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 'தெறிப் 21

## சிறுவர் பாடல் இறுவெட்டு நாளை கொழும்பில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.1
உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட அருணோதய-2013 சிறுவர் பாடல் இறுவெட்டு வெளியீட்டு விழா கொழும்பில் இடம்பெறவுள்ளது.
நாளை புதன்கிழமை பி.ப 4 மணிக்கு மருதானை ரவர் மண்டபத்தில், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரீ.பி.ஏக்கநாயக்க தலைமையில் இந் நிகழ்வு நடைபெற உள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## 2020 இல் மும்மொழி புலமை

கொழும்பு, ஒக்.01
அரச துறையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழியறிந்த சமூகம் ஒன்று 2020ஆம் ஆண்டுக்குள் உருவாக்கப்படும். இது தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு தெரிவித்தார் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
மும்மொழிக்கொள்கைக்கமைய அரசதுறை ஊழியர்கள் மும்மொழி களை அறிந்திருப்பது அவசியம். அதற்கமைய இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் சுமார் 25,000 அரச உத்தியோகத்தர்கள் தமிழ் மொழி பயிற்சிப்பெற்றுள்ளனர்.
நாடு முழுவதிலுமுள்ள 84 தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவக கிளைகளினூடாக, வைத்தியர்கள், பிரிவெனாக்களில் கல்வி பயிலும் பௌத்த பிக்குகள் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்களுக்கான பத்து நாள் தமிழ் மொழிப்பயிற்சி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.
இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச சபை ஊழியர்களுக்கான விசேட தமிழ் மொழி பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவிய


# மருத்துவர்கள் இடமாற்ற பிரச்சினை நேற்றுடன் முடிவு

யாழ்ப்பாணம், ஒக்.01
யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் பெறத் தகுதியுள்ள வைத்தியர்களில் 24 பேர் நேற்று இடமாற்றம் செய்யப்பட்டதாக வைத்தியசாலை பதில் பணிப்பாளர்களில் ஒருவரான வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.
இதன்படி ஒரு வாரகாலமாக இடம்பெற்றுவந்த கருத்து மோதல்கள் - இழுபறியின் பின்னர் இடமாற்றப் பிரச்சினை நேற்றுத் தீர்வுக்கு வந்துள்ளது.
இது தொடர்பில் பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்.போதனா வைத்தியசாலையில் இலிருந்து இடமாற்றம் பெறும் 24 வைத்தியர்களில் 18 பேர் யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மிகுதி 6 பேரில் கிளிநொச்சிக்கு ஒருவரும், நாவலப்பிட்டிக்கு 2 பேரும், கொழும்புக்கு 3 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்.மாவட்டத்தினுள் உள்ள வைத்திய சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளவர்களில் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு ஒருவரும் தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு இருவரும் ஏற்கனவே சென்றுள்ளனர்.
இந்த 24 வைத்தியர்களும் போதனா வைத்திய சாலையில் 10 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றியிருந்தனர். இதன் போது இவர்கள் செய்த பணியை பாராட்டுகிறேன்.
வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் பதிலீட்டு வைத்தியர் நியமனத்தின் அடிப்படையிலேயே சென்றுள்ளனர். இதன்படி இந்தத் தொகையினருக்கு ஏற்ப பதில் வைத்தியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரவேண்டும். கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து ஒரு வைத்தியர் பதிலீடாக வந்துள்ளார். ஆனால் ஏனையவர்கள் பதிலீடாக இன்னும் வரவில்லை.
பதிலீட்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டால் மாத்திரமே போதனா வைத்தியசாலையில் மக்களுக்கு முழுமையான தேவையை வழங்க முடியும் - என்றார் பவானந்தராஜா.
யாழ். போதனா வைத்தியசாலையில் இடமாற்றம் பெறத் தகுதியுள்ள 88 வைத்தியர்கள் உள்ளனர். அவர்களை படிப்படியாக இடமாற்றம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இடமாற்றம் பெறும் வைத்தியர்கள் அதனை எதிர்த்திருந்தனர்.
அதனால் இடமாற்றப் பிரச்சினை ஒரு வார காலத்துக்கும் மேலாக இழுபறிப்பட்ட நிலையில் நேற்றுத் தீர்வுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# பெயர் நீக்கப்பட்டவர்களும் வாக்காளர்களாக பதியலாம்

## ஒக்ரோபர் 29 ஆம் திகதி வரை காலக்கெடு

யாழ்ப்பாணம், ஒக்.1
2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்டவர்கள் இந்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னதாக உரிமைக் கோரிக்கை படிவத்தைச் சமர்ப்பித்து, வாக்காளர்ப் பெயர்ப் பட்டியலில் தம்மை இணைத்துக்கொள்ள முடியும் என்று வடமாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன் தெரிவித்தார்.
2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து இடம்பெற்று வருகின்றன.
கிராம சேவையாளர்கள் ஊடாக 'பிசி' படிவம் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டு முதல் கட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்று 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களது பெயர்களும் புதிதாக சேர்க்கப்பட்டவர்களது பெயர்களும் நாளை புதன்கிழமை முதல் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
நீக்கப்பட்டவர்களது பெயர் 'ஏ' பட்டியலிலும், புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் பெயர் 'பி' பட்டியலிலும் இடம்பெற்றுள்ளன.
இந்தப் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு கிராம சேவையாளர் அலுவலகத்திலும், பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் தேர்தல் திணைக்களத்திலும் காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டிருக்கும்.
வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள், நீக்கப்பட்டவர்கள் இந்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கைப் படிவத்தினை சமர்ப்பிப்பதனூடாக தம்மை இணைத்துக் கொள்ள முடியும் - என்றார். (ஐ-5)



கொழும்பு மோதரை எலிஹவுஸ் பார்க் பகுதியில் நேற்று இடம்பெற்ற நில இடிபாடுகளுக்குள் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் மண்ணில் புதையுண்ட நிலையில் கனரக வாகனங்களின் உதவியுடன் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

# இலங்கை பௌத்தரிடம் இனவாதம் வேண்டாம்

## தலாய் லாமா கோரிக்கை

புதுடில்லி,ஒக் 1
இலங்கையிலும் மியன்மாரிலும் உள்ள பௌத்தர்கள் இனவாத வன்முறைகளை நிறுத்த வேண்டும் என திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.
திபெத்திய பௌத்த ஆலயத்தில் பக்தர்களுக்கு போதனைகளை வழங்கும் முதல் நாள் நிகழ்வில் நேற்று அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள் ளார்.
ஏற்கனவே மியன்மாரில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இலங்கை மற்றும் மியன்மார் பௌத்த துறவிகள் பயங்கரவாதிகள் எனக் கருதப்படுவது மிகவும் வருத்தமானது. பௌத்த துறவிகள் புனிதத் தன்மை குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் மதம் மீது நம்பிக்கை வையுங்கள். அதேபால் ஏனைய மதங்களுக்கும் மதிப்பளியுங்கள். இது பல்வேறு மதங்களுக்கு இடையில் ஐக்கியத்தை கொண்டு வரும் என்றார் தலாய் லாமா
திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா 1989 அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
திபெத் நாட்டைச் சீனா கைப்பற்றியதில் இருந்து இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் அவர் நாடு கடந்த திபெத் அரசின் தலைவராகச் செயற்பட்டு வந்ததுடன் சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றார். (கு)

## பதுளையில் சயனைட்டுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 1
பதுளை வெலிமடை கலுலந்த பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு மற்றும் சயனைட் குப்பியுடன் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெலிமடைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரது வீட்டில் ரின் ஒன்றுக்குள் இந்தக் கைக்குண்டும் சயனைட் குப்பியும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.
குறித்த சந்தேகநபர் வெலிமடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (கு)

# விவசாய மேம்பாட்டுக்கு கனேடிய அரசு உதவும்

## யாழ். அரச அதிபரிடம் தூதரக ஆலோசகர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்.மாவட்டத்தின் விவசாயத் துறை மேம்பாட்டுக்காகக் கனேடிய அரசு உதவிகளை வழங்குமென்று, கனேடிய தூதரகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் ஜெனிபர், யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுத் திங்கட்கிழமை வருகைதந்த கனேடியத் தூதரகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் ஜெனி பர், இங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.
யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தையும் அவர் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பில் விவசாயத் துறையின் மேம்பாடு தொடர்பிலேயே ஆராயப்பட்டுள்ளது.



யாழ்.மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய விவசாயக் குளங்கள், சந்தை வாய்ப்பு, உற்பத்தி, நீர்ப்பாசனம் என்பன தொடர்பில் அரச அதிபரால் தூதரக அதிகாரிக்கு விரிவாக எடுத் துக் கூறப்பட்டது.
இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த கனேடிய அதிகாரிகள், யாழ்.மாவட்டத்தின் விவசாய மேம்பாட்டுக்காக கனேடியத் தூதரகம் முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கூறினார். (கு-5)

## எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கானோரில் 40 வீதத்தினர் வெளிநாட்டவர்

கொழும்பு, ஒக்.01
எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களில் 40 வீதமானவர்கள் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர்கள் என்று தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் தலைவர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.
இவ்வாறு எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகியவர்களில் ஆண்களே அதிகம் என ஆய்வில் தெரியவந்துள்ளது.
இலங்கையில் இருந்து தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றவர்கள் மற்றும் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டு நாடு திரும்புபவர்களும் இந்த கணக்கில் உள்ளடங்குகின்றனர்.
எச்.ஐ.வி தொற்று இருப்பதாகச் சந்தேகமுள்ளவர்கள் இரத்த பரிசோதனை மூலம் அதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். இரத்த பரிசோதனை மூலமாக மட்டுமே அதனை அறிய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.
உத்தியோகப்பூர்வ தரவுகளின் படி தற்போது இலங்கையில் 1739 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# நகைக் கடை திருட்டு சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக்.01
யாழ்.நகரிலுள்ள நகைக் கடை ஒன்றில் பெறுமதிமிக்க மூன்று நெக்லஸ் தங்க ஆபரணத்தைத் திருடிய குற்றச் சாட்டில் கடை உரிமையாளர்களால் பிடிக்கப்பட்ட இரண்டு பெண்கள் யாழ். பொலிஸாரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:
யாழ்.நகரில் உள்ள நகைக் கடைக்கு சில தினங்களுக்கு முன்னர் சென்ற, இரண்டு பெண்கள் அங்கு கடைக்காரர்களின் கண்ணில் மண் தூவி விட்டு மூன்று நெக்லஸ்களைத் திரு டிக்கொண்டு சென்றுவிட்டனர். ஆனால், அவர்கள் திருடியதை அங்கு பூட்டியிருந்த வீடியோ கமரா கண்காணிக்கத் தவறவில்லை.
அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னரே மூன்று நெக்லஸ்களும் காணாமல் போனமை தெரிய வந்தது. கடைக்காரர் வீடியோ கமராவின் பதிவை மீளப் பார்த்தபோது குறித்த இரண்டு பெண்களும் அவற்றை எடுத்துச் சென்றது பதிவாகியுள்ளமை தெரியவந்தது.
குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவரும் யாழ்.நகரில் நின்றபோது அவர்களை நகைக்கடை உரிமையாளர்கள் பிடித்து யாழ்.பொலிஸில் ஒப்படைத்தனர். அத்துடன் குறித்த இருவருமே தமது கடையில் திருடினர் எனவும் குறித்த நகைக் கடை உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-4)

**சில தினங்களுக்கு முன்னர் சென்ற, இரண்டு பெண்கள் அங்கு கடைக்காரர்களின் கண்ணில் மண் தூவிவிட்டு மூன்று நெக்லஸ்களைத் திருடிக்கொண்டு சென்றனர்.**

## போதைக்கு அடிமையானோரை ஆற்றுகைப்படுத்தும் நிலையம்

**சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் திறப்பு**

தென்மராட்சி, ஒக். 1
போதைக்கு அடிமையாகி மீள முடியாதவர்களுக்கான ஆற்றுகைப்படுத்தும் நிலையம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
குறித்த நிலையத்தில் பணியாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ்.மாவட்ட உளவள சிகிச்சைப் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆற்றுகைப்படுத்தும் மையத்தில் மது போதைக்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் காணப்படுவோர் குறித்த நிலையத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படவுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக ஆற்றுகைப்படுத்தும் நிலையம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

> உளவள சிகிச்சைப் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆற்றுகைப்படுத்தும் மையத்தில் மது போதைக்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் காணப்படுவோர் குறித்த நிலையத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படவுள்ளது

# வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்துக்கு புதிய கட்டடம்



யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்துக்கான புதிய கட்டடப் பணிகள் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதிப் பங்களிப்புக்களை அன்பளிப்பாளர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்று யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் தெரிவித்துள்ளது.
மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் பயிற்சிகளை வழங்கக்கூடிய ஆதரவு நிலையமாகச் செயற்படும் குறித்த சங்கம் தற்போது தற்காலிக சிறிய கட்டடத்தில் அடிப்படை வசதிகள் இன்றிச் செயற்பட்டு வருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வலுவிழந்தோர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியால் அர்ப்பணிப் பாளர்களால் ஒரு தொகை நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் 3 மாடிக் கட்டடங்களைக் கொண்ட புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
எனினும் நிதிப் பங்களிப்புக்கள் போதாமையால் கட்டடப் பணிகள் தாமதமடையும். இதற்கான நிதி சேகரிப்பை வலுவிழந்தோர் சங்கம் மேற்கொண்டு வருகிறது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் இதனூடாக அதிகளவு நன்மையடைவர் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (வ-14)

## பள்ளிமுனை ஆலய நிர்வாக சபைச் செயலர் தாக்கப்பட்டார்

மன்னார், ஒக்.1
மன்னார் பள்ளிமுனை புனித லூசியா ஆலய நிர்வாக சபையின் செயலாளர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அரச தரப்பு அரசியல்வாதி ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
மன்னார் பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த ஆலய நிர்வாக சபைச் செயலாளரான லக்ஸ்மன் பிகிராடோ (வயது-29) என்பவரே கடுமையாக தாக்கப்பட்டு -மன்னார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள தாகப் பாதிக்கப்பட்டவரது சகோதரர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை புனித லூசியா ஆலய வீதிவழியாக நிர்வாக சபைச் செயலாளரான லக்ஸ்மன் பிகிராடோ தொலைபேசியில் உரையாடிக்கொண்டு சென்றபோது பின்புறமாக வாகனத்தில் வந்த மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினரான குறித்த அரசியல்வாதி வாகனத்திலிருந்து இறங்கி ஆலய நிர்வாக சபை செயலாளரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு கண் மூடித்தனமாக தாக்கியுள்ளார்.
அதன்போது கடுமையான காயங்களுக்கு உள்ளான நிலையில் ஆலய நிர்வாக சபை செயலாளர் உடன் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
இந்த நிலையில் மன்னார் நகர சபையின் அரச தரப்பு உறுப்பினரான குறித்த நபர் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பாக மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.
தேர்தல் காலங்களில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் எதிரொலியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.
மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-12)

### சுகாதாரத் தொழிலாளர் மீது தாக்குதல்

# கண்டித்து நேற்று வேலை நிறுத்தம்



> வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து நல்லூர் பிரதேச சபைத் தலைவர், எதிரணித் தலைவர் உட்பட உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், ஒக்.1
நல்லூர் பிரதேச சபை சுகாதாரத் தொழிலாளர் மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்டையாலடியில் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட நபர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தக்கோரி வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் நேற்று திங்கட்கிழமை காலை 7 மணி முதல் நல்லூர் பிரதேச சபை முன்பாக ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து நல்லூர் பிரதேச சபைத் தலைவர், எதிரணித் தலைவர் உட்பட உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.
ஊழியர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அனைத்து தொழில் சங்கங்களையும் இணைத்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக ஐக்கிய தொழில் சங்கத் தலைவர் ஆ.ஜோண்சன் தெரிவித்தார்.
இது தொடர்பாக பிரதேச சபைக்கு வருகை தந்த கோப்பாய் பொலிஸார் தொழிற் சங்கத் தலைவருடன் உரையாடியதுடன் தாங்கள் நடவடிக்கை எடுப்பதாகவும் குறித்த நபர்கள் தொடர்பில் தகவல் கிடைக்கும் பட்சத்தில் தமக்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டனர். (வ-7)

## அரச பணியாளர்கள் மீதான தாக்குதல் ஏற்றுக் கொள்ள முடியாதது

**நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கண்டனம்**

யாழ்ப்பாணம், ஒக்.1
அரச பணியாளர்களை அவர்களது கடமைகளைச் செய்யவிடாது தடைசெய்வதும் அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதும் ஏற்றுக் கொள்ள முடியாததும் கண்டிக்கப்படவேண்டியதுமாகும். எமது பிரதேச சபையின் தொழிலாளர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி ஐக்கிய தொழிற்சங்கத்தால் நடத்தும் போராட்டத்துக்கு சபை பூரண ஆதரவை வழங்குவதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தாக்குதலுக்குள்ளான மூன்று அப்பாவித் தொழிலாளரின் தாக்குதல் குறித்த பின்னணியில் யார் இருந்தாலும் அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டியது தவிர்க்க முடியாதது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னர் அரச ஊழியர் மீதும் பொது மக்கள் மீதும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.
எமது தொழிலாளர்களைத் தாக்கி அவர்கள் தமது பணிகளைச் செய்யவிடாது தடுப்பதன் மூலம் பிரதேச சபையின் செயற்பாடுகளுக்கு இடையூறுகளைத் தோற்றுவித்து சபை மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சிதறடிக்கும் முயற்சியாகவே இதனைக் கருதமுடிகிறது. பொலிஸார் உடனடியாகத் தலையிட்டு தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.
இதேவேளை ஊழியர்கள் விடும் தவறுகள் குறித்து அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமே தவிர ஊழியர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வது உகந்த தீர்வல்ல என உறுப்பினர்கள் கி.தர்மரட்ணம், அ.ரவீந்திரதாஸ் ஆகியோரும் தெரிவித்தனர். (வ-7)

## தண்ணீர் போத்தல்களுடன் பூநகரி பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள்

**தண்ணீர் பற்றாக்குறை காரணமாக**



வலி.வடக்கு.ஒக்.1
பூநகரிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பற்றாக்குறை காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி பாடசாலைகளுக்கு கற்பிக்கச் செல்லும் ஆசிரியர்கள் தண்ணீர் போத்தல்களுடன் பயணம் செய்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.
பூநகரிப் பிரதேசத்தில் தற்போது காணப்படும் கடும் வறட்சி காரணமாக குடிதண்ணீருக்கு பெரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் யாழ்.குடாநாட்டு ஆசிரியர்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றுகின்றார்கள்.
பூநகரிப் பிரதேச சபையால் பொது மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக தண்ணீர் பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கினாலும் கூட அது முழுமையான தேவையையும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாத நிலைமை காணப்படுவதாக அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களும் பொது மக்களும் தெரிவிக்கின்றனர்.
வறட்சியைத் தொடர்ந்து பல கிணறுகள் வற்றிய நிலையில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக நீண்ட தூரம் சென்று வேறு இடங்களில் இருந்து குடிதண்ணீரைப் பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல் தென்மராட்சியில் நிறுத்தம்

தென்மராட்சி, ஒக்.1
தென்மராட்சி பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து வழங்குவது நிறுத்தப்பட்டதால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.
கடந்த மாதம் கைதடி, நாவற்குழி, மட்டுவில் சரசாலை ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டது. தமது வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு ஒருவருடத்துக்கு மேலாகியுள்ளதால் தமது பிரதேசத்திலும் நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென எதிர்பார்த்து காத்திருந்தனர். நேற்று வரை காத்திருந்த மக்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்ட போது ஏற்றுக்கொள்ள முடியாத தகவல்களை கூறுவதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது தடுப்பூசி மருந்து இன்னமும் வரவில்லையெனவும் வந்ததும் ஏனைய பகுதிகளில் பணிகள் தொடருமெனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

உதயன்
01/10/2013

### பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கக்கோரி

# பிரான்ஸில் கவனவீர்ப்பு




இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டை அதன் அங்கத்துவ நாடுகள் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பிரான்ஸ், பரிஸ் நகரில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது.

தென் ஆபிரிக்கா, பிரிட்டன், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா, மலேசியா என்று நடை பெறும் தொடர் போராட்டம், இந்த வாரம் நாளை புதன்கிழமை ஆபிரிக்க நாடுகளில் நடை பெறவுள்ளது.

ஆபிரிக்காவில் ஆபிரிக்க யூனியனிலும், பொதுநலவாய நாடுகள் அமைப்பிலும் அங்கத்துவ நாடாகிய நைஜீரியா நாட்டின் தூதரகம் முன் இந்த வார தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நடை பெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசுக்கு எதிராக அறிக்கை ஒன்றை விட்டிருக்கும் நிலையிலும் அதே நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் 68 அமர்வின் போது ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகளை தடுக்க ஐக்கிய நாடுகள் சபை தவறி விட்டது என்று அறிக்கை வெளியிட்டிருக்கும் நிலையிலும், கனடாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடப்பது, மனித நேயத்துக்கே நாம் செய்யும் மிகப்பெரிய தவறு என்று கூறி இருக்கும் நிலையில் தொடர்ச்சியாக கவனவீர்ப்பு போராட்டங்களை நடத்துவது, சர்வதேசத்தின் பார்வையை எமது பக்கம் தொடர்ந்து வைத்திருப்பது முக்கியம்.

இந்த அடிப்படையில் கடந்த நாளை புதன் கிழமை நடைபெற்ற போராட்டம் இலங்கைத் தூதரகத்துக்கு அருகில் இலங் கையைப் புறக்க ணிப்போம் என்ற பதாகையுடன் நாம் நின்று மக்களுக்கு துண்டு பிரசுரங்களை அளித்தமை, இலங்கைத் தூதரகத்துக்கு இடையூறான சூழலை உருவாக்கி அவர்களை குழப்பத்தில் தள்ளியதை பார்க்க கூடியதாக இருந்தது.

எமது போராட்டங்களை எம்மை தொடர்ச்சியான விடுதலை பாதையிலும் உலகத்தின் கவனத்தையும் வைத்தி ருக்கும் என்பதை இதன் மூலம் கூறி மக்களை போராட்டங்களில் இறங்கும் படி அழைக்கின்றோம் என்று பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

## இலங்கை அகதிகள் 6 பேர் சென்னையில் கைது

ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோமாக தப்பிச் செல்ல முயன்ற இலங்கை அகதிகள் 6 பேர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு சென்னை அண்ணாசதுக்கம் பின்புறம் நின்ற அவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணை நடத்தினர்.

குறித்த நபர்கள் முரணான கருத்துக்களைப் பேசியதால் அவர்களைக் கைது செய்துள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச்செல்ல முயன்றது தெரிய வந்துள்ளது. தொடர்ந்து அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## காணி அதிகாரம் பறிப்பு
## திருமா.எம்.பி. கண்டனம்



சென்னை, ஒக்.1

இலங்கையில் தமிழர்களின் காணி தொடர்பான அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளதாவது:-

தமிழர்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்று கோத்த பாய ராஜபக்ஷ கூறி வந்தார். இந்த நிலையில் தான் காணி அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட 13 ஆவது சட்டத் திருத்தம்தான் மாகாண சபைகளுக்கு காணி தொடர்பான அதிகாரத்தை முதலில் வழங்கியது.

வடக்கு மாகாணத்தில் இது வரை தேர்தல் நடத்தப்படா திருந்த காரணத்தால் இலங்கை அரசு இது பற்றி கவலைப்படாமல் இருந்து வந்தது.

தற்போது தமிழர்களுக்கான அரசாங்கம் உருவாகியிருப்பதால் இலங்கை அரசுகாணி அதி காரத்தைப் பறித்துள்ளது.

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடக்கவுள்ள நிலையில் இவ்வாறு இலங்கை அரசு நடந்து கொள்வது சர்வதேச நாடுகளின் கருத்தை அலட்சியம் செய்கிறது என்பதையே காட்டுகிறது- என்றுள்ளது.

(வ)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## காணவில்லை



1ஆம் வட்டாரம், நயினாதீவைச் சேர்ந்த மனோகரன் தனுஷன் வயது 17 கடந்த (22.09.2013) ஞாயிற்றுக் கிழமை முதல் காணவில்லை.
கண்டவர்கள் பின்வரும் தொலைபேசியூடாக அறியத்தரவும்.
**077 9549698,**
**077 0259600**

(சி/12513)(17,14)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா நடேசன்



சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாவும் வசிப்பிடமாக வுடம் கொண்ட திருமதி சின்னம்மா நடேசன் நேற்று (30.09.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசனின்(தம்பிராசா)அன்பு மனைவியும், தெய்வேந்திரம், கருணாநிதி, ஈஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), விக்னேஸ்வரி, யோகேஸ்வரி, கருணவேல், ஆகியோரின் அன்புத் தாயும், சியாமளா, ஜெயமதி, தர்மலிங்கம், காலஞ்சென்ற அருமைநாயகம், மகேஸ்வரன், சத் தியபாமா, ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி கிந்திட்டி இந்து மயானத்தக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/12512)(17,14)

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. 021 3213414, 021 321 6942

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஏரம்பு தர்மலிங்கம்

(இளைப்பாறிய புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்)



வெள்ளாம் போக்கட்டி, கொடி காமத்தைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, பெரியரசடி வீதி, சாவகச்சேரியை வசிப்பிட மாகவுடம் கொண்ட ஏரம்பு தர்மலிங்கம் (இளைப்பாறிய புகையிரத திணைக் கள உத்தியோகத்தர்) நேற்று (30.09.2013) திங் கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உமா மகேஸ்வரன்- கௌரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சௌந்தரவல்லியின் (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியை) அன்புக் கணவரும், மாதங்கியின்(சங்கீத ஆசிரியை யா/நுனாவில் மேற்கு அ.த.க பாடசாலை) அன்புத் தந்தையும், புவனேசத்தின் (லண் டன்) அன்புச் சகோதரரும், நிர்மலான ந்தன், கோமல வல்லி, வீரகத்தியர்(லண் டன்) ஆகியோ ரின் அன்பு மைத்துனரும், வாசுகி, தேவ தாசன் ஆகியோரின் சகலனும், கெங்காசுதன், சிவப்பிருந்தா (லண்டன்), காலஞ்சென்ற நிர்மலன் ஆகியோரின் அன்பு மாமனும், கௌரிசங்கரின் பெரிய தந்தையும், கஜானனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மு.ப. 10.00மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெரியரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுகுமாரன் குருநாத் (பழைய மாணவன், யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி)



நாமகள் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுகுமாரன் குருநாத் நேற்றுமுன்தினம் (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுகுமாரன் மற்றும்-செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும், பிரியா, பிரபு (ஜேர்மனி), டயானா, கோபிநாத் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயஸ்ரீ, கீர்த்தனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிஜெனன், லாவண்ஜா, ஹம்சிகா ஆகியோரின் அன்பு மாமனும், ஜெயகுமாரன்(ஜேர்மனி), பாலகுமாரன்(ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும், சுகுணா(கனடா), மஞ்சுளா(ஹொலண்ட்), மோகனா (ஹொலண் ட்), வசுந்தரா(ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சாரதா(ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஜெயமணி(ஆஸ்திரேலியா), சிரோன்மணி, காலஞ் சென்ற ருக்மணி(ஜேர்மனி) மற்றும் வரதராஜன், வனிதாமணி, காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, புவனேஸ்வரி,ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற ஸ்ரீகரன், செல்வகுமார் ஆகியோரின் மருமகனும், செல்வமலரின் பெறாமக னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 10.00மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு . தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மரியாப்பிள்ளை அல்போன்ஸ்(அம்மாப்பேத்தி ராசு)



வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவுடம் கொண்ட மரியாப்பிள்ளை அல் போன்ஸ் (அம்மாப்பேத்தி ராசு அண்ணாவியார்) நேற்று (30.09.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரீனம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-அடைக்கலம் தம்பதியரின் அன்பு மகனும், துரை(செம்பியன்பற்று), கோன், யோகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிங்சிலி வில்பிறேட்(சீலன்), சதாநாயகம்(அருமை), மரியாம்பிள்ளை(நவம்), கொண்சலா, கெனியூட் வின்சன் (வண்ணன் சுவிஸ்), காலஞ்சென்ற யேசுநாயகம் (றவி) மற்றும் அன்ரன்பிறதர் (ஜெயக்கொடி-ஜேர்மனி), வின்சன் பெனடிக் (ஜோச், கிளை முகாமையாளர், வட மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி றெஜினா, மரிய கொலஸ்ரிக்கா, ஜெயராணி, வர்ணகுலசிங்கம் (வின்சன்), மேரிரீற்றா (சுவிஸ்), கமல்றாஜினி(ஜேர்மனி), சத்திய பாமினி (ஆசிரியர், யா/ஆழிய வளை, சி.சி.த.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலத்தில் இரங்கல் திருப்பலித் ஒப்புக்கொடுக்கப்பட்டு அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெற்றிலைக்கேணி, முள்ளியான். பிள்ளைகள்.

# உயிர்களைப் பறிக்கக் காத்திருக்கும் மரணப் பொறி






இந்த மதிற் சுவர் (மரணப்பொறி) இருப்பது யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில். யாழ்.இந்துக் கல்லூரி சுற்றுவட்டத்துக்கு அருகில். இந்தச் சுற்றுவட்டத்துக்கு சமீபமாக புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றும் உள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் நூற்றுக் கணக்கில் சின்னஞ்சிறுசுகள் கூடும் இடம் இது. யாழ்.இந்துக் கல்லூரி மாணவர் பாடசாலை முடிவுற்ற பின்னர் பஸ்ஸுக்காக முண்டியடித்துக் கொண்டு நிற்கும் இடம். இந்த மதில் நூற்றுக்கு மேற்பட்ட வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும். பழைமையான இந்த மதில் சுவரில் எங்கும் வெடிப்புக்கள். கவனித்துப் பாருங்கள் இந்தப் படத்தை. குறித்த வளவில் வீடு ஏதுமில்லை. வளவின் பக்கத்தில் வீடும் மறுபக்கத்தில் கடைத் தொகுதியும் உள்ளன. வளவின் உரிமையாளர் நாட்டில் இருக்கிறாரோ அல்லது வெளிநாட்டிலோ தெரியவில்லை. ஆட்டங்கண்டுள்ள இந்த மதிலை உடனடியாக அகற்ற வேண்டும். இல்லையேல் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். விபரீதம் நடந்த பின்னர் காரணம் கூறிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. (ஒ-21)

## பொலிஸாரால் துப்புரவு செய்யப்பட்ட பொதுக்கிணறு

வலி.வடக்கு, ஒக்.1
கீரிமலை நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள புதிய கொலனி என அழைக்கப்படும் இடத்தில் உள்ள பொதுக் கிணறு பொதுமக்களின் நன்மை கருதி காங்கேசன்துறை பொலிஸாரால் துப்புரவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு வசதியாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.குணரத்தினம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்தப் பணியை மேற்கொண்டனர்.

புதிய கொலனியில் உள்ள குறித்த பொதுக்கிணறு துப்புரவு செய்யப்பட்டமையால் அந்தப் பகுதியில் உள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-86)

## பொது இடத்தில் மது அருந்திய ஐவருக்கு அபராதம்

வடமராட்சி, ஒக். 1
பொது இடத்தில் வைத்து மது அருந்திய 5 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் பொது இடத்தில் வைத்து மது அருந்தி சந்தோசம் கொண்டாடிய 5 பேரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து



அவர்கள் மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 5 பேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

அதனையடுத்து ஒவ்வொருவரும்தலா6ஆயிரம்ரூபாவீதம் அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ-8)

## நவாலியில் வியாழனில் ஆயுள்வேத சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.1
நவாலி ஹேமலதா சிறுவர் ஞாபகார்த்த நிதியத்தில் பிரதி வியாழக்கிழமைகளிலும் காலை 8.30 மணி முதல் விசேட ஆயுள்வேத சிகிச்சை முகாம் இடம்பெறும்.

எதிர்வரும் 3, 10, 17, 24, 31 ஆகிய 5 தினங்களிலும் இந்த இலவச ஆயுள்வேத சிகிச்சை முகாமில் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் மற்றும் சிறுவர்கள் பங்குபற்றி பயன் பெறலாம். (வ-50)

### வெளிநாட்டிலிருந்து வந்து பணிபுரிவோருக்கும்

# சேமலாப நிதி செலுத்துவது கட்டாயம்

யாழ்ப்பாணம், ஒக். 1
வெளிநாடுகளில் இருந்து வந்து தற்போது உள்நாட்டில் தொழில் புரியும் ஊழியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்தை செலுத்த வேண்டியது கட்டாயமாகும் என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊழியர் ஒருவரால் தொழில் திணைக்களத்துக்கு செலுத்தப்பட வேண்டிய சேமலாப நிதி செலுத்தத் தகுதியுடையவர்கள் தொடர்பில் தொழில் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தொழில் ஸ்தாபனம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் ஒன்றைப் பெற்றுக் கொண்டாலும் ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தல் வேண்டும். தொழில் ஸ்தாபனம் ஒன்றில் பாடசாலை நேரத்துக்குப் பின்னர் சேவையில் ஈடுபட்டுள்ள 14 வயதுக்கு மேற்பட்ட பாட சாலை செல்லும் சிறுவர்களுக்கும் ஊழியர் சேமலாப் நிதி செலுத்தல் வேண்டும். இன்னொரு நிறுவனத்தில் தொழில் புரிந்து வேறு நிறுவனத்தில் தற்போது பணிபுரிந்தாலும் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட வேண்டும்.

> மட்டுப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட வேலையில் ஈடுபடுத்தப்பட்டவர்களும் ஊழியர் சேமலாப நிதியம் செலுத்த வேண்டும்.

நிலையாக ஓர் இடத்தில் தொழில் புரியாமல் வேறு இடங்களுக்குச் சென்று கொண்டிருப்பவர்களும் ஊழியர் சேமலாப நிதி செலுத்த வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட வேலையில் ஈடுபடுத்தப்பட்டவர்களும் ஊழியர் சேமலாப நிதியம் செலுத்த வேண்டும்.


ஊழியர் சேமலாப நிதியத்தின் நலன்களை ஒருமுறை பெற்றுக் கொண்ட பின்னர் மீளப் பணிக்கமர்த்தப்பட்டாலும் ஊழியர் சேமலாப நிதி செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## வாசிப்பு மாதத்தையொட்டி சிரமதானப் பணிகள்

தென்மராட்சி,ஒக்.1
சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல் நிலையத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று நூலக வளாகத்தில் சிரமதானப் பணிகளும் நாளை சரசாலை வடக்கு முன்பள்ளியில் நடமாடும் நூலக சேவையும் இடம் பெறும் என்று நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை நாளை மறுதினம் சரசாலை உப அலுவலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் கதை வேளை நேரம் நிகழ்வு இடம் பெறுமெனவும் அறிவித்துள்ளார். (வ-9)

## ஐயாயிரம் ஜம்பு மரக்கன்றுகள் நடும்திட்டம் நேற்று ஆரம்பம்



தென்மராட்சி, ஒக்.1
யாழ்.போதனா வைத்திய சாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் 5 ஆயிரம் ஜம்பு மரக் கன்று நடும் திட்டம் நேற்று அனைத்துப் பிரதேசங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் கைதடி பனை ஆராய்ச்சி சபை, கைதடி சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், ஆயுள்வேத மருந்தகம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இந்துக் கல்லூரி, ஆதார வைத்திய சாலை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகியவற்றில் நேற்று மரக்கன்றுகள் நடப்பட்டன.

வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன் அந்தந்த இடங்களில் மரக்கன்றுகளை நட்டார். தென்மராட்சிப் பிரதேசத்தில் 165 ஜம்பு மரக்கன்றுகள் பொது அமைப்புகள், ஆலயங்கள் பாடசாலைகள் போன்றவற்றில் நடப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (வ-9)

## சாவகச்சேரி நகர சபையின் வீதிப் புனரமைப்பு ஆரம்பம்

தென்மராட்சி, ஒக். 1
சாவகச்சேரி நகர சபையின் வீதி அபிவிருத்தித் திட்டத்தில் மேலும் இரு வீதிகள் புனரமைப்பதற்கான பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டன.

நுணாவில் மேற்கில் உள்ள நான்கு-ஐந்து எல்லை வீதி, வீரபத்திரர் வீதி ஆகிய இரு வீதிகளின் வேலைகளே ஆரம்பிக்கப்பட்டன.

நான்கு-ஐந்து எல்லை வீதிக்கான ஆரம்பப் பணியை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையும், வீரபத்திரர் வீதிக்கான ஆரம்பப் பணியை நகரசபை உறுப்பினர் க.மயில்வாகனமும் கற்களை நட்டு ஆரம்பித்து வைத்தனர்.

நகர சபையின் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சபை நிதியின் மூலம் புனரமைக்க திட்டமிடப்பட்ட வீதிகளில் இரண்டே புனரமைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் அங்கீகரிக்கப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)




## மீசாலை நூலகத்தில் சிறுவருக்கான இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பம்

தென்மராட்சி, ஒக். 1
சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான இரவல் கொடுக்கும் பகுதி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இரவல் கொடுக்கும் பகுதியில் அங்கத்தவராக இணையவுள்ள 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் நூலகருடன் தொடர்பு கொள்ளுமாறு நகர சபைத்தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

நகர சபையின் சாவகச்சேரி பொது நூல் நிலையத்தில் இந்தத் திட்டம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)



## 6 மாதத்தில் புரியும் - எடியூரப்பா

பெங்களூரு, ஒக்.1
கர்நாடகாவில் எனது ஆட்சிக்கும், காங்கிரஸ் ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம் இன்னும் ஆறு மாதங்களில் தெரிய வரும் என மாநில முன்னாள் முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.
"எனது தலைமையிலான ஆட்சியில் செயல்படுத்திய சாதனைகளை காங்கிரசால் முறியடிக்க முடியாது என்பது விரைவில் புரியு" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

## அரசியலுக்கு தகுதியற்றவர் மோடி

சென்னை, ஒக்.1
குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி அரசியலுக்கு தகுதியற்றவர் என்று கூறியுள்ளார் மத்திய அமைச்சர் நாராயணசாமி.
சென்னை விமான நிலையத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பிரதமர் குறித்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்த நாராயணசாமி, இந்தியா ஏழை நாடு என்று அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமாவிடம் மன்மோகன் சிங் முறையிட்டார் என்று எழுந்த சர்ச்சை குறித்துத் கேட்ட போது அதனை மறுத்தார். (ற)

## நீதிமன்றம் வந்தார் விஜயகாந்த்

சென்னை, ஒக்.1
தமிழக முதலமைச்சரை அவதூறாகப் பேசிய வழக்கில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையானார். தொடர்ச்சியாக விஜயகாந்த் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில் பிணையில் பெறக் கூடிய பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.
இந்தநிலையில் அதனை தளர்த்துமாறு விஜயகாந்த் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணைகளுக்காக அவர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையானார். அதையடுத்து நீதிபதிகள் விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர்.
2012ம் ஆண்டு விழுப்புரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முதலமைச்சரை அவதூறாக பேசினார் என்று விஜயகாந்த் மீது வழக்குத் தொடரப் பட்டுள்ளது. குறித்த வழக்கில் விஜயகாந்த் நான்கு முறை முன்னிலையாகாததால்பிணையில் வரக்கூடிய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (ற)

# தீவிரவாதத்தின் மையம் பாக்.

## நவாஸ் செரீப்பிடம் இந்தியப் பிரதமர் காட்டம்



நியூயோர்க், செப். 25
தீவிரவாதத்தின் மையமாக பாகிஸ்தான் செயற்படுகின்றது என்று காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் இந்திப் பிரதமர் மன்மோகன் சிங்.
நியூயோர்க்கில் நடைபெற்ற பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்புடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.
கடும் அச்சுறுத்தல்கள்கள் மற்றும் எதிர்ப்புகளை மீறி மன்மோகன் சிங், நவாஸ் செரீப் ஆகியோரின் சந்திப்பு திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பாக நவாஸ் செரீப்பிடம் கண்டிப்பான தொனியில் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.
"தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதை பாகிஸ்தான் அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும். தீவிரவாதத்தின் மையமாக பாகிஸ்தான் செயற்படுகின்றது. அது இருநாட்டுக்கும் இடையிலான உறவுகளைப் பாதிக்கும்" என்று அவா சுட்டிக காட்டியுள்ளார்.
அதேவேளை, இருநாட்டுப் பிரதமர்களின் சந்திப்புக்குக் கடும் எதிர்ப்பும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருந்தன. குறித்த பேச்சுத் தொடர்பான நிகழ்ச்சி நிரலைக் கைவிட வேண்டும் என்று லஷ்கர் தீவிரவாத அமைப்பு அச்சுறுத்தல் விடுத்திருந்தது. அதே நேரம் இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியாக பா.ஜ.க. இந்தியாவில் நடத்தப்படும் தாக்குதல்கள் பாகிஸ்தான் துணையோடு மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்து, நவாஸ் செரீப்புடனான பேச்சுக்களைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியிருந் தது. (ற)

## நவாஸ் கருத்துக்கு மோடி கண்டனம்

புதுடில்லி, ஒக்.1
பிரதமர் மன்மோகன் சிங்கை இழிவுபடுத்தும் வகையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பேசியதற்காக அவரை கடுமையாகக் கண்டிக்கிறேன் என்று கூறியுள்ளார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி.
இது தொடர்பாக அவர் கூறும் போது,
"பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுடன் அமெரிக்காவில் பேச்சு நடத்த மன்மோகன் சிங் ஆர்வம் காட்டுகிறார். ஆனால், இந்திய, பாகிஸ்தான் பத்திரிகையாளர்கள் சிலருடன் சனிக்கிழமை சிற்றுண்டி அருந்தியபோது நமது பிரதமரை நவாஸ் ஷெரீப் இழிவாக விமர்சித்துள்ளார். இந்தியப் பிரதமர் கிராமப்புற பெண்மணி போன்றவர்' என் அவர் கிண்டல் செய்துள்ளார்.
கொள்கை அடிப்படையில் நமக்கு அவருடன் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், மன்மோகன் சிங்கை வேறு நாட்டு பிரதமர் விமர்சிக்கும் போக்கை சகித்துக் கொள்ள முடியாது. இது தனிப்பட்ட மன்மோகன் சிங்குக்கு இழைக்கப்பட்ட அவமானம் அல்ல. 120 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டின் தலைவருக்கு நேர்ந்த அவமதிப்பாகும்" என்று தெரிவித்தார். (ற)

## ஒருங்கிணைந்த வளர்ச்சியே இலக்கு

### இந்திய மத்திய நிதியமைச்சர் கூறுகின்றார்

புதுடில்லி, ஒக்.1
இந்தியாவில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்குமான ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியே அரசின் இலக்கு என்று மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.
சிவகங்கை மாவட்டத்தில் வங்கி ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:
"ஒரு சாரார் மட்டுமே வளர்ச்சி பெறுவது நாட்டின் உண்மையான வளர்ச்சியாகாது. அனைத்துத் தரப்பு மக்களும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதையே பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியும் வலியுறுத்துகின்றனர்.
நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வங்கிக் கடன் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே நாட்டுடமையாக்கப் பட்ட வங்கிகளின் முக்கிய நோக்கம். குறிப்பாக பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், கூலித் தொழிலாளிகள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர் வங்கிக் கடன் பெறுவதில் தயக்கம் காட்டக்கூடாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## எல்லையில் கூட்டுப் பாதுகாப்பு

### இந்தியா சீனா இடையே பேச்சு



புதுடில்லி, ஒக்.1
எல்லைப் பகுதியில் கூட்டு பாதுகாப்பு பணியை மேற்கொள்வது குறித்து இந்தியா, சீனா இடையே 4ஆவது கட்ட பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.
இந்திய எல்லைப் பகுதியில் நடைபெறும் சீன இராணுவத்தின் ஊடுருவல்களை அடுத்து இரு நாடுகளும் சேர்ந்து கூட்டாக பாதுகாப்பு பணியில் ஈடுபட முடிவு செய்துள்ளன. இது தொடர்பாக இருநாடுகளின் பிரதிநிதிகளும் ஏற்கெனவே 3 கட்ட பேச்சுகளை நடத்தியிருந்தனர். அதன் 4ஆவது கட்டமாக நேற்றுமுன்தினம் பெய்ஜிங்கில் மீண்டும் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.
எல்லையில் கூட்டு பாதுகாப்பு பற்றிய பேச்சுக்களில் இரு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள் கலந்து கொண்டனர். அப்போது எல்லைப்பகுதியில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.
இம்மாத இறுதியில் பிரதமர் மன்மோகன்சிங் சீனா பயணம் மேற்கொள்ள இருக்கிறார். அப்போது இருநாடுகளும் கூட்டாக எல்லை பாதுகாப்பு ரோந்து பணியில் ஈடுபடுவது சம்பந்தமான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

## கைதானார் லாலு



பாட்னா, ஒக்.1
மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்ததை அடுத்து கைது செய்யப்பட்டுள்ள லாலு பிரசாத் யாதவ் பிர்ஸா முண்டா சிறையில் அடைக்கப் பட்டார்.
1990 ஆம் ஆண்டு லாலு பிரசாத்முதலமைச்சராக இருந்த போது கால்நடை தீவனம் இறக்குமதியில் சுமார் 37 கோடியே 70 லட்சம் ரூபா ஊழல் நடைபெற்றது என்று தெரிவித்து லாலு பிரசாத் உட்பட 45 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது.
அந்த வழக்கில் பல்வேறு கட்ட விசாரணைகளுக்குப் பின்னர் ராஞ்சி சிபிஐ சிறப்பு நீதிமன்றம் நேற்று லாலு உள்பட 45 பேரும் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கியது. தண்டனை விவரங்கள் எதிர்வரும் 3ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ள நிலையில், லாலு பிரசாத் ராஞ்சியில் உள்ள பிர்ஸா முண்டா சிறையில் அடைக்கப்பட்டார்.
காணொளி காட்சி மூலம் ஒக்ரோபர் 3ஆம் திகதி நீதிமன்ற நடவடிக்கையில் லாலு பங்கேற்பார் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி நீக்கத்திற்கு எதிரான அவசரச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறாத நிலையில் இந்த தீர்ப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ற)

## பா.ஜ.கவில் இணைந்தார் பிரபல நடிகை மாளவிகா



புதுடில்லி, ஒக்.1
ரபல நடிகையான மாளவிகா பாரதிய ஜனதா கட்சியில் இணைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
தமிழில், ஆறு, ஜே.ஜே, ஆதி, ஜெயம்கொண்டான், டிஷ்யூம் உட்பட, தமிழ் மற்றும் கன்னட மொழிப் படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்தவர் நடிகை மாளவிகா. இவர், தற்போது தொலைக் காட்சி தொடர்களிலும் நடித்து வருகிறார்.
கடந்தாண்டு கர்நாடகாவில், தேவகவுடாவின் மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியில் சேர்ந்தார். கட்சியை வளர்க்க பாடுபட உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். இந்தநிலையில் அவர் தற்போது பா.ஜ.வில் இணைந்துள்ளார்..
இதுகுறித்து மாளவிகா தன் இணையதள பக்கத்தில், "நான் பா.ஜ.வில் சேர்ந்திருக்கிறேன். நரேந்திர மோடியின் சுயசரிதை புத்தகத்தை அண்மையில் படித்தேன். அவரது கருத்துக்கள் என்னை ஈர்த்தன. எனவே பா.ஜ.வில் இணைந்தேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பொதுநலவாய மநாடு தொடர்பில் நிலைப்பாடு என்ன?

### அரசியல் கட்சிகளிடம் கேட்கின்றார் ஞானதேசிகன்

கோவை, ஒக்.1
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளலாமா? என்று அரசியல் கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூறியுள்ளார்.
இலங்கையில் தேர்தல் நடைபெற்று நிலைமை மாறியுள்ள சுழ்நிலையில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது குறித்து தமிழக அரசியல் கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
கோவையில் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்திய மத்திய அரசு இன்னும் முடிவு செய்ய வில்லை. இலங்கையில் மாறியுள்ள தற்போதைய சுழ்நிலையில் பொதுநலவாய மாநாட்டில் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது குறித்து தமிழக அரசியல் கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.
சமூகவலை தளங்களில் கட்சியின் கருத்துகளை வெளிப்படுத்தி பரப்புரைகளை மேற்கொள்ள வசதியாக திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட பகுதிகளில் காங்கிரஸ் கட்சியினருக்கு சமூக வலைதள பயிற்சிகள் வழங்கப்படும்" என்று அவர் தெரிவித் தார். (ற)

உதயன் 01/10/2013 

# 50 மாணவர் சாவு

## கல்லூரிக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு நைஜீரியாவில் வெறியாட்டம்



போதிஸ்கும், ஒக்.1

கல்லூரிஒன்றினுள் புகுந்துதீவிர வாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 50க்கும் அதிகமான மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நைஜீரியாவில் யூப் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் நைஜீரிய நேரப்படி நேற்று நள்ளிரவு ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது. அந்தச் சமயம் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்தனர். கல்லூரிக்குள் நுழைத்த தீவிர வாதக் கும்பல் சரமாரியாக துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளது. அதனால் விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் சிதறி ஓடினர்.

துப்பாக்கிச் சூட்டில் 50க்கும் அதிகமான மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று கல்லூரி நிர்வாகம் கூறுகின்றது. எனினும் இதுவரை 26 பேரின் உடல்களே மீட்கப்பட்டுள்ளன.

தற்போது கல்லூரி வளாகம் நைஜீரிய இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் போகோ ஹரம் அமைப்பு தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ற)

## டுவீற்றரில் அல்-குவைதா

நியூயோர்க், ஒக்.1

சர்வதேச ரீதியில் தீவிரவாத அமைப்பு என்று தடை செய்யப்பட்டுள்ள அல்-குவைதா அமைப்பு சமூக வலைத்தளமான டுவீற்றரில் இணைந்துள்ளது.

அல்-குவைதா அமைப்பு தனது உறுப்பினர்களுக்காக செய்திகளை தெரிவிக்கவும், அறிக்கைகளை விடுக்கவும் பயன்படுத்தும் இணையத்தளம் ஷமுக் அல் இஸ்லாம். தற்போது இந்த இணையத்தளம் டுவீற்றரில் கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளது. ஆரம்பித்த ஓரிரு நாள்களில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அந்தக் கணக்கைப் பின்தொடர்கின்றனர்.

இவ்வாறான அமைப்புகள் சமூக வலைத் தளங்களை உபயோகிக்க ஆரம்பித்துள்ளமை, குறித்த அமைப்புகள் தமது கருத்துக்களை இளைஞர்கள் மத்தியில் இலகுவான பரப்ப ஏதுவாக அமைந்து விடும் என்று கூறப்படுகின்றது. (ற)

## நிபுணர்கள் உடன் தேவை

### அழைப்பு விடுகின்றது ஐ.நா.

நியூயோர்க், ஒக்.1

சிரியாவில் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு துணிச்சல் மிக்க நிபுணர்கள் உடன் தேவை என்று அழைப்பு விடுத்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

நெருக்கடியான சூழலில் பணிபுரியும் துணிச்சல் கொண்டவர்களும், உயிரைப் பொருட்படுத்தாத தியாக உணர்வு கொண்டவர்களும் உடனடியாக விண்ணப்பிக்க முடியும் என்றும் ஐ.நா. அறிவித்துள்ளது.

சிரியாவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள சமரசத் திட்டத்தின் படி, சிரிய அரசு வசமுள்ள இரசாயன ஆயுதங்கள் அடுத்த மாதம் முதல் கணக்கிடப்படவுள்ளது. அவைஅடுத்து ஆண்டு ஆரம்பத்தில் சர்வதேச கண்காணிப்பில் அழிக்கப்படவுள்ளன. அந்தப் பணிகளுக்காகவே துறைசார்ந்த நிபுணர்களுக்கு ஐ.நா. சபை அழைப்பு விடுத்துள்ளது. (ற)

" _ "



நெருக்கடியான சூழலில் பணிபுரியும் துணிச்சல் கொண்டவர்களும், உயிரைப் பொருட்படுத்தாத தியாக உணர்வு கொண்டவர்களும் உடனடியாக விண் ணப்பிக்க முடியும்.



## பதவி விலகும் இத்தாலி அமைச்சர்கள்

ரோம், ஒக்.1

இத்தாலியில் தொடரும் அரசியல் நெருக்கடிகளை அடுத்து அமைச்சர்கள் சிலர் தாம் பதவி விலக உள்ளதாக என்று அறிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனியின் கட்சியைச் சேர்ந்த 5 அமைச்சர்களே இவ்வாறு அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் தற்போதைய பிரதமருக்கும், முன்னாள் பிரதமரின் கட்சிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பெர்லுஸ்கோனி மீது சுமத்தப்பட்டுள்ள வரி தொடர்பான வழக்கு காரணமாக செனட் சபையிலிருந்து அவர் நீக்கப்படும் பட்சத்தில் அவரது கட்சி உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஏற்கனவே வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதேவேளை, இத்தாலியில் மீண்டும் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது. (ற)

## கிராமப் பெண்ணா மன்மோகன்?

### கிண்டலடிக்கின்றார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்



நியூயோர்க், ஒக்.1

தீவிரவாதத் தாக்குதல்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் இந்தியப் பிரதமர் பேசியுள்ளார். அதைப் பார்க்கும்போது எனக்கு வயதான கிராமத்துப் பெண்கள் தான் நினைவுக்கு வந்தனர் - என்று கிண்டலடித்துள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்.

நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க சில மணி நேரத்துக்கு முன்னர் தொலைக்காட்சிச் செய்தியாளர்களுடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தார் நவாஸ் ஷெரீப். அப்போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை மன்மோகன் சந்தித்து பேசிய விடயம்பற்றிப் பரஸ்பரம் பேசிக் கொண்டனர்.

அப்போது நவாஸ் செரீப், "மன்மோகன் சிங் பேச்சுக்களின் போது ஒபாமாவிடம் தீவிரவாதம் பற்றிக் கூறியது, எனக்கு கிராமத்து முதிய பெண்களின் புலம் பலைத்தான் நினைவு படுத்தியது" என்று சிரித்தபடி குறிப்பிட்டுள்ளார். அப்போது பாகிஸ்தானின் ஜியோ தொலைக்காட்சியின் செய்தியாளர் ஹமித் மிர், என்டிடிவி தொலைக் காட்சியின் செய்தியாளர் பர்க்காதத் உட்படப் பலர் இருந்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் பாகிஸ்தான் பிரதமருடனான சந்திப்பை இரத்துச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறி வரும் நிலையில் மன்மோகன் சிங் பற்றி பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கிண்டல் செய்தமை இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ற)

எதிர்ப்புகளையும் மீறி நவாஸை சந்தித்தார் மன்மோகன் - இந்தியச்செய்தி (6 ஆம் பக்கத்தில்)

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 42 பேர் உடல் சிதறிச் சாவு



இஸ்லாமாபாத், ஒக்.1

பாகிஸ்தானின் வடமேற்கு பிராந்தியத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 42 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

சந்தைக் கட்டட தொகுதியில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பில் கடைகள் மற்றும் வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன.

மத வழிபாட்டுத் தலமொன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 80 பேர் உயிரிழந்து ஒருவாரம் கடந்துள்ள நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தலிபான்களால் அடிக்கடி தாக்குதல் நடத்தப்படும் ஒரு பிரதான பகுதியாக இப்பிராந்தியம் மாறியுள்ளது. (ற)

## உகண்டா உஷார் நிலையில்

நைரோபி, ஒக்.1

கென்யாவில் வணிக வளாகத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து உகாண்டா பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

கென்யாவில் வணிக வளாகத்தில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்கு சோமாலியாவில் செயற்பட்டு வரும் அல் சஹாப் அமைப்பு பொறுப்பேற்றுள்ளநிலையில், அந்த அமைப்பு உகாண்டாவிலும் தாக்குதல் நடத்தக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவிற்கு இராணுவ வீரர்களை உகாண்டாவும் அனுப்பியுள்ளது. அதனால் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது உகண்டா. முக்கிய இடங்களில் சோதனைகள் நடத்தப்படுகின்றன. வணிக வளாகங்களுக்குள் நுழையும் கார்கள் தீவிர கண்காணிப்பின் பின்னரே அனுமதிக்கப்படுகின்றன.

உகண்டாவில் 2010ஆம்ஆண்டு நடத்தப்பட்ட இது போன்றதொரு தாக்குதலில் 77 பேர் உயிரிழந்தனர். (ற)

## தீவிரவாதத் தாக்குதல் குறித்து கவலை

### உலக நாடுகளின் உதவியைக் கோருகின்றது ஏமன்

நியூயோர்க், ஒக்.1

தீவிரவாதம் மற்றும் அகதிகள் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு உலக நாடுகள் உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது ஏமன்.

ஐ.நா. கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் அபுபெக்கர் அல்-கிர்பி இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

"ஏமனில் ஏழ்மை நிலை, வேலை வாய்ப்பின்மை, அடிப்படை வசதியின்மை காரணமாக தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. ஏமனில் மீண்டும் அல்-குவைதா அமைப்பின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

தலைதூக்கும் தீவிரவாதத்தை அடக்குவதற்கு சர்வதேச நாடுகள் உதவ வேண்டும் என்று கோரியுள்ளார் அவர்.

ஏமனில் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பசியால் தவித்து வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உலகின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி வழித்தடங்கள் ஏமனுக்கு அருகில் இருப்பதால் அமெரிக்கா மற்றும் பிற வளைகுடா நாடுகள் அந்த நாட்டில் அரசியல் ஸ்திரதன்மையை கொண்டு வர முனைப்பு காட்டுகின்றன. (ற)

## காரோட்டினால் கருப்பை பாதிக்கப்படும் - கதைகூறி மிரட்டுகின்றார் சவூதி மதகுரு

டாக்கா, ஒக்.1

கார் ஓட்டும் பெண்களுக்கு கருப்பை பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது என்று மிரட்டியுள்ளார் சவூதி அரேபிய மதகுரு ஒருவர்.

சவுதிப் பெண்களுக்கு வாகனம்ஓட்டும்உரிமையைவழங்கக் கோரும் புதிய பிரச்சார இயக்கம் தொடர்பாகப் கூறும் போதே மதகுரு ஷேக் சாலேஹ் அல் லொகால்டன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடும்போக்கு மதவாதியான சாலேஹ் அல் லொகால்டன், "காரோட்டுவதை வழக்கமாகக் கொண்டுள்ள பெண்களுக்கு, பல்வேறு குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகள் பிறக்கும் ஆபத்து உள்ளது. கணவர் காயமடைந்திருந்தாலோ அல்லது இக்கட்டான ஒரு சூழலில் சிக்கியிருந்தால் மட்டுமே அங்கு பெண்கள் காரோட்டலாம்." என்று தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபிய நாட்டில் பெண்கள் காரோட்டுவதற்கு அதிகாரபூர்வ தடையேதும் இல்லையென்றாலும், அங்கு பெண்கள் காரோட்ட அனுமதிக்கப்படுவதில்லை. தற்போது காரோட்டும் உரிமை பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்கிற புதிய பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்து பன்னிரெண்டாயிரம் பேர் இதுவரை கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சாரத்தை நடத்தும் இயக்கம் டுவீற்றர் சமூகவலைத் தளம் மூலமும் தனக்கு ஆதரவு திரட்ட முற்பட்டபோது தமது டுவீற்றர் கணக்குகள் சவுதியில் முடக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டுகின்ற னர்.

இந்தநிலையில் தமது அடக்குமுறைக்கு காரணம் கற்பிக்கும் வகையில் ஷேக் சாலேஹ் லொகால்டன் புதிய கதைகளை அவிழ்த்து விடுகின்றார் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ற)



சவூதி அரேபிய நாட்டில் பெண்கள் காரோட்டுவதற்கு அதிகாரபூர்வ தடையேதும் இல்லையென்றாலும், அங்கு பெண்கள் காரோட்ட அனுமதிக்கப்படுவதில்லை.

## வான் விற்பனைக்கு

253---- தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள ஹயஸ் வான்.

(32173) (6.4.3) தொடர்பு: 077 521 1702, 077 962 3745

## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதியில், மருதனார்மடம், வலி வடக்குப் பிரதேச சபையின் புதிய அலுவலகத்துக்கு முன்புறமாக வீட்டுடன் கூடிய காணியும், கந்தரோடை உப்புக்குளத்துக்குப் பக்கத்தில் 30 பரப்பு வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. **தொடர்பு:** (32172)(10.6.3)

**078 6326111, 0779710760**

## சுத்தமானதும், தூயதுமான நீரை பெறுவதற்கான ஒரே சாதனம்




தொ.இல: 021 222 5390

வட மாகாண ஏக முகவர்:
நாராயணா ஹாட்வெயார்ஸ் ரேடர்
இல: 92C, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

# கிராம அலுவலரின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துக

### பிரதேச செயலர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.1

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள கிராம அலுவலர் இடமாற்றத்தை உடன் நடைமுறைப்படுத்துமாறு பிரதேச செயலர்கள் அரச அதிபரைக் கோரி நிற்கின்றனர். யாழ். குடாநாட்டில் 72 கிராம அலுவலர்கள் இடமாற்றம் குறித்து பொதுநிர்வாக அமைச்சு நடவடிக்கை மேற்கொண்ட போது மாகாண சபை தேர்தலால் அது பிற்போடப்பட்டது. தற்போது மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த நிலையில் கிராம அலுவலர் அதாவது ஒரே சேவை நிலையத்தில் 10 முதல் 13 வருடங் களுக்கு மேல் கடமையாற்றிய கிராம அலுவலர்கள் தொடர்ந்தும் அதே இடத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இது இடமாற்றக் கொள்கைக்குமுரணாக இருப்பதால் 72 கிராம அலுவலர்களின் இடமாற்றத்தை நடைமுறைப் படுத்திமக்கள்சேவைக்கு உதவுமாறு பிரதேச செயலர்கள் அரச அதிபரைக்கேட்டுள்ளனர். (ந)

## அறை வாடகைக்கு

சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் அறை வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:
077 3200 727, 077 7412 713, 021 222 6660

## அறை வாடகைக்கு

பிரதான வீதி, நெல்லியடியில்
(சந்தைக்கு முன்பாக)
அறை வாடகைக்கு உண்டு.
(அரசாங்க உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது) (32160) (4.6.3)

தொடர்பு: 077 187 7225

**வீடு வாடகைக்கு** கிளிநொச்சிப் பட்டினத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். பணிபுரியும் ஆண்களோ, குடும்பமோ தங்க ஏற்றது.

(37641) (6.4.3) தொடர்பு: 077 275 7973

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ் வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2014 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன

கேள்வி இல: O&M/RM/JAF/VEHICLE SERVICE/2014

01. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ்வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2014 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக தகுதியான சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. எமது தலைமைக் காரியாலயத்தில் (11.09.2013) அன்று டெய்லி நியூஸ் ஆங்கிலப் பத்திரிகை விளம்பரத்திற்கமைவாக) மேற்கூறப்பட்ட சேவைக்காக பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
03. சேவை வழங்குநர்கள் கேள்வியுடன் தங்களது வியாபார பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதியினை (Business Registration Certificate) இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. விண்ணப்பப் படிவங்களை யாழ் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
05. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து 400 நாள்களுக்கு செல்லுபடியாகும்.
06. இக் கேள்வி அறிவித்தல் இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாகும்.
07. தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் முடிவு திகதி குறிப்பிடப்பட்டு, கேள்வி கோரல் சபை, பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிராந்திய முகாமையாளர் காரியால யத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கேள்விகள் அனைத்தும் 19.11.2013, 14.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றையதினமே உடனடியாகத் திறக்கப்படும்.

பிராந்திய காரியாலயம்,
தேசிய நீர்வழங்கல் வடிகால்மைப்புச் சபை,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்

**பிராந்திய முகாமையாளர் (யா),**
**யாழ்ப்பாணம்.** (c/12175)(6.3.11)

### உப அஞ்சல் அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ். அஞ்சல் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, தச்சன்தோப்பு ஆகிய உப அஞ்சல் அலுவலகங்களுக்கு உபஅஞ்சல் அதிபர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் தகைமை உள்ளவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் கபொத.சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாது மொழி கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல்வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## பகிரங்கக் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தினால் கீழ்வரும் பாடசாலைகளின் பழைய கட்டடங்களை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடங்களை 01.10.2013 ஆம் திகதியிலிருந்து 07.10.2013 வரை நேரில் பார்வையிட்டு ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனியாக விண்ணப்ப கட்டணமாக ருபா.100.00 ஐ அலுவலக நாள்களில் பி..ப 03.00 மணிக்கு முன் செலுத்தி கேள்விப் பத்திரத்தை யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்று அதனுடன் மீளளிக்ககூடிய வைப்புத் தொகையினை வலயக்கல்வி அலுவலக கணக்காளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வியுடன் இணைத்து 09.10.2013 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு **முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.**

தகைமையுடைய கேள்விதாரர் உரிய தொகையினை அலுவலகத்தில் செலுத்தி 14 நாள்களினுள் குறித்த வேலையை பாடசாலை செயற்பாட்டிற்கும் மாணவர்களிற்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருள்களை அகற்றுதல் வேண்டும்.

| பாடசாலையின் பெயர் | கட்டடத்தின் அளவு | மீளளிப்பு வைப்பு தொகை (ருபா) |
|---|---|---|
| 1.யா/ சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | (40'x54') , (30'x20') | 2500.00 |
| 2.யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் | (225'x25'), (25'x15'), (17'x37'), நீர்த்தாங்கியும் குடிநீர் மேடையும் | 20000.00 |
| 3.யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை | (42'x30') | 2500.00 |
| 4.யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி | (100'x21'), (25'x38'),(30'x25') | 2500.00 |
| 5.யா/ இந்து மகளிர் கல்லூரி | (40'x20'), (40'x20') | 2500.00 |
| 6.யா/ வேம்படி மகளிர் கல்லூரி | (78'x26') | 2500.00 |

எஸ்.உதயகுமார்,
தலைவர்,
கேள்விச் சபை
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம், (சி/12506)(5.6.3)




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருடம் வணிகமாணி/தொழில் நிர்வாகமாணி முதலாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் 2011 (பழைய பாடத்திட்டம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 01.10.2013 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 04.10.2013 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

**பதிவாளர்.** (சி/12507) (10,6,3)

## ஆசிரியர்களுக்கான வெற்றிடம்

GMATH

### வடமராட்சி, தென்மராட்சிக்கான

"GMATH Abacus" ஆசிரியர்களுக்கான வெற்றிடம்

4-13 வயது மாணவர்களுக்கு ஆங்கிலத்தினூடான மனக்கணித கற்கை நெறியை கற்பிப்பதற்கான ஆசிரியர் வெற்றிடம் இருப்பதால் ஆர்வமுடையோர் தங்கள் சுயவிவரக் கோவையினை 07.10.2013 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அ. சதீஸ்
கல்வத்தை, வதிரி, கரவெட்டி.

நேர்முகத்தேர்வுக்கான திகதி தங்களின் தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு T.P: 077 384 8004 (29540) (10,6,3)

## சாருகாயா நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (NCT (Civil)or Equivalent)
2. கட்டட மேற்பார்வையாளர் (யாழ்ப்பாணம்/கிளிநொச்சி) (A/L படித்த பயில விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்)
3. களஞ்சியப் பொறுப்பாளர் (A/L படித்த, கட்டடப்பொருள்கள் சம்பந்தமான அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
4. தச்சு வேலை செய்பவர்
5. வெல்டிங் வேலை செய்பவர்கள்
6. வர்ணம் பூசுபவர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரில் வரவும்.

(32169) (6.3.11) T.P: 077 712 0945, 021 205 3083

## கடை வாடகைக்கு

எமது சங்கத்திற்கு சொந்தமான பலாலி வீதி திருநெல்வேலிச்சந்தியில் அமைந்துள்ள களஞ்சியப் பாவனைக்கும் வியாபாரத்துக்கும் ஏற்றதுமான கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். வாடகைக்குப் பெறவிரும்புபவர்கள் தங்களால் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய முற்பணத் தொகையினையும், வாடகையையும் குறிப்பிட்டு காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் யாவும் சங்க நெறியாளர் குழுவில் பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகிறேன்.

கடையின் நீளம் 44 அடி x அகலம் 9.75 அடி

தொடர்பு: நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.021 222 2143

**விண்ணப்ப முடிவு திகதி:10.10.2013** (சி/12505)(4.6.3)

## சிறுவர் தின நிகழ்வு

சங்கானை, ஒக்.1
சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உள சமூக உத்தியோகத்தர் த.ரவிமோகனும், கௌரவ விருந்தினராக சங்கானை அரசினர் வைத்திய சாலை மருத்துவர் த.பிரகாசனும் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் ஓய்வுநிலைப்பணிப்பாளர் தி.சிவ தட்சணாமூர்த்தியும் கலந்து கொள்வர். (வ-29)

* * *

தென்மராட்சி, ஒக்.1
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு இன்று மு.ப. 11.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடை பெறும்.
கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் கலந்து கொள்வார். (வ-9)

* * *

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய சிறுவர் தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வ.சத்தியேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய விசேட கல்வி முதன்மை ஆசிரியர் வ.கனகரத்தினமும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்), செல்வி ஞா.குமாரசாமி ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

* * *

கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் நடத்தும் முதியோர் தின விழா சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்வார். (வ)

* * *

வலி.மேற்கு, சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிறுவர், முதியோர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மேற்படி செயலகத்தில் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் முதியோர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (வ-29)

* * *

நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் சிறுவர் தின விழா இன்று காலை 9 மணிக்கு நிலைய முன்பள்ளி முன்றலில் இடம் பெறும்.
நிலையத் தலைவர் ந.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா கலந்து கொள்வார். (வ-9)

# அதிபர்கள் திண்டாட்டம்

## மதிய உணவுக் கொடுப்பனவு வழங்காததால்

அச்சுவேலி, ஒக்.1
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு மதிய உணவுக்கான மரக்கறி மற்றும் சமையல் துணைப் பொருள்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை. இதனால் பாடசாலை அதிபர்கள் கடன் சுமையில் மதிய உணவை மாணவர்களுக்கு உரிய தர நிலையில் வழங்க முடியாமல் திண்டாடுகின்றனர்.
பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுக்கான அரிசி, பருப்பு, எண்ணெய் முதலிய பொருள்கள் வழங்கப்படுவதோடு பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு நாளைக்கு தலா ரூபா 2.50 வீதம் பணக் கொடுப்பனவும் வழங் கப்படுகின்றது.
இரண்டரை ரூபா கொடுப்பனவைக் கொண்டே மதிய உணவு சமை யலுக்கு பயன்படுத்தும் மரக் கறிவகை, மிளகாய்த் தூள் மற்றும் துணைச் சாதனங்களும் விறகும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

**கடந்த மே மாதத்தில் இருந்து பாடசாலை அதிபர்களுக்குரிய உணவுக்கான பணக் கொடுப்பனவுகள் வழங்கப் படவில்லை**

கடந்த மே மாதத்தில் இருந்து பாடசாலை அதிபர்களுக்குரிய உணவுக்கான பணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. இதனால் பாடசாலை அதிபர்கள் எதிர்பாராத நிதி நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதோடு மதிய உணவை உரிய தர நிலையில் வழங்க முடியாத நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இரண்டாம் தவணைக் காலம் மூன்று மாதத்துக்கும் மூன்றாம் தவணையில் செப்ரெம்பர் மாதத்துக்கும் மொத்தம் நான்கு மாதங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை. பணம் வரும் என்ற எதிர்பார்ப்பில் பாடசாலை அதிபர்கள் காத்திருக்கின்றனர்.
பிரபல பாடசாலைகளுக்கு லட்சக்கணக்கான ரூபாவிலும் சாதாரண பாடசாலைகளுக்கு பல ஆயிரக்கணக்கான தொகையிலும் நிலுவை கிடைக்க வேண்டியிருப்பதால் பாடசாலை அதிபர்கள் எதிர்பாராத நிதி நெருக்கடிக்கும் கடன் சுமைக்கும் உள்ளாகி இருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)



## பயணிக்க முடியாத நிலையில் பருத்தித்துறையில் இரு வீதிகள்

மந்திகை, ஒக்.1
பருத்தித்துறை பிரதேச சபையினரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட குரும்பைகட்டி ஞானவைரவர் வீதி மற்றும் மந்திகை கண்ணகை அம்மன் வீதி என்பன குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.
அதிகமானோர் பயணம் செய்யும் குறித்த வீதிகள் இரண்டும் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் உள்ளன. இந்த வீதிகளில் ஒன்றான ஞானவைரவர் வீதி சுமார் ஒரு வருடத்துக்கு திருத்த வேலைகளுக்காக கற்கள் பறிக்கப்பட்டிருந்த நிலையில் பின்னர் அவை திருப்பி ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.
குரும்பைகட்டி ஞானவைரவர் வீதி சுமார் 1.5 கிலோமீற்றர் தூரம் உடையது.
மேற்குறிப்பிட்ட இரு வீதிகளையும் புனரமைத்து பொது மக்களின் போக்குவரத்துத் தேவையை நிவர்த்தி செய்ய பருத்தித்துறை பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-122)

# மூத்த பிரஜைகள் கௌரவிப்பு



சங்கானை, ஒக்.1
சங்கானை மேற்கு.ஜே/49 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கும்மேற்பட்ட முதியோரைக் கௌரவித்து சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
மூத்த பிரஜைகள் சங்கத் தலைவர் சு.சுந்தரலிங்கம் மற்றும் பொருளாளர் செ.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.
அவர்களின் செயற்பாட்டை இப்பிரிவிலுள்ள ஏனைய மூத்த பிரஜைகள் சங்க நிர்வாகிகளும் மேற்கொண்டு அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என நிகழ்வில் கலந்துகொண்ட சமூகசேவை அலுவலர் க.அருந்தவராசா தெரிவித்தார். (வ-29)

## உடுப்பிட்டிப் பகுதியை அபிவிருத்தி செய்யாவிடில் போராட்டம் நடத்துவேன்

**பிரதேச சபை உறுப்பினர் 'போர்க்கொடி'**

வடமராட்சி, ஒக். 1
உடுப்பிட்டிப் பகுதியை அபிவிருத்தி செய்ய கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை முன்வர வேண்டும். இல்லையேல் அந்தப் பகுதி மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் செய்வேன் என்று ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பொ.குகதாஸ் எச்சரிக்கை விடுத்தார்.
கரவெட்டி, வடமராட்சி தெற்கு , மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை தலைவர் பொ. வியாகேசு தலைமையில் நடைபெற்றபோதே குறிப்பிட்ட உறுப்பினர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.
இது தொடர்பாக சபையில் அவர் ஆற்றிய உரையாடல்;
உடுப்பிட்டிப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அங்குள்ள சந்தை, ஆயுள்வேத வைத்திய சாலைகள் என்பன முக்கியமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். அந்தப் பகுதி அபிவிருத்தி செய்யப்படாதது வேதனைக்குரிய விடயம். உடுப்பிட்டி என்ற பெயரில் தொகுதி இருக்கின்றது. அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கிராமங்களை நகரங்களாக அபிவிருத்தி செய்ய

**பின் தங்கிய பகுதிகள் சமச்சீராக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இல்லையேல் மக்களை அணி திரட்டிப் போராடுவேன்**



வேண்டும். பின் தங்கிய பகுதிகள் சமச்சீராக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.
இல்லையேல் மக்களை அணி திரட்டிப் போராடுவேன் எனத் தெரிவித்தார் குகதாஸ். (ஓ-8)

# பாடசாலைகளுக்கு பசும்பால் விநியோகம்

அச்சுவேலி,ஒக்.1
யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு பசும்பால் விநியோகம் நடைபெறுகின்றது. செப்ரெம்பர் மூன்றாம் வாரத்தில் இருந்து "மில்கோ" நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பசுப்பால் வழங்



கப்படுகின்றது.
ஒவ்வொரு பால் பைக்கற்றும் 900மில்லிலீற்றர்அளவுகொண்டதாக மாணவர் தொகைக்கு அமைய கல்வி வலயங்களில் வைத்து அதிபர்களிடம் கையளிக்கப்படுகின்றது.
ஒரு மாணவனுக்கு 150 மில்லி லீற்றர் பால் வழங்கப்படல் வேண்டும். 900 மில்லி அளவு கொண்ட ஒரு பால் ஆறு மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது.
குளிரூட்டிப் பயன்படுத்தலாம் என பால் பைக்கற்றில் பொறிக்கப்பட்டுள்ள போதிலும் ஆரம்பப் 'பாடசாலைகளில் பால் காய்ச்சப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது. இடைநிலை வகுப்புகளில் நேரடியாக வழங்கப்படுகிறது.
900 எம்.எல்.அளவு கொண்ட பால் பைக்கற்றுக்கள் ஒவ்வொன்றும் நூறு ரூபாய்க்கு மில்கோ நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது.
இந்தத் தொகை அரசால் வழங்கப்படும் தொகையிலும் கூடிய தொகையாக இருப்பதால் மேலதிக நிதியைச் செலுத்துவதில் கல்வித் திணைக்களம் எதிர்பாராத நிதி நெருக்கடியை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. (வ-11)

# குழந்தைகளுக்கான பாதுகாப்பு ஓய்வூதியம்

வலி.வடக்கு.ஒக்.1
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையுடன் இணைந்து குழந்தைகளுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று பாதுகாப்பு (ஆரக்ஸாவ) என்ற பெயரில் அறிமுகம் செய்து வைக்கப் படவுள்ளது.
குறிப்பிட்ட பாதுகாப்புத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில்இணைந்து கொண்டவர்களுக்கான சம்பிரதாயபூர்வமாக கணக்குகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம்செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்கலந்துகொண்டு கணக்குகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
இந்தத் திட்டத்தில் பிள்ளைகளுக்கு 18 வயது வரை ஓய்வூதியத்துக்கான கொடுப்பனவுகளை பெற்றோர் வழங்கி வரும் சந்தர்ப்பத்தில் அவர்கள் 60 வயதைப் பூர்த்தி செய்ததும் குறிப்பிட்ட தொகையை கட்டப்பட்ட பணத்துக்கு ஏற்ப ஒய்வூதியமாகப்பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சமூக பாதுகாப்புச்சபையின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பி.பிரதீபன் தெரிவித்தார். (வ-86)

**இந்தத் திட்டத்தில் பிள்ளைகளுக்கு 18 வயது வரை ஓய்வூதியத்துக்கான கொடுப்பனவுகளை பெற் றோர் வழங்கி வரும் சந்தர்ப்பத்தில் அவர் கள் 60 வயதைப் பூர்த்தி செய்ததும் குறிப்பிட்ட தொகையை கட்டப்பட்ட பணத்துக்கு ஏற்ப ஒய்வூதியமாகப் பெற்றுக் கொள்ள முடியும்**



## திடீரென எகிறியது அரிசி விலை

வடமராட்சி, ஒக்.1
யாழ்.குடாநாட்டில் நாட்டரிசி, புளி ஆகியவற்றின் விலைகள் திடீரென எகிறியுள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
முன்னைய விலையை விட நாட்டரிசியின் விலை கிலோ 20 ரூபாவால் அதிகரித்துள்ளது. எனினும் சம்பா அரிசியின் விலையில் பெரிதாக மாற்றங்கள் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகளுக்கு முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நெல்லின் விலை உயர்ந்துள்ளதாலேயே நாட்டரிசியின் விலை அதிகரித்துள்ளது.
இதேவேளை, கிலோ 95 ரூபாவாக விற்கப்பட்டு வந்த புளி தற்போது 180 ரூபாவாக அதிகரித்துள்ளது. புளியின் சீசன் முடிவுற்றதாலேயே அந்த விலை உயர்வு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (வ-8)

# கிழக்கு மாகாண சபை மீது கடும் அதிருப்தியில் மக்கள்

## எதிர்பார்ப்புகளுக்கு பதில் ஏமாற்றம்

கிழக்கு மாகாண சபையின் தற்போதைய அரசு பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய செயல்பாடுகள் இல்லை என்பதை சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒப்புக்கொள்கின்றனர். முன்னைய ஆட்சியுடன் ஒப்பிடுகையில் தற்போதைய ஆட்சியில் ஒருவித தேக்கநிலை தென்படுகிறது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

பொதுமக்களிடையே காணப்படும் இத்தகைய கருத்துத் தொடர்பாக பிபிசி தமிழோசை, மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டது.

பொதுவாக விமர்சனங்கள் உள்ளதை ஆளும் தரப்பை சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஒப்புக்கொண்டார்.

மாகாணசபை அரசின் மூலமாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளோ, புதிய சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் கூறினார்.

> சிற்றூழியர் நியமனம் தொடக்கம் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் வரை தமிழர்களுக்கு அமைச்சர்களினால் பாரபட்சம் காட்டப்படுகிறது.

கிழக்கு மாகாண அமைச்சரவையில் நான்கு முஸ்லிம்களும் சிங்களர் ஒருவரும் அமைச்சர்களாக பதவி வகிக்கின்றனர். தமிழர்கள் எவரும் அமைச்சராக இல்லை.

சிற்றூழியர் நியமனம் தொடக்கம் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் வரை தமிழர்களுக்கு அமைச்சர்களினால் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி ஆட்சி அமைப்பதற்கு பெரும்பான்மை தேவைப்பட்டபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்கியது. அந்தக் கட்சியைச் சேர்ந்த இருவர் அமைச்சர்களாகவும் தற்போது பதவி வகிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸ் பங்காளிக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரான ரம்ழான் அன்வர் தற்போதைய ஆட்சி பொம்மை ஆட்சி என்று கூறினார்.

முஸ்லிம் ஒருவர் தற்போது முதலமைச்சர் பதவியிலிருந்தும், காணிப் பிரச்சினை உட்பட சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற முடியாத நிலையில் அந்த பதவியிலும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் கிழக்கு வாழ் மூவினங்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய தமது செயல்பாடுகள் உள்ளன என்று மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை கூறினார்.

தனது அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளில் இனரீதியான பாகுபாடுகள் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## விடுதலை புலிகளின் வீடியோ படங்களை வைத்திருந்த நபர் கைது



வாழைச்சேனை, கல்குடா பொலிஸ் பிரிவில் விடுதலைப் புலிகளின் வீடியோ படங்களை தனது கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாழைச்சேனை, பாசிக்குடா கடற்கரை பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை மாலை குறுத்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

பொலிஸாரைக் கண்டு ஓடிய இளைஞனை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதுடன், கையடக்கத் தொலைபேசியையும் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது விடுதலைப் புலிகளின் வீடியோக் காட்சிகளை இளைஞன் தனது கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை, பேத்தாழை விஷ்ணு கோவில் வீதியைச் சேர்ந்த தவராசா ஜேசுதாசன் (வயது-22) என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ச)



மட்டக்களப்பு அமிர்தகழி கப்பலேந்தி மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை வரவேற்கப்படுவதைக் காணலாம். (ச)

## தமிழ்மொழி மூல பயிற்சி ஆரம்பம்

மட்டக்களப்பில் பொலிஸாருக்கு தமிழ் மொழி டிப்ளோமா பாட பயிற்சி நெறி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் தமிழ் மொழிமூல பாடநெறி மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பாடநெறி மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வி.இந்திரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

> தமிழ் மொழி மூல பயிற்சி பாட நெறியில் 108 சிங்கள பொலிஸார் கலந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேவின் சில்வா, கல்லடி பொலிஸ் பயிற்சி கல்லூரியின் பொறுப்பதிகாரி ஐ.பி. தினேஸ் குமாரசிங்க, தமிழ் மூல டிப்ளோமா நெறிக் கான பொலிஸ் பொறுப்பதி காரி ஐ.பி.பேரின்பராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் தமிழ் மொழி மூல பயிற்சி பாடநெறியில் 108 சிங்கள பொலிஸார் கலந்து பயிற்சி பெற்று வருகின்றனர். (ச)

## 9 கிளைமோர் குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் ஒன்பது கிளை மோர் குண்டுகள் மீட்கப்பட்டு செயல் இழக்கச் செய்யப்பட்டன என்று ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் மணிபுரம் கிராமத்திலுள்ள ஒருவரின் காணியை டோஸர் கொண்டு சுத்தம் செய்தபோது அதிசக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டுகள் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.



ஒவ்வொரு குண்டுகளும் பத்து கிலோ கிராமுக்கு அதிகமான எடையைக் கொண்டவையாகக் காணப்பட்டன.

அந்தக் குண்டுகள் இராணுவத்தின் குண்டு செயல் இழக்கும் குழுவினரின் உதவியுடன் அந்த இடத்திலயே செயலிழக்கச் செய்யப்பட்டன என்று ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## கூட்டமைப்பு முஸ்லிம் மக்களை அரவணைத்துச் செல்ல வேண்டும்

### முஸ்லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு வேண்டுகோள்

வட மாகாணத்தின் ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வட மாகாண முஸ்லிம்களையும் அரவணைத்து செல்லவேண்டும். அப்போதுதான் சகவாழ்வும் சகோதரத்துவமும் ஏற்படும் என்று பிரிட்டனிலுள்ள ஸ்ரீலங்கா முஸ் லிம் புலம்பெயர்ந்தோர் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியை ஈட்டியுள்ளது. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் வடமாகாணத் தமிழ் மக்களின் ஒற்றுமை பலப்படுத்தப்பட்டு அதன் மூலம் சரித்திர வெற்றி பெறப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாண சபை வட மாகாணத்தில் தமிழ் மக்களின் நலனில் காட்டும் அக்கறையை, ஆதரவும் வடமாகாண முஸ்லிம்கள் மீதும் காட்ட வேண்டும். சகோதரத் துவமும், இணக்கப்பாடும் ஏற்படுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாடுபட வேண்டும்.

வடமாகாணத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள முதலமைச்சர் இவ்வாறான விடயங்களில் கூடிய அக்கறை காட்டுவார் என்று நினைக்கின்றோம் என்றுள்ளது. (ச)

## சிசுவின் சடலம் மீட்பு



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொண்டையன் கேணி முருகன் கோயில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குழந்தை ஒன்றின் சடலத்தை ஞாயிற்றுக் கிழமை வாழைச்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சடலம் தலையும், மார்புப் பகுதியும் மாத்திரம் உள்ள நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு தனது வீட்டுக்கு முன்பாக கைக்குழந்தை ஒன்றின் சடலத்தை நாய் உண்பதைக் கண்ட பெண் ஒருவர், இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். அதனையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலத்தை பார்வையிட்ட வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எம்.பி.எம். ஹுஸைன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தக் குழந்தை பிறந்தவுடன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## முதுகு வலிக்கு டோன் சிகிச்சை



இலவச கண் சிகிச்சை மற்றும் முதுகுவலி, மூட்டு வலிக்கான டோன் சிகிச்சை முகாம் ஞாயிற்றுக்கிழமை மூதூர் மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

மூதூர் இக்பால் சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த முகாமில் 300 இற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

முதுகு வலி மற்றும் மூட்டு வலிக்கு ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட டோன் சிகிச்சை மூதூரில் அதிகமானோருக்கு முதன் முறையாக மேற்கொள் ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கையின் உள் விவகாரத்தில் பிரிட்டன், கனடா மூக்கு நுழைப்பு

## அமைச்சர் பீரிஸ் காட்டம்



பொதுநலவாய நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களின் கூட்டத்தை பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் இலங்கையின் உள் விவகாரம் தொடர்பில் தமது நிலைப் பாடுகளை தெரிவிக்கும் மேடையாக மாற்றி கொண்டமை கவலைக்குரிய விடயம் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இலங்கை வெளி விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நியூயோர்க்கில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களின் கூட்டத்தில் பிரிட்டனும் கனடாவும் பொது நலவாய அமைப்பின் இணக்கப்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் மீறி செயற்பட்டன.

இந்த நாடுகளின் பிரதிநிதிகள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் இலங்கை அரசு நிரந்தரமாக செயற்படுவது அவசியம் என கூட்டத்தின்போது தொடர்ந்தும் கோரிக்கை விடுத்தமை முழுமையான அநீதியாகும்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்த உறுப்பு நாடுகள் எடுத் துள்ள தீர்மானத்தை பிரிட்டன் ஒரு பிரச்சினையாக எடுத்து கொண்டமை இலங்கையின் கவலைக்குக் காரணமாகியுள் ளது.

இலங்கை தொடர்ந்தும் பொதுநல வாயத்தின் சம்பிரதாயம் மற்றும் பெறுமதிகளின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறது. இதனால் சகல உறுப்பு நாடுகளையும் சமமாக நடத்த வேண்டியது அத்தியவசியமா னது.

முன்பு ஒருபோதும் நடந்திராத வகையில் பொதுநலவாய அமைப்பின் கொள்கைளை மீறி, அதற்கு முரணான வகையில் அமைப்பிற்குள் இலங்கைக்கு தண்டனை வழங்குவதற்காக கனேடிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சியானது பொருத்தமற்றதும் தகுதியானதும் அல்ல.

அத்துடன் இந்த முயற்சி பொதுநலவாய அமைச்சர்களின் செயற்பாட்டுக் குழுவின் பொது இணக்கத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறு பொது நல வாய அமைப்பை அரசியல் மயப்படுத் தும் முயற்சிகள் கண்டிக்கப்படவேண்டும்" - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனவாத அடிப்படையிலான தேர்தல் முடிவு ஆபத்தானது

## ஜெஹான் பெரேரா எச்சரிக்கை

மாகாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இனப் பிரிவினை வாதத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் டாக்டர் ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

"மாகாணசபைத் தேர்தல் நடை பெற்ற மூன்று மாகாணங்களிலும் தேசியத்தை முதன்மைக் கருப்பொருளாகக் கொண்டு பிரசாரம் செய்யப்பட்டது. வடக்கில் அரசுக்கு எதிராக 80 வீதமான வாக்குகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில், வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அரசுக்கு ஆதரவாக 60 இற்கும் மேற்பட்ட வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

இனவாத அடிப்படையிலான தேர்தல் முடிவுகள் ஆபத்தான நிலைமையாகவே கருதப்பட வேண்டும். தேர்தல் முடிவுகள் தேசிய நல்லிணக்கத்தை மேலும் மோசமான நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது. உள்ளக ரீதியாக பிளவடைந்த சமூகங்களின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தையோ, நாட்டின் சுபீட்சத்தையோ உறுதிப்படுத்த முடியாது.

தெற்கில் எதிர்க்கட்சிகளின் பலவீனம் அரசுக்குப் பெரும் பலமாக அமைந்துள்ளது. சுயாட்சி அதிகாரம், தேசிய ஐக்கியம் ஆகிய இரண்டு முக்கிய காரணிகளையும் சமநிலைப்படுத்தி பிரதான இன சமூகங்களுக்கு இடையில் பரஸ்பர நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காண முடியும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல்களின் பின்னர் மோதல்கள் அதிகரிப்பு

## கபே அமைப்பு கவலை



தேர்தலுக்கு பின்னரான காலப் பகுதியில் ஒரே கட்சியை சேர்ந்த ஆதரவாளர்களுக்கு இடையிலான மோதல்கள் அதிகரித்துள்ளன என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் மாவட்டத்திலேயே இத்தகைய சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன என கபே எனப்படும் சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தின் நிக்க வரெட்டிய பகுதியிலேயே தேர்தலுக்கு பின்னரான வன்முறைகள் அதிகம் இடம்பெற்றுள்ளது என்றும் கபே அமைப்பு குறிப்பிடுகின்றது.

சொத்துக்களுக்கு மற்றும் வாகனங்களுக்கு சேதமேற்படுத்திய சம்பவங்களும் இதில் அடங்குகின்றன. தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் வவுனியா மற்றும் வலப்பனை போன்ற பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. மன்னாரில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் இரண்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்றும் கபே தெரிவித்துள்ளது.

இதேவேளை, தமது அமைப்பிற்கு தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற 9 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஒரே கட்சியை சேர்ந்த ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இந்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன எனவும், தேர்தல் இடம்பெற்ற பகுதிகளில் தற்போது அமைதியான சூழ்நிலை காணப்படுகிறது எனவும் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தேர்தலுக்கு பின்னரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 16 இற்கும் அதிக சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆராய்ச்சி குறிப்பிட்டுள்ளார்.

விருப்பு வாக்குகள் தொடர்பிலேயே மோதல்கள் இடம்பெற்றுள்ளன. தேர்தல் காலப் பகுதியைப் போன்று தேர்தலுக்கு பின்னரான காலப் பகுதியிலும் குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# கடுகதி ரயிலில் பயணித்த கொக்குவில் இளைஞர் சாவு

கொழும்பு கோட்டையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் பயணித்த இளைஞர் ஒருவர், அநுராதபுரம் புதிய ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள மல்வத்து ஓயா கருத்த பாலத்தில் மோதி உயிரிழந் துள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதி யைச் சேர்ந்த 20 வயதான இளைஞனே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்றுமுன்தினமிரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரயிலின் மிதிபலகையில் பயணம் செய்தபோது குறித்த இளைஞன் பாலத்தில் மோதியமை தெரியவந்துள்ளது.

# விபத்துகளில் இருவர் சாவு

மொரட்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதிய காலி வீதி, கொரலவெல்ல, கிரமதான மாவத்தைக்கருகில் மொரட்டுவையிலிருந்து பாணந்துறை நோக்கி பயணித்த வான் ஒன்று பாதசாரியின் உயிரைப் பறித்துள்ளது.

வான் மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த காயங்களுக்குள்ளான பாதசாரி பாணந்துறை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர், கிரமதான, கொரலவெல்ல, மொரடுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஷிரந்த பெர்னாண்டோ என அடையாளம் காணப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கிரிந்திவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரதவான, யக்கல வீதி யில் மஹகமசேகர பாடசாலைக்கு திரும்பும் வழியில் யக்கலையிலிருந்து ரதவானவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்தார்.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் கம்பஹா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிள் ஓட்டியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 35 வயது நிரம்பிய ரணசிங்க ஆராய்ச்சிலாகே திலின ரண சிங்க என இனங்காணப்பட்டுள்ளார்.

# பண்டாரநாயக்க கொள்கையை மறந்துவிட்டனர் சு.கவில் சிலர்

## சந்திரிகா கவலை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அதன் ஸ்தாபக தலைவர் எஸ்.டப்ளியூ.ஆர்.டி பண்டாரநாயக்கவால் பலம் கிடைத்தது எனவும் அதனை சிலர் தற்போது மறந்து விட்டனர் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ திஹாரிய பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு நோக்கத்தை ஏற்படுத்தியவர் பண்டார நாயக்க. அவர் அந்த நோக்கங்களை எங்களுக்கும் கற்றுக்கொடுத்தார்.

சுதந்திரக்கட்சிக்குள் பல தரப்பினரின் கொள்கைகள் புகுத்தப்பட்டுள்ளன. பண்டார நாயக்கவின் கொள்கைகள் மறக்கப்பட்டுள்ளன - என்றார்.

# இன்றுடன் விடைபெறும் தந்திச்சேவை

நாடளாவிய ரீதியிலுள்ள சகல தபால் காரியாலயங்களிலும் இருந்தும் தந்திச் சேவை இன்றுடன் நிறுத்தப்படும் என்றும் தபால் மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்தார்.

இந்த சேவையை இடைநிறுத்துவதற்கு தபால் திணைக்களமும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனமும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் எந்தவொரு தபால் காரியாலங்களிலும் 'தந்தி' இனிமேல் பொறுப்பேற்கப்படமாட்டாது. இலங்கையிலிருந்து தந்திச்சேவையை முழுமை யாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது

# வெலிக்கடை மோதல் குறித்து 17 பரிந்துரைகள் முன்வைப்பு



கடந்த வருடம் நவம்பர் மாதம் வெலிக்கடை சிறைச் சாலையில் கைதிகளுக்கும் பாதுகாப்பு பிரிவினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின் போது 27 கைதிகள் உயிரிழந்த அதேவேளை, படையினர் உட்பட 40 பேர் காயமடைந்தனர். வெலிக்கடைச் சிறைச்சாலை மோதல் சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த் தது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு பல சந்தர்ப்பங்களில் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விசேட குழு சிறைச் சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்ரசிறி கஜதீரவிடம் அறிக்கை ஒன்றை ஒப்படைத்துள்ளது. இந்த அறிக்கையில் புதிய பரிந் துரைகள் 17 முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர் வாழ்வு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் கையளிக்கப்படவுள்ளது.

# நிராகரிக்கப்பட்ட வாக்குகள் விசாரணை நடத்தப்படும்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பிலான காரணங்களைக் கண்டறிய விசாரணைகளை நடத்த தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தீர்மானித்துள்ளது.

தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகள் அதிகளவில் நிராகரிக்கப்படுவதை காணக் கூடியதாக இருக்கின்றது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வாக்காளர்கள் தாம் வேண்டுமென்றே வாக்குகளை நிராகரிக்கும் படியாக அளித்திருந்தால், அதற்கான காரணங்களை கண்டறிய வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

அதேவேளை, தேர்தலில் வாக்களிப்பதைத் தவிர்க்கும் நபர்களுக்கு வெளிநாடுகளில் அபராதம் விதிப்பது போல் இலங்கையிலும் அதனை அமுல் படுத்த வேண்டும் என்ற யோசனையை தேர்தல் அதிகாரிகளிடம் முன் வைக்க உள்ளதாகவும் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# மாணிக்கக்கல் திருடியவர் கைது

வெளிநாட்டு பிரஜையிடம் 200 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய மாணிக்கக்கல்லை திருடியதாகக் கூறப்படும் ஒருவர் பம்பலப்பிட்டியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேருவளை பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடும் பிரான்ஸ் வர்த்தகர் ஒருவரிடமிருந்த மாணிக்கக்கல்லை, மற்றொருவருக்கு விற்பனை செய்வதற்காக எடுத்துச்சென்ற சந்தர்ப்பத்தில், அது காணாமற்போனதாக சந்தேகநபர் தெரிவித்தார் என பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த வெளிநாட்டு பிரஜையும், கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரும் நீண்டகாலமாக மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# கல்லூரி அதிபர் சடலமாக மீட்பு

நீர்கொழும்பு, சென். மேரிஸ் கல்லூரி அதிபர் சட லமாக மீட்கப்பட்டுள்ளார். பாடசாலையின் மலசலக் கூடத்தி லிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பைச் சேர்ந்த மெக்செல் பெர்னாண்டோ (வயது - 60) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது உடலில் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர், எதிர்வரும் நவம்பர் மாதம் ஓய்வுபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கன்னைக் கட்டி நிற்க முயலாதீர் வடமாகாண சபை உறுப்பினரே...!

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலும், அதன் பெறுபேறுகளும் வடக்கு வாழ் மக்களால் மட்டுமன்றி, கிழக்கு வாழ் மக்களால் மட்டுமன்றி, அனைத்துலகத்தில் வாழும் ஈழத் தமிழ் மக்களால் மட்டுமன்றி-

தமிழகத்தில் வாழும் மக்களாலும், அவர்களின் அரசியல் தலைவர்களாலும், இந்திய மத்திய அரசாலும்-

அனைத்துலக நாடுகள் மிகப் பலவற்றாலும் மிக ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புகளுடனும் நோக்கப்பட்ட ஒன்றாகும்.

அரசு தனது அதிகார, மற்றும் சலுகைகள் தளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெரும் அளவில் வடக்குத் தேர்தலில் பயன்படுத்தி வாக்குகளைத் திரட்ட முயன்ற போதிலும், அது விரும்பிய அளவுக்கு, எதிர்பார்த்த அளவுக்கு வாக்குகளை ஈட்டிக்கொள்ள இயலவில்லை.

வடக்கு மாகாண வாக்காளர்கள் உணர்வு பூர்வமாகவும் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அதனை அமோக வெற்றி பெறவைத்தனர்.

மாகாண சபையின் மொத்தம் உள்ள 38 ஆசனங்களில் முப்பதினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்காளர்கள் வழங்கி உள்ளனர். இந்தப் பேருண்மையை உணர முடியாதவர்களாக, தமக்குத் தனிப்பட்ட சார்பிலேயே வாக்குகள் கிடைத்ததாகத் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு, அமைச்சர் பதவிகளுக்கு "அடிபிடிப்படுகிறார்"கள் சிலர். வாக்காளர்கள் ஏளனம் செய்யும் அளவுக்கு, இல்லாத பொல்லாத வகைகளில் தலைமைத்துவத்தின் ஆதரவைப் பெற, நான் முந்தி நீ பிந்தி என்று முண்டி அடிக்கிறார்கள். இது "தமிழ்ச் சாதிக்கே" பெரும் இழுக்கு!

தமக்கு வாக்களித்த மக்களுக்கு, உறுப்பினராகப் பணியாற்றிச் சேவை செய்வதனை பின்தள்ளிவிட்டு, அதிகாரப் பதவியான அமைச்சர் நியமனம் வேண்டும் என்று பலரும் பேராசைப்படுவது, தத்தமக்குள் போட்டா போட்டி போடுவது எந்த வகையிலும் ஏற்புடைத்தல்ல.

முதலமைச்சர் பதவிக்கு மிகப் பொருத்தமான ஒருவர்- முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மிகப் பெரும்பான்மையுடன் ஒரு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பத்தைந்து (1,32,255) வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

அவருடன் சேர்ந்து மக்கள் விரும்பும் நலத்திட்டங்களை நிறைவேற்றக் கூடிய அமைச்சரவை தேவை.

முதலமைச்சரே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதானிகளுடன் கலந்தாலோசித்து தகுதி வாய்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைச்சரவையை நியமிக்க வகை செய்யப்பட வேண்டும்.

தேர்தலில் வெற்றி பெற்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர் எவரும் தமது சொந்தச் செல்வாக்கில் வென்றவர்கள் அல்லர். நடைபெற்றது தொகுதி, பகுதி, கிராம வாரியான தேர்தல் அல்ல. தமது சொந்தச் செல்வாக்கினால் வென்றார்கள் என்று எந்த ஓர் உறுப்பினரும் உரிமை கோரமுடியாது; கோரக் கூடாது.

அவ்வாறிருக்க, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நான்கு அமைச்சர்கள் பதவிக்குத் தகைமை யானவர்கள் தெரிவுசெய்யப்படாமை பெரும்வெட்கத்துக்கு உரியதாகும்.

தமிழர்கள் எப்போதுமே எந்த விடயத்திலும், எந்த விவகாரத்திலும் இலகுவில் ஒன்றுசேர மாட்டார்கள். கன்னை பிரிந்தே நிற்பார்கள். அதனை நன்கு-விசாலமாகவும் விரி வாகவும்- அறிந்து வைத்துக் கொண்டே, சிங்கள அரசியல் தலைவர்களும், அவர்களின் அரசுகளும் கடந்த அறுபத் தைந்து வருடங்களாக தமிழ் மக்களுக்கு சேர வேண்டிய உரிமைகளை மிகத் துணிவுடன் கபளீகரம் செய்தார்கள்; இப்போதும் தொடர்கிறார்கள்.

முதலமைச்சராகச் செயற்படுவதற்கு முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு வடக்கு மக்கள்-வாக்காளர் பெருமக்கள்-ஆணை வழங்கி விட்டார்கள். அதனை அனுசரித்து, அவரது முடிவுகளுக்கு இசைந்தொழுக அங்கத்தவர்கள் பின்னடிப்பது அல்லது மறுப்பது எந்த வகையிலும் உகந்தது அல்ல; ஏற்புடையதும் அல்ல.

நாங்களும், மக்களால் அவர்களின் வாக்குகள் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்று சளப்பல் குதப்பல்கள் செய்து, தாம் விரும்பிய பதவி வழங்கப்பட வேண்டும் என்று அடம் பிடிப்பதற்கு உரிமை இருப்பதாக நினைத்து எவரும் குழப்பம் விளைவிக்காமல் செயற்பட வேண்டிய வேளை இது. அன்றி, அவ்வழி செல்வது, அவ்வாறு செய்வது, அல்லது அதனை நினைப்பது, தம்மைத் தெரிவு செய்த வாக்காளர்களுக்குத் துரோகம் இழைப்பதாகும். இதனைமாகாணசபைஉறுப்பினர்கள் மறந்துவிடலாகாது.

முதலமைச்சராக மக்களால் தெரிவு செய்யப்பட்டவரின் முகம் நேரில் தெரியாமலே அவர் வகித்த பதவியின் ஆளுமையைக் கொண்டும், அவரது கருத்துக்களைக் கேட்டுமே மக்கள் வாக்களித்தார்கள். அவரது வழிகாட்டுதல்களையும், அறிவுரைகளையும் ஏற்று நடப்பதே இன்றைய அரசியல் சூழலுக்குத் தேவை. கன்னைக் கட்டி நிற்க வேண்டியவேளை இதுவல்ல. மாற்றான் வந்து குந்தியிருக்க இடம் கொடுக்காதீர்கள், வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளே....!

# சர்வதேச விசாரணையை தடுக்கவே கொழும்பில் பொதுநலவாய மாநாடு

## இந்தியாவின் தந்திரத்தை முறியடிப்பதற்கு தயாராகி வருகின்றனர் தமிழக மாணவர்

வெங்கட்ராமன்

இனக்கொலையாளி ராஜபக்ஷவை உலகக் கண்டனாங்களில் இருந்தும், பன் னாட்டு நீதிமன்ற விசாரணையில் இருந்தும் பாதுகாக்க இந்தியா பல முனைகளிலும் முயன்றுவருகிறது. அவற்றுள் ஒன்றுதான் இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்தும் முயற்சி.

உலகெங்குமுள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் எதிர்ப்புகளுக்கிடையே எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் 17 வரை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூடும் 23ஆவது மாநாடு - இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடைபெற உள்ளது. பொது நலவாய மரபுப்படி எந்த நாட்டில் உச்சி மாநாடு நடக்கிறதோ, அந்த நாட்டின் அரசுத் தலைவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பொது நலவாய அமைப்பின் சபைத் தலைவராக இருப்பார். அந்த வகையில் இலங்கையில் இம் மாநாடு நடப்பதன் மூலம் எதிர்வரும் இரண்டாண்டுகளுக்கு பொதுநலவாயத் தலைவராக ராஜபக்ஷ இருப்பார்.

உலகமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, கேள்விமுறையின்றி 2008-2009 இல் ஒன்றரை இலட்சம் ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் உலக சமூகத்தின் மனச்சான்று இப்போதுதான் இலேசாக விழித்துப்பார்க்கத் தொடங்கியிருக்கிறது. தமிழின உரிமை அமைப்புகளும் உலகெங்குமுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்களும், சனல்4 போன்ற இலத்திரனியல் ஊடகவியலாளர்களும் இடையறாது செய்த முயற்சிகளின் விளைவாக, சிங்களப் பேரினவாதத்தின் செயற்பாடுகள் அம்பலப்படுத்தப்பட்டு வருகிறது. 2009 இல் ராஜபக்ஷவுக்குப் பாராட்டுரை வழங்கிய ஐ.நா. மனித உரிமைகள் சபை இன்று அவரைக் குற்றவாளி என இனங்காணத் தொடங்கி விட்டது.

ஆனால் இந்த இனக்கொலையாளிக் கும்பலைப் பாதுகாக்கும் அரணாக இந்தியா தொடர்ந்தும் செயற்பட்டுவருகிறது. ஐ.நா,. மனித உரிமை ஆணையர் விரிவான முதல் கட்ட விசாரணைக்குப் பிறகு தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசும் அதன் படைகளும் முள்ளிவாய்க்காலில் செய்துள்ள சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க தற்சார்பான புலன் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் நிறுத்தப்பட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்.

பொதுநலவாய அமைப்பிலும் இலங்கைப் போர் குற்றவியல் எதிரொலித்தது. பொதுநலவாய தலைமைச் செயலகம் இந்த மனித உரிமை மீறல் குறித்து வெளிப்படையான கண் டன அறிக்கை வெளியிட வேண்டும் என்ற முயற்சி 2009 இறுதியில் நடந்த போது அதைத் தடுத்ததும் இந்தியா தான். சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சில ஊடகங்கள் புகைப்பட மற்றும் காணொளி ஆதாரத்தோடு வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு பொதுநலவாய அமைப்பு வெளிப்ப டையான கண்டன அறிக்கையை வெளியிடவேண்டும் எனப் பொதுநலவாய அமைப்பின் செயலாளருக்கு 2009 ஒக்டோபரில் தெரிவித்திருந் தனர். உறுப்புநாடுகளில் நிகழ்ந்த உள் நாட்டுச் சிக்கல் தொடர்பாக அறிக்கை எதுவும் வெளியிட வேண்டாம் எனக் கூறி பொது நலவாய தலைமைச் செயலாளர் கமலேஷ் சர்மா நிராகரித்தார். இவர் இந்தியாவைச் சேர்ந்தவர்.

அமுக்கப்பட்ட இந்த உள்ளக அறிக்கை 2010 ஆண்டில் கார்டியன் இதழில் கசிந்து வந்த போது உலகெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன.

இவ்வாறு கமலேஷ் சர்மா அறிக்கையை அமுக்கியது பொதுநலவாய தீர்மானத்திற்கு எதிரானது. 1995 இல் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டு அறிக்கையில் ஏதாவது ஓர் உறுப்பு நாடு தனது உள்நாட்டு மக்கள் தொடர் பாக கடுமையான மனித உரிமை மீறலில் ஈடுபட்டிருந்தால் அக்குற்றத்தை கண்டித்தோ அல்லது அக்குற்றச்செயல் வருத்தமளிப்பதாக அறிவித்தோ பொதுநலவாய தலை மைச்செயலகம் வெளிப்படையான அறிக்கை வெளியிடலாம். என்று தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே கமலேஷ் சர்மா தன்னுடைய செயலக அதிகாரிகள் அறிக்கை தயாரித்தளித்த பிறகும் அதை வெளியிடாமல் இனக் கொலையாளி ராஜபக்ஷவைக் காப்பாற்றியது இந்திய அரசின் தூண்டுதலில்தான் என்று கருத இடமுண்டு.

பொதுநலவாய அமைப்பின் வரலாற்றில் அதன் உறுப்பு நாடுகள் மீது கண்டனம் தெரிவிப்பதோ, நடவடிக்கை எடுப்பதோ நடக்காத ஒன்றல்ல.

பிரிட்டனின் முன்னாள் காலனி நாடுகளைக் கொண்டு 1949 இல் நிறு வப்பட்ட பொதுநலவாய தேசங்கள் என்ற அமைப்பு இப்போது 54 நாடுகளை உறுப்பு நாடுகளாகக் கொண்டு இயங்குகிறது. அண்மையில் ஆட்சிக் கவிழ்ப்பு நடந்த பிஜி நாடு தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 53 நாடுகளைக் கொண்டு பொதுநலவாய அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கிறது. இதன் தலைவராக பிரிட்டனின் பேரரசி இரண்டாம் எலிசபெத் இருக்கிறார்.

எந்த உருப்படியான கட்டுத் திட்டமும் இல்லாத ஓர் அமைப்பாக இது தொடங்கப்பட்டிருந்தாலும் ஆண்டுகள் செல்லச் செல்ல பொதுநலவாய அமைப்பிலும் பல்வேறு சீர்திருத்தங்கள் நடைபெற்றன. அடிப்படையான சில மனித விழுமியங்களை பாதுகாப்பது பொதுநலவாய அமைப்பின் கடமையாகக் கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் பொதுநலவாய அமைப்பின் நடவடிக்கை களும் சில நேரங்களில் அமைந்தன. அந்த வகையில் 1960ஆம் ஆண்டில் தென்னாபிரிக்கா, 1977ஆம் ஆண்டில் உகண்டா என்பவை பொதுநலவாயத்திலிருந்து இடைநீக்கப்பட்ட சந்தர்ப்பங்களை உதாரணமாகக் குறிப்பிட இயலும்.

பொதுநலவாய உச்சி மாநாடுகளின் விவாதங்களில் எலிசபெத் பேரரசி கலந்து கொள்வது மிக மிக அரிதான செய்தியாகும். ஆனால் கடந்த மாநாட்டில் விவாதத்தின் ஊடாக எலிசபெத் பேசினார். உறுப்பு நாடுகளுக்குள் நடைபெறும் கடும் மனித உரிமை மீறல்களை பொதுநலவாயம் கண்டு கொள்ளாமல் விட்டு விடமுடியாது. இதற்குரிய அமைப்பு வழிப்பட்ட ஏற்பாடுகளுக்கு வழிவகை செய்ய வேண்டும். என்று கூறினார்.

இதனை அடுத்துப் பேசிய பிரிட்டன் பிரதமர் கமரூன் எல்லா உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கட்டுப்படும் வகையிலான கொள்கைப்பட்டயம் ஒன்றை (சார்ட்டர்) உருவாக்கலாம் என்றார். இந்த முன்மொழிவு ஒரு மனதாக ஏற்கப்பட்டு அதற்கான குழு அமர்த்தப் பட்டது. கடந்த இரண்டாண்டுகள் உறுப்புநாடுகளுக்கிடையே நடைபெற்ற தொடர் விவாதங்களை அடுத்து பொதுநலவாய பேரறிக்கை அல்லது கொள்கைப் பட்டயம் (காமன்வெல்த் சார்ட்டர்) கடந்த 2012 ஒக்டோபரில் இறுதி செய்யப்பட்டது. பொதுநலவாய அமைப்பின் தலைவரான எலிசபெத் அரசி கையெழுத் திட்டதை அடுத்து 2013 மார்ச் 1 முதல் இந்த பொதுநலவாய கொள்கைப் பட்ட யம் செயலுக்கு வந்தது. இந்தக் கொள் கைப் பட்டயம் பொதுநலவாய் உறுப்பு நாடுகளை கட்டுப்படுத்தும் அதா வது இதனை மீறும் நாடுகள் மீது பொதுநலாய நடவடிக்கை எடுக்கலாம்.

> கொழும்பில் நடந்து பொது நலவாய அமைப்பின் சபைத் தலைவராக ராஜபக்ஷ வரும் இரண்டாண்டுகளுக்கு நியமிக்கப்பட்டால், அவர் மீது தற்சார்பான சர்வ்தேச புலன் விசாரணை நடத்துவது சிக்கலாகும். இதைத்தான் இந்தியா விரும்புகிறது.

16 கூறுகளைக் கொண்ட இந்தக் கொள்கைப் பட்டயம் உறுப்பு நாடுகளில் தேர்தல் வழிப்பட்ட சனநாயகம், மனித உரிமைப் பாது காப்பு, கருத்துரிமை, முரண்பட்ட சமூகங்களிக்கிடையே சகிப்புத் தன்மை, அதிகாரப்பரவல், சட்டத்தின் ஆட்சி ஆகியவை கட்டாயம் நிலவ வேண்டும் எனக்கூறுகிறது.

இலங்கையை பொறுத்தளவில் மேற்கண்ட எதுவுமே செயலில் இல்லை.

இதற்கு முன்னர் இருந்த நிலைமை எதுவாக இருப்பினும் பொதுநலவாயத்தின் கடந்த உச்சி மாநாட்டுக்கு பிறகு ஒரு புதிய நிலைமை தோன்றியுள்ளது. அதுதான் 2013 மார்ச் 1 இல் செயலுக்கு வந்த பொதுநலவாயக் கொள்கைப் பட்டயம்.

இக்கொள்கைப் பட்டயம் மனித உரிமைப்பாதுகாப்பு, அதிகாரப்பரவல், சட்டத்தின் ஆட்சி, சமூகங்களுக்கிடையே சகிப்புத் தன்மை, கருத்துரிமை, ஆகியவற்றை கட் டாயமாக்குகிறது என்பதை மேலே குறிப்பிட்டோம்.

இதில் மீறல் நடைபெற்றால் தொடர்புடைய நாடு பொதுநலவாயத்தில் உறுப்பு வகிக்கத் தகுதி இழக்கிறது என்றாகிறது. ஐ.நா. மனித உரிமை மன்றம் உள்ளிட்ட பல்வேறு உலகநாட்டு அமைப்புகள் இலங்கையில் இனப்படுகொலை நடந்ததை ஏற்கவில்லையென்றாலும் மனித குலத்திற்கெதிரான குற்றம் உள்ளிட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளதை உறுதி செய்து விட்டன. இக்குற்றங்கள் குறித்து விசாரணை நடைபெற வேண்டும் எனவும் தீர்மானித்து விட்டன. இதுவே இலங்கையின் மீதான குற்றச் சாட்டுரையாகும். இக்குற்றச் சாட்டை அடிப்படையாகக் கொண்டு இலங்கையைப் பொதுநலவாய அமைப்பில் இருந்து உடனடி யாக நீக்க வேண்டும். பிஜிக்கு செய்ததுபோல, பாகிஸ்தானுக்கு செய்ததை போல குறைந்தது இடை நீக்கம் செய்ய வேண்டும்.

அதற்கு முதல்படியாக எதிர்வரும் நவம்பரில் நடைபெறும் 23 ஆவது உச்சி மாநாட்டை வேறுநாட்டுக்கு மாற்ற வேண்டும். கொழும்பில் நடத்தக்கூடாது. இவ்வாறு கொழும்பில் மாநாடு நடந்து பொது நலவாய அமைப்பின் சபைத் தலைவராக ராஜபக்ஷ வரும் இரண்டாண்டுகளுக்கு நியமிக்கப்பட்டால் அவர் மீது தற்சார்பான சர்வதேச புலன் விசாரணை நடத்துவது சிக்கலாகும். இதைத்தான் இந்தியா விரும்புகிறது.

இந்தியாவின் இந்த இனப்பகை முயற்சியை எதிர்த்து தமிழ்நாட்டு மாணவர்களும், இளைஞர்களும் பெருந்திரள் போராட்டம் நடத்த களம் அமைப்பது உடனடித் தேவை ஆகும்.

# சிறுவர்கள் சிறந்த வளமுள்ளவர்களாக வளர...

சி.நற்குணலிங்கம்



18 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சிறுவர்களே.சிறுவர்களைச் சிறந்த வளமுள்ளவர்களாக ஆக்க அத்தகைய திறன்களையும் தேர்ச்சிகளையும் சிறு வயதிலேயே உரமிட்டு அடித்தளமிட்டு வளர்த்திடுங்கள். இன்று அவ்விதம் வளர்க்கத் தவறின், நாளைய உலகு களவு பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன நிறைந்த, கலாசார சீரழிவுள்ள சமுதாயமாக அமையும். எனவே சர்வதேச சிறுவர் தினமான இன்று சிறுவர்களை இவற்றிலிருந்து பாதுகாக்க உறுதி பூணுவோம். சின்னஞ்சிறிய தும்பைப் பூவில் கூட ஓர் ஒழுங்கைக் காணமுடியுமாயின், ஏன் ஆறறிவுள்ள பெற்றோரால் சிறுவர்களை ஒழுங்கான முறையில் வளர்த்தெடுக்க முடியாது? அதிக சுதந்திரம் கொடுத்து வளர்க்கப்பட்ட குழந்தைகளை விட, கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகளே சமுதாயத்தின் சிறந்த வளமுள்ளவர்களாகத் திகழ்கின்றனர். சிறுவர்களை குறிக்கோளுடன் வளருங்கள். அந்தக் குறிக்கோள் பிள்ளையின் மனதிலும் ஊற்றெடுக்க வழிகோலுங்கள். எதிர்காலம் நேரிய, சீரிய பாதையில் செல்ல சிறுவயதிலேயே சிறந்த குறிக்கோள் அவசியம்.

சிறு வயது முதலே பண்பாட்டு விழுமியப் பண்புகளை ஊட்டி வளர்க்க வேண்டும். அதேவேளை, பெற்றோர் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்களைக் கற்று அதன் வழி ஒழுகி பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். பெற்றோரின் கெட்ட நடத்தைகள், வேண்டப்படாத பழக்க வழக்கங்கள், சிறுவர்களின் மனதைப் பாதித்து அவர்களது கல்வி நாட்டத்திலும், அவர்களது வாழ்க்கையிலும், பிரதிகூலமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. சிறுவர்களின் கல்வி ஊக்குவிப்பில் பெற்றோர் பங்காளிகளாக வேண்டும். பெரிதாக ஒன்றும் செய்யாவிட்டாலும், கற்றல் சூழலை வீட்டில் ஏற்படுத்திக் கொடுங்கள். உங்கள் அக்கறையையும் வெளிக் காட்டுங்கள். கல்வியின் மூலம் சிறுவர் சிறந்த வளத்தைப் பெறுவார்கள். கல்வி தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச் சூழல் சமகாலத்தில் காணப்படுகின்றது. இந்த விடயத்தில் பெற்றோருடன் பாடசாலையும் கூடிய கவனம் எடுப்பது நன்று.

"மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்" என்கிற பழமொழிக்கேற்ப குழந்தைகள் விடயத்தில் பெற்றோர் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும். செல்லுமிடம், நேர ஒழுங்கு, நண்பர் தெரிவு போன்ற விடயங்கள் தொடர்பான அவதானிப்பு சிறுவயது முதலே பெற்றோர்க்கு இருக்க வேண்டும். கண்காணிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் பிள்ளைகளைத் துர்க்குணங்களுக்கு காணிக்கையாகச் செலுத்த நேரிடும்.

நல்ல எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. அவை நல்லவற்றையே கொண்டுவந்து சேர்க்கும். விவேகானந்தர் கூறுகிறார். "நீங்கள் உங்களை வலிமையானவராக நினைத்தால், வலிமையானவர்களாக மாறுவீர்கள். பலவீனராக நினைத்தால் பலவீனமாகி விடுவீர்கள். எனவே சிறுவயதிலேயே இவ்வாறான நற்சிந்தனைகளை மனதில் ஊட்டுங்கள்.

சிறுவர்களின் ஆற்றல்களை இனங்காண வேண்டும் ஆற்றல்களை வெளிப்படுத்த களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் போது அவை ஊக்குவிக்கப்படவேண்டும். இந்த விடயத்தில் பாடசாலைகள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் சிறுவர்களின் ஆளுமைத்திறன் விருத்தி செய்யப்பட வேண்டும். அத்துடன் நடை, உடை, பாவனைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நாகரிகத்தைத் தத்தமது கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்புடைய வகையில் பேணிக் கொள்ள வேண்டும். ஏனெனில், ஒரு தலைமுறையாக குழந்தைகள் சரியாக வளர்த்தெடுக்கப்படாததால் தான் சமுதாயம் இவ்வளவு சீரழிவுகளுக்கு உள்ளாகியிருக்கிறது.

சிறுவர்கள் தேவையற்ற, பொருத்தமற்ற கட்டுப்பாடுகள், தவறான தண்டனைமுறை, கல்வித் திணிப்புக்கள், சிறுவர் துஷ்பிரயோகம், மற்றும் உளநெருக்கீடுகளுக்கு உள்ளாகாத வகையில் எமது பார்வையை நாம் செலுத்த வேண்டும். மனிதவளமே, மிக உயர்ந்த வளமாகக் கருதப்படுகின்றது. இந்த மனிதவளத்தை செயற்திறன்மிக்கதாக மாற்றியமைக்க எல்லோரும் பாடுபட வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

அதிக சுதந்திரம் கொடுத்து வளர்க்கப்பட்ட குழந்தைகளை விட, கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகளே சமுதாயத்தின் சிறந்த வளமுள்ளவர்களாகத் திகழ்கின்றனர்.

# முதுமையின் திறவுகோல்

த.கிருபாகரன்,
அத்தியட்சகர்,
அரச முதியோர்
இல்லம் , கைதடி.



"நேரிடையான எண்ணங்களும், விட்டுக் கொடுப்புக்களும், மதிக்கும் பண்புகளும், ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் முதுமைக்கு வழிவிட்டு நிற்கும். வாழ்க்கையின் மதிப்புக்கு மைல் கல்லாக நிற்கும். இன்று உள்ளத்துக்கு நாம் உணவளிக்கின் றோமா? இல்லையே, உடலை மட்டும் பார்த்துக் கொள்கிறோம். உள்ளத்துக்குத் தீனியாக நல்ல எண்ணங்கள் உள்வாங்கவேண்டும்.

மூத்த பிரசைகள் சமூகத்தின் வலுவான கொங்கிறீட் தூண்களாக இருப்பவர்கள். இதை இன்னமும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது போய் விட்டமையால் சமூகத்தில் ஒரு வெடிப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையை மாற்றியமைப்பதற்கான ஒரு பயணத்தில் ஒக்ரோபர் 1 முதல் ஒக்ரோபர் 7 வரை அனைவரையும் கைகோர்த்துக் கொள்ளுமாறு அன்போடு அழைத்துக் கொண்டு நம்பிக்கையை வலுவேற்றி பயணிப்பதில் முன் நகர்கின்றேன்.

"உளநல மேம்பாட்டுடன் சுகமாக முதுமையடைதல்" என்பது இன்றைய காலத்தின் தேவையாக சமூகவியலாளர்களால் உணரப்படுகின்றது.

அதை உய்த்துணர்ந்து, உயிர் கொடுத்து, நகர்த்தும் பயணத்தில் இன்றைய முதல்நாள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். முதுமை அனைவருக்கும் சொந்தமானது. அதை விரும்பாவிட்டாலும், அகவைகளின் அணிவகுப்பில் ஒருநாள் அறுபது என்பது பிறக்கப் போகின்றது. இது எம்மிடையே இறப்பின் காலத்தைக் கணக்கிட்டுக் கொள்ளும் ஒரு இருப்பின் ஆரம்பமாக உருவாகின்றது. அகவை அறுபதை அடையும் முன், எநந்த அளவுக்கு நாங்கள் சுமையில்லாத மனதை ஆக்கிக் கொள்கிறோமோ, அந்த அளவுக்கு மனதில் வெறுமை தோன்றி ஓர் இனிமை அடைக்கலமாகிக் கொள்ளும். தனிமையின் தவிப்பில் முதுமை சிக்கிக் கொள்ளாதிருக்க ஒரு புதுமை தேவைப்படுகின்றது. ஆத்மிகத்தின் வருகையுடன் இந்தப் புதுமை நடந்தேற வேண்டும். அப்படியான சூழலில் உளநல மேம்பாட்டுக்குரிய குணங்குறிகள் ஏற்படும். இது மரண பயமற்ற ஆத்மிகமான, அன்பு நிறைந்த ஒரு சாம்ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வழிகோலும்.

வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சம் முதியவர்கள் அறுபது வயதைக் கடந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 10 வீதத்தினர் மூத்த பிரஜைகளாக உள்ளனர். இலங்கையில் ஆண் முதியவர்களின் ஆயுள் வயது 76 ஆகவும், பெண் முதியவர்களின் ஆயுள் வயது 73 ஆகவும் உள்ளது. மூத்த பிரசை களுக்கான சுகாதார வசதிகள் 98 வீதம் இருப்ப தாகவும், கிடைப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின் றன. இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டில் முதி யோர், மொத்தச் சனத்தொகையில் 30 வீதம் ஆகப்போகின்றார்கள். அப்படியாயின் வாழ்க்கையும் சவால்கள் நிறைந்ததாகவே அமையப் போகின்றது. சிந்திக்க வேண்டிய இந்த நேரத்தில் நாங்கள் இப்போது இருக்கின்றோமல்லவா? 50-60 வயதுக்கு இடையில் சுகமாக முதுமையடைதலுக்கான வேலைத் திட்டங்கள் அமுலாக்கப்படும் போது அல்லது விழிப்புணர்வு மூலம் ஏற்படும் போது சமூகத்துடன் ஒத்திசைந்து வாழக் கூடிய பக்குவமும், பண்பட்ட நிலையும் கட்டி எழுப்பப்படும்.

முதியவர்கள் மனச்சுமைகளை நிலையான வைப்பிலிடும் காலமாக 50 முதல் 60 வயதுக் கால இடைவெளியைப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இதற்காகக் கிடைக்கும் வட்டியாக முதுமைக் கோலத்தின் கீறல்கள் அமைந்துவிடுகின்றன. அறுபதைத் தாண்டியவர் நரை, திரை, மூப்பு வெளிப்படாத நிலையில் இருக்க முடியுமெனின், அதுவே வெற்றியின் அறிகுறி எனலாம். உள்ளம் இளமையாக அமையும்போது, உடல் முழுமையான முதுமையை வெளிப்படுத்த முடியாது பின்வாங்குகின்றது.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற முதுமொழி முதுமைக் காலத்தின் கோலத்தை அளந்தறியும் ஓர் அளவு கோலாக உள்ளது. கண்களில் குழி விழலாம். கன்னங்கள் உப்பித்துக் கொள்ளலாம். சுருக்கங்கள் கூட குடிகொண்டுவிடலாம். எண்ணங்கள் இரும்பாகிக் கிடக்கும்வரை துன்பங்கள், மரதன் ஓட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டே இருக்கும். எங்களது கட்டுப்பாட்டுக்கு அப்பால் பந்தங்கள் எல்லாம் நித்தமும் விலகிச் செல்கின்றன. முதுமையில் கூட வருவது தாம் செய்த செயல்களும், கரும வினைகளும் மட்டுமே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நேரிடையான எண்ணங்களும், விட்டுக் கொடுப்புக்களும், மதிக்கும் பண்புகளும், ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையும் முதுமைக்கு வழிவிட்டு நிற்கும். வாழ்க்கையின் மதிப்புக்கு மைல் கல்லாக நிற்கும். இன்று உள்ளத்துக்கு நாம் உணவளிக்கின்றோமோ? இல்லையே, உடலை மட்டும் பார்த்துக் கொள்கிறோம். உள்ளத்துக்குத் தீனியாக நல்ல எண்ணங்களை உள்வாங்க வேண்டும். எந்தச் செலவும் இல்லாத இதை ஏன் இன்னமும் நாங்களும் நீங்களும் செய்யவில்லை? காரணம், எங்களுக்குள் உள்ள 'ஈகோ' விடவில்லை. எனக்குப் புரிந்து விட்டது. உங்களுக்கும் புரிந்திருக்கும். சமூகத் துக்குப் பாரமற்று நாமும் இருக்க இனியும் ஏன் யோசிக்க வேண்டும்? களத்தில் இறங்குங்கள். கனிவானவர்கள் கட்சியில் இணையுங்கள்....

# ஜேர்மனின் WOLY நிறுவனம் ஹமீடியாவுடன் இணைகிறது

இலங்கையில் ஆண்கள் ஆடைத் துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனமாகத் திகழும் ஹமீடியா, 'WOLY' பாதணி பராமரிப்பு உற்பத்திகளை இலங்கைச் சந்தையில் அறிமுகம் செய்வதன் மூலம் இலங்கையரின் பாதணிகளை மினுமினுப்பாக்கும் கலையை மேலும் உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு செல்லும் நோக்கில் ஜேர்மனின் மெல்வோ குழுமத்துடன் கைகோர்த்துள்ளது.

ஹமீடியா முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் கூறுகையில், 'பாதணிகள் என்பது வெறுமனே காலணிகள் என்பதற்கும் அப்பால் நிறைய அர்த்தங்களை உள்ளடக்கியதாகும். ஒருவரது தனிப்பட்ட குணவியல்பு மற்றும் வாழ்க்கையில் அவரது நடத்தை போன்றவற்றை வெளிப்படுத்துவனவாக இவை காணப்படுகின்றன. நீங்கள் யார் என்பதையும், குறிப்பிட்ட நேரங்களில் நீங்கள் எதற்காக முன்னிற்கின்றீர்கள் என்பதையும் உங்களது பாதணிகள் உலகுக்கு எடுத்துரைக்கின்றன. ஆடலுக்கான 'பெலரீனா' பாதணியாக இருந்தாலும், அலுவலக பாவனைக்கான பாதணி என்றாலும், ஒடுவதற்கான பாதணி அல்லது நீண்ட நடைப் பயணத்திற்கான பாதணியாக இருந்தாலும் அது ஒருவரது தனிப்பட்ட ஆளுமைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. பாதணியை அடிக்கடி பயன்படுத்துகின்ற போது உங்களது பாதணி அதிகமான நலிவுக்கு உட்படுகின்றது. தூசிகள், சூழல் ரீதியான பாதிப்புக்கள் மற்றும் நேரடியாக சூரியஒளி விழுதல் ஆகியவற்றின் காரணமாக பாதணிகள் மினுமினுப்புத் தன்மையை மிக விரைவாக இழந்து போகலாம். எனவேதான் அவற்றை முறையான வழியில் பராமரித்தல் அவசியமாகவுள்ளது' என்று குறிப்பிட்டார்.




இலங்கைக்கான ஏக விநியோகஸ்தர்களாக ஹமீடியா நிறுவனம் திகழ்கின்றமையினால், சுப்பர் மார்க்கடுகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களை உள்ளடக்கிய விரிவடைந்து செல்லும் விநியோக வலையமைப்பின் ஊடாக WOLY உற்பத்திகள் பொது மக்களுக்கு கிடைக்கக் கூடியதாவுள்ளன. சுமார் 80 வருட காலமாக 'தராதரம்' ஆனது கட்டுக்கடங்காத உணர்ச்சியாக மாற்றியமைக்கப்பட்ட WOLY உற்பத்தி வகைகள் மிகச் சிறந்த பராமரிப்பையும், பாதுகாப்பையும் அனைத்து விதமான தோலுற்பத்திகளுக்கும் வழங்குகின்றன. 'WOLY ஆனது வெறுமனே பாதணிகளுக்கு மட்டுமான பராமரிப்பு உற்பத்தி என்ற வரையறையை கடந்து - பைகள், இடுப்புப்பட்டிகள் மற்றும் அணி கலன்கள் போன்ற அனைத்து விதமான தோலுற்பத்திகளுக்கும் பொருத்தமானதாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் முற்பகுதியில் இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, WOLY வர்த்தக குறியீட்டிலான உற்பத்திகளில் காணப்படும் 'கொடுக்கும் பணத்திற்கு சிறந்த பெறுமதி' மற்றும் 'உயர் தராதரம்' என்பவற்றுக்காக அவ்வுற்பத்திகள் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மத்தியில் மிகவும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

# இயற்கை எழில் மிக்க பகுதிகளைப் பாதுகாக்கும் ஏஷியன் பெயின்ட்ஸ்



இந்தியாவில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் பல்தேசிய வர்ணப்பூச்சு நிறுவனமான ஏஷியன் பெயின்ட்ஸ் இலங்கையின் இயற்கை எழில் கொஞ்சும் குறிப்பிடத்தக்க ஐம்பது இடங்களைப் பாதுகாக்கும் அரசின் திட்டத்துக்கு நிதி உதவிகளை வழங்கியுள்ளது. சமூக நலன்புரி அமைச்சின் தேசிய கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் (NCSRMP) 13 தேசிய பூங்காக்களிலும், 22 நீர் வீழ்ச்சி பிரதேசங்களிலும்,15 அணைக்கட்டுப் பகுதிகளிலும் பெரிய அளவிலான அறிவித்தல் பலகைகளை நிறுவத் தேவையான நிதி உதவிகளை பிரத்தியேகமாக வழங்குவது என ஏஷியன் பெயின்ட்ஸ் உறுதி செய்துள்ளது.

ஒவ்வொரு அறிவித்தல் பலகையும் 14X7 அளவு கொண்டதாக இருக்கும். இந்தப் பகுதிக்கு விஜயம் செய்பவர்களுக்குத் தேவையான அந்தந்த இடம் பற்றிய வரலாற்று, புவியியல் தரவுகள் அவற்றின் முக்கியத்துவம், சூழல்வள மற்றும் சமூக நிலைப்பாடுகள் என்பனபற்றிய பல தகவல்கள் அடங்கியதாக இந்த அறிவித்தல்கள் அமைந்திருக்கும்.

இந்த அறிவித்தல் பலகைகளைத் தயாரித்தல், நிறுவுதல், பராமரித்தல் என மூன்றாண்டு காலத்துக்கான அனுசரணையாக ஏஷியன் பெயின்ட்ஸ் இதனை வழங்கவுள்ளது.

மாத்தறை, இரத்தினபுரி, நுவரெலிய, கண்டி, குருணாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், கம்பஹா,மாத்தளை, கேகாலை, பதுளை, மொனராகலை, களுத்துறை மற்றும் அம்பாறை என 15 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்த அறிவித்தல் பலகைகள் அமையவுள்ளன என்று ஏஷியன் பெயின்ட்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் பற்றி கருத்து வெளியிட்ட இலங்கையில் ஏஷியன் பெயின்ட்ஸ் பணிப்பாளரும், பொது முகாமையாளருமான ஜோஸப். எல். புலிக்கொட்டில் ஏஷியன் பெயின்ட்ஸ் கடந்த 14 வருடங்களாக இலங்கையில் செயற்பட்டு வருகின்றது. இந்த நாட்டின் கணிசமான மக்கள் தொகையினரின் வாழ்வோடு அதன் உற்பத்திகள் மூலமாக இது மிக ஆழமாகத் தொடர்புபட்டுள்ளது. இந்த முக்கியமான திட்டத்துக்கு ஆதரவு அளிப்பதில் எமக்கு எந்த விதமான தயக்கமும் இல்லை. இது இலங்கையர்களுக்கு நன்மை அளிப்பதோடு மட்டுமன்றி இந்த அழகிய நாட்டுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் நன்மையளிக்கும் என்று கூறினார்.

இந்தத் திட்டத்துக்கான தனியான அனுசரணையாளராக ஏஷியன் பெயின்ட்ஸ் திகழுகின்றது. இது சம்பந்தமான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஜோஸப். எல். புலிக்கொட்டில் மற்றும் தேசிய கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முகாமைத்துவத் திட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் திஸ்ஸ ஆர் ஹேரத் ஆகியோர் ஒப்பமிட்டனர்.

# புளூ ஓஷன் குடும்பத்துடன் இணையும் லிங்க் எஞ்சினியரிங்

இன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கட்டட நிர்மாணத்துறை உட்படப் பல்வேறு துறைகளில் வெற்றிகரமாகப் பிரகாசித்துவரும் புளூ ஓஷன் குழுமம், அதேபோலப் பல்வேறு துறைகளில் வெற்றிகரமாகக் கால் பதித்த அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் கொண்டுள்ள லிங்க் எஞ்சினியரிங் நிறுவனத்தைச் சுவீகரித்துள்ளமை வெற்றிகரமான புதிய அத்தியாயத்தின் ஆரம்பம் என்றும் தைரியமாகக் கூறலாம்.

**புளூ ஓஷன் குழுமத்தின் தலைமைத்துவமும் பின்னணியும்**

மிகச் சிறந்த கல்வித் தகைமைகளுடன் பல்வேறு துறைகளில் பரந்த அனுபவமும், நிபுணத்துவமும் கொண்ட எஸ்.துமிலன் ACA, ACCA, ACMA, (Uk) ACMA, CPA (Aus), FMAAT(SL) ACS புளூ ஓஷன் குழுமத்தின் தலைவராகச் செயற்பட்டு வருவதால் அந்தக் குழுமம் இலங்கையிலும், சர்வதேச மட்டத்திலும் எந்தவித தொய்வோ, பின்னடைவோ இன்றி வெற்றிகரமாக முன்னேறி வந்துள்ளது.

புளூ ஓஷன் குழுமம் "அபிவிருத்தியின் அடித்தளம், புதுமைகளின் உருவாக்கம்" என்ற வர்த்தகப் பல்வேறு வர்த்தகங்களுடன் மாபெரும் வர்த்தக சாம்ராஜ்யத்தை உருவாக்கி நடத்தி வருகின்றது. Blue Ocean Residencies, Blue Ocean Inuestments, Blue Ocean Engineering, Blue Ocean Technologies, Blue Ocean Properties ஆகியன இந்தக் குழுமத்தின் சில சகோதர நிறுவனங்களாகும்.

இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் புளூ ஓஷன் இலங்கையிலும், ஆசிய பசுபிக், ஐரோப்பிய, மத்தியகிழக்கு மற்றும் கிழக்காசியப் பிராந்தியங்களில் தனது காலடிகளை ஸ்திரமாகப் பதித்துள்ளது. துமிலனின் தலைமையில் மிகச் சிறந்த நிபுணத்துவமும், பரந்த அனுபவமும் கொண்ட பட்டயக் கட்டடக் கலைஞர்கள், பொறியியலாளர்கள், பட்டயக் கணக்காளர்கள், உள்ளக வடிவமைப்பாளர்கள் மற்றும் இந்தத் துறை சார்ந்த ஏனைய வல்லுநர்களின் குழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ் பின்வரும் நிர்மாணங்களைத் தனது பயணத்தின் விசேட மைல் கற்களாகக் கருதுகின்றது.

48, டெம்ப்ளர்ஸ் வீதி, மவுண்ட் லெவினியா, 03, கல்லூரி ஒழுங்கை, மவுண்ட் லெவினியா, 30, சிரிபால வீதி, மவுண்ட் லெவினியா, 18, ரீட்ரீட் வீதி, மவுண்ட் லெவினியா, 48, டெம்ப்ளர்ஸ் வீதி, கொழும்பு-04

**லிங்க் எஞ்சினியரிங் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் பின்னணியும் முகாமைத்துவமும்**

லிங்க் எஞ்சினியரிங் உருவானது தொடக்கம் இலங்கையின் கட்டட நிர்மாணத்துறையில் மிக உயரியதரத்தைப் பெற்றுவந்துள்ளது. இலங்கையின் கட்டட நிர்மாணத்துறையின் இறுதிமட்டமான F-1 தரத்திலிருந்து மிக உயரியமட்டமான C-1க்கு உயர்ந்துள்ள கந்தலமஹோட்டலின் சிறப்பான நிர்மாணத்துக்காக IFAWPCA வழங்கிய வெள்ளி விருது, 2002 இல் சபாநாயகரின் வாசஸ்தலத்தின் நிர்மாணத்துக்காக ICATD தேசிய விருது 2009-2010 இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவகத்தின் SLSI/SO 9001-2008 சான்றிதழ்.

தம்புள்ளையில் கந்தலமஹோட்டல், தெமட்ட கொடையில் 320 வீடுகள் நிர்மாணம் டி.செரம் பிளேஸின் தாதியர் விடுதி, HRL ஹோம்ஸ் குடியிருப்பு இல்லங்கள், களுத்துறையில் 25 அறைகளைக் கொண்ட ஹோட்டல், நுவரெலியாவில் தேயிலைத் தொழிற்சாலை (Tea Factory) ஹோட்டல், ஆனந்தாக் கல்லூரியின் நீச்சல் தடாகம், ரொட்டுண்டா கோபுரம், ரிட்டி கலயில் ட்ரீ ஹவுஸ், யுனிலிவர் வோல்ஸின் ஐஸ்கிறீம் தொழிற்சாலை, தேசிய தேமிப்பு வங்கி, ABN AMRQ வங்கியின் தலைமையகம் மற்றும் வெள்ளவத்தை அலுவலகக் கட்டடங்கள், சாவகச்சேரியில் நீதிபதிகளின் வாசஸ்தலங்கள், சீத்தாவக்கையில் பொறியியல் தொழிற்சாலைத் தொகுதி, ருகுணு பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதி, அம்பலாங்கொடை கனிஷ்ட வித்தியாலயத்தின் மீள் நிர்மாணம், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட நூல் நிலையம், நாவல திறந்த பல்கலைக் கழகக் கட்டடங்கள், சென்.ஜோசப் கல்லூரிக்கான நீர்கொழும்புக் கிளை, குருநாகல்-பாதெனிய வீதி, பொலநறுவை தேசியக் கல்விக் கல்லூரிக்கான நீர் விநியோகத் திட்டம், மாத்தறையில் 20 MW மின்சாரத்தைத் தயாரிக்கும் டீசல் இயந்திர நிலையத்தின் மின்சார இணைப்புகள், எலைட் புரொப்பர்ட்டிஸ் நிறு வனத் துக்காக Curtain Wall System மற்றும் சீலிங்குகள் Sky Light இலங்கையின் கட்டட நிர்மாணத்துறையில் ஏற்கனவே பல சாதனைகளைப் படைத்துள்ள புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ் நிறுவனம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைச் சம்பாதித்துள்ளது. அவரவர் பொருளாதார நிலைக் கேற்ப பொருத்தமான இல்லங்களை நிர்மாணித்து அளப்பெரிய சேவையை வழங்கிவந்த புளூ ஓஷன் ரெஸிடென்ஸிஸ் லிங்க் எஞ்சினியரிங் நிறுவனத்தில் சங்கமத்தின் பின் மேலும் சிறப்பான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

# காகீல்ஸ் மரக்கறி மற்றும் பழவகை கொள்வனவு நிலையம்

காகீல்ஸ் சிலோன் பி.எல்.சியானது இன்று அகில இலங்கை ரீதியில் மிகவும் வளர்ந்துள்ள ஒரு நிறுவனமாகும். குறிப்பாக வட பகுதியை பொறுத்தவரையில் வடக்கு தெற்கு நெடுஞ்சாலை சீரான காலத்தில் இருந்து இன்றுவரை அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

மேலும் காகீல்ஸ் ஆனது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து பல வகையான மரக் கறிகளையும், பழ வகைகளையும் நேரடியாக கொள்வனவு செய்து தனது 227 foot city மூலம் விற்பனை செய்து வருகின்றது. ஆரம்பத்தில் விவசாயிகளின் களத்தில் கொள்வனவு செய்த நிறுவனம், கொள்வனவை கூட்டும் வகையில் 22.09.2011 இல் அளவெட்டியில் தனியான மரக்கறி மற்றும் பழக் கொள்வனவு நிலையத்தைத் திறந்து இன்று ஏறக்குறைய 4000 kg மரக்கறி மற்றும் பழ வகைகளை தினமும் கொள் வனவு செய்து வருகிறது.

இது மட்டுமன்றி உள்ளூர் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு வகையான செயற்பாடுகளைச் செய்தும், செய்வதற்கும் உத்தேசித்தும் வருகின்றது.

1. விவசாயிகளுக்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்பு
2. விவசாயிகளின் குழந்தைகளின் கல்விக்கான பகுதி ஒத்து ழைப்பு
3. விவசாயிகளுக்கான விசேட காப்புறுதித் திட்டம்.
4. அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை குறைப்பதற்கான பிளாஸ்ரிக் கூடைகள் இலவச விநியோகம்.
5. இலவச விதைகள் விநியோகம் (Seed Distribution)
6. Sonaka மற்றும் Shared (விதை அற்ற திராட்சை இனம்) அறிமுகம் செய்தமை.

மேலும் விவசாயிகளின் முன்னேற்றம் கருதி கிளிநொச்சியில் மாபெரும் பழ வகைகள் மற்றும் மரக்கறி கொள்வனவு நிலையம் ஒன்றையும், பழரச உற்பத்திக்கான ஆரம்ப பதனிடல் பகுதியையும் மிக விரைவில் திறப்பதற்கு உத்தேசித்துள்ளது.

இவ்வாறான சமூக பொறுப்புடன் கூடிய செயற்பாடுகள் மூலம் விவசாயிகளின் நன்மதிப்பை பெற்று வளர்ந்து நிற்கின்றது. (த)

# கொளுத்தும் வெயிலில் குடிதண்ணீர் தேடியலையும் கிராம மக்கள்

### அனிஞ்சியன்குளம் 2 ஆம் பகுதியில் அவலம்

துணுக்காய்.ஒக்.1

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவின் 2 ஆம் பகுதி ஆத்திமர ஒழுங்கையில் பொதுக்கிணறு அமைக்கப்படாதத்தால் இங்கு வசிக்கும் மக்கள் குடிதண்ணீர் தேடி அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.



அனிஞ்சியன்குளம் 2ஆம் பகுதியில் சுமார் 20 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மீள் குடியமர்வு இடம் பெற்று 4 வருடங்கள் ஆனபோதிலும் குடிதண்ணீரைப் பெறுவதற்குரிய கிணறு அமைக்கப்படவில்லை.

இதனால் இங்கு வசிக்கும் மக்கள் கொளுத்தும் வெயிலில் கைக் குழந்தைகளைக் காவிக் கொண்டு அயல் கிராமங்களுக்கு தண்ணீர் தேடி அலைந்து திரியும் அவலநிலையில் காணப்படுகின்றனர்.

இது தொடர்பாக மேற்படி மக்கள் இங்குள்ள அதிகாரிகளிடம் முறையிட்டபோதிலும் எந்த வித பயனும் கிடைக்கவில்லையெனக் கவலையுடன் தெரிவித்தனர்.

(க-415)

## துரிதமாக இடம்பெற்று வருகிறது மருதமடுக் குளத்தின் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மருதமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் அதிகாரிகளின் கண்காணிப்பில் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள இந்தக் குளம் கடந்த போரின்போது சேதமடைந்தது. இந்த நிலையில் புனரமைப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டு சுமார் 183 மில்லியன் ரூபாவுக்கான ஒப்பந்தம் கடந்த ஆண்டு ஒப்பந்தகாரர்களுடன் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் கடந்த மாதம் 15 ஆம் திகதியுடன் இந்தக் குளத்தின் புனரமைப்பு பணிகள் நிறைவு பெறவேண்டிய நிலையில் இருபது வீதமான வேலைகள் கூடப் பூர்த்தியடையாது காணப்பட்டன.

இதனை இந்தப் பகுதி விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன் உதயன் பத்திரிகையிலும் இது தொடர்பான செய்தி பிரசுரமானது.

இதனைத் தொடர்ந்து குறித்த குளத்தின் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் குளத்தின் புனரமைப்புப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக முல்லை. மாவட்ட அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-6)

## முள்ளியவளை பிரதான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை



முள்ளியவளை.ஒக்.1

முள்ளியவளை பிரதான வீதியை உடனடியாகப் புனரமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முள்ளியவளைப் பிரதேசத்தின் நிரந்தர குடியிருப்பாளர்களாகிய நாம் முள்ளியவளையின் காட்டாவிநாயகர் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக ஆரம்பித்து, முள்ளியவளை வற்றாப்பளை அம்மன் சந்திவரை அண்ணளவாக 800 மீற்றர் நீளமான பிரதான வீதியின் இரு மருங்கிலும் அன்றுதொட்டு இன்று வரை வசித்து வருகின்றோம்.

கடந்த போரின்போது எமது வீதியில் மண் அகழ்வு செய்யப்பட்டு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

இதனால் இந்த வீதி ஆழமாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதுடன் இடிபாடுகளுக்கு உட்பட்டு நீர் ஊற்றெடுத்து சகதி நிலையில் உள்ளதால் தற்போது எவரும் இந்த வீதியில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பலருக்குப் பல தடவைகள் தெரிவித்தும் இது வரை இந்த வீதி தொடர்பாக எதுவித முன்னேற்ற நிலையும் காணப்படவில்லை.

மேலும் வற்றாப்பளை அம்மன் பொங்கல் உற்சவத்தின் தீர்த்தமெடுத்தல் நிகழ்வு, காட்டா விநாயகர் ஆலய பொங்கல் உற்சவ நிகழ்வு ஆகியவற்றுக்கு இந்த வீதியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் எமது மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டு அபிவிருத்தி அடைந்து அழகாகக் காட்சியளிக்கும் நிலையில் எமது வீதி மட்டும் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பது மிகவும் வேதனை அளிக்கின்றது.

எனவே எமது இந்தக் கோரிக்கை மனுவைத் தயவுகூர்ந்து பரிசீலனை செய்து எமது போக்குவரத்துச் சிரமங்களை நீக்குமாறு வேண்டி நிற்கின்றோம்- என்றுள்ளது.

(க)

# இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரை வழங்குவதில் தடையிராது

### கிளிநொச்சியின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால்

கிளிநொச்சி.ஒக்.1

கிளிநொச்சி மாவட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்த பின்னர் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுக் குளத்திலிருந்து நீரைக் கொண்டு செல்வதில் எந்தவித தடைகளும் இருக்காது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீரைக் கொண்டு செல்வது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் வி.குகராசா தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் எஸ்.குரூஸ், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் என்.நந்தகுமார், வட மாகாண சபையின் உறுப்பினர்களான சி.வீ.கே. சிவஞானம், எஸ்.குருகுலராசா, பி.பசுபதிப்பிள்ளை, முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்:

நாம் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுக்குளத்தில் இருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை. எம்து பிரதேசத்தில் 22 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு சிறுபோகத்தில் நீர்ப்பாசனத்தை நம்பியே உள்ளது. ஆனால் 8 ஆயிரம் ஏக்கரில் இருந்து 10 ஆயிரம் ஏக்கர் வரையான காணிகளுக்கே நீரை வழங்கக் கூடியதாகவுள்ளது.

இத்தகைய நிலையில் யாழ்ப்பாணத்துக்கு எந்த வகையில் இங்கிருந்து நீரைக் கொண்டு செல்ல முடியும்? கிளிநொச்சி மாவட்ட மக்களின் தேவைகளை நிறைவு செய்த பின்னர் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுக்குளத்தில் இருந்து நீரைக் கொண்டு செல்வதில் எந்த வகையான தடைகளும் இருக்காது என்று தெரிவித்தனர்.

இதேவேளை-பூநகரிப் பகுதியில் நிலவும் கடும் வறட்சியினால் மக்கள் குடிதண்ணீருக்கு அலைந்து திரியும் நிலைமை காணப்படுவதாகவும், பூநகரிக்கு கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் இருந்து குடிதண்ணீர் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் எனவும் பூநகரிப் பிரதேச சபைத் தலைவரும் மற்றும் அந்தப் பகுதியின் விவசாய அமைப்பினரும் இந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

(க-86)



வவுனிக்குளம் நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ்வரும் வவுனிக்குளத்தின் அணைக்கட்டை உயர்த்திப் புனரமைக்கும் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-415)

## முருகன் ஆலயத்தில் திருட்டுச் சம்பவம்

வவுனியா.ஒக்.1

வவுனியாவில் அமைந்துள்ள ஆலயமொன்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வவுனியா நெளுக்குளம் முருகன் ஆலயத்திலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இரவுவேளை, ஆள்நடமாட்டம் இல்லாத வேளையில் சுருக்குக்கேற்றை உடைத்து உள்ளே புகுந்து கொண்ட திருடர் கும்பல் ஆலயத்தின் வசந்த மண்டபப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் உட்பட வேறு பொருள்களையும் திருடிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-402)

### முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட

# அதிபர்களின் இடமாற்றத்தால் குழப்ப நிலை; இடை நிறுத்தி வைத்தார் அமைச்சின் செயலர்

முல்லைத்தீவு.ஒக்.1

முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரால் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான கடிதம் தம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளரான எஸ்.சத்தியசீலன் நேற்றுத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரால் அங்கு பணிபுரியும் நான்கு பாடசாலை அதிபர்களுக்கு உடனடியாகச் செயற்படும் வகையில் இடமாற்ற உத்தரவுகள் கடந்த 25 ஆம் திகதி வழங்கப்பட்டன. இதன் பிரகாரம் உடையார்கட்டு மகா வித்தியாலயம், ஆரம்பவித்தியாலயம் ஆகியவற்றின் அதிபர்கள் புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்கும், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய அதிபர் உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்கும், இருட்டுமடு பாடசாலை அதிபர் வள்ளிபுனம் பாடசாலைக்கும் இடம் மாற்றப்பட்டனர்.

இது தொடர்பாக இங்கு குழப்பமானதொரு நிலை நிலவியதுடன் இலங்கை ஆசிரியர் சங்கமும் இந்த நடவடிக்கைக்குத் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பாக வடமாகாண சபை கல்வியமைச்சின் செயலாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது:

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உடையார்கட்டு மகாவித்தியாலயம் உள்வாங்கப்பட்டுள்ளதால் அதன் ஆரம்பபிரிவு தனியான பாடசாலையாக அருகிலுள்ள வேறொரு இடத்தில் இயங்க வேண்டும். இதன் பிரகாரம் காணியொன்றில் கொட்டில்கள் அமைக்கப்பட்டு ஆரம்பப் பிரிவு இயங்கி வந்தது.

ஆனால் யுனிசெப் நிறுவனம் உடையார்கட்டு மகாவித்தியாலய வளாகத்தினுள் ஆரம்ப பிரிவு மாணவர்களின் தேவைகளுக்காகவே தாம் கட்டடமொன்றை அமைத்துள்ளதாகவும் அந்தக் கட்டடத்திலேயே ஆரம்ப பிரிவு இயங்க வேண்டுமெனவும் வற்புறுத்திக் கூறியுள்ளது.

இவ்வாறு செயற்படாது விட்டால் கட்டடத்தைக் கையளிப்பதில் சிக்கல் நிலை உருவாகுமெனத் தெரிய வந்ததால் ஆரம்ப பிரிவு மாணவர்கள் அந்தக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே உடையார்கட்டு மகாவித்தியாலயம், ஆரம்ப வித்தியாலயம் ஆகியவற்றின் நிர்வாகங்களுக்கு இடையிலும் பெற்றோர்கள் மத்தியிலும் முரண்பாடுகள்- பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதனை அடுத்தே இந்த இடமாற்றங்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் இது தொடர்பாகக் குழுவொன்றை நியமித்து இந்த வாரத்துக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளேன். அறிக்கை கிடைத்து மேல் நடவடிக்கை எடுக்கும் வரை அதிபர்களின் இடமாற்றங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான கடிதம் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது- என்றார்.

இதேவேளை அரசியல் காரணங்களுக்காகவே தமக்கு இட மாற்றம் வழங்கப்பட்டதாக அதிபர்களில் ஒருவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இடமாற்றம் வழங்கப்பட்ட மூன்று அதிபர்கள் விடுமுறையில் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-400-555)

## ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றுவோர் 4 லட்சம் பேர்; ஆனால்

# பல்கலைக்கழகம் செல்வோர் 20 ஆயிரம் மாணவரே திறமைமிக்க ஏனையோர் முன்னேற வழிகள் பல உண்டு

### வழிகாட்டல் கருத்தரங்கில் தெளிவுபடுத்தினார் பேராசிரியர் கந்தசாமி

தென்மராட்சி.ஒக்.1
வருடத்தில் 4 லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதுகின்ற போதிலும் 20 ஆயிரம் மாணவர்களே பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். ஏனையோர் திறமையிருந்தும் பல்கலைக்கழகம் செல்ல முடியாததால் விரக்தியடைந்து வாழ்க்கையை திசைமாற்றத்துக்கு உள்ளாக்குகின்றனர்.
இவ்வாறான திறமையான மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்குப் பிடித்த துறையை தேர்ந்தெடுத்து படிக்கவைத்து சிறந்த பிரசைகளாக மாறமுடியும். இந்த மாணவர்களுக்கு முதன்முறையாக இவ்வாறான வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்துவது பாராட்டத்தக்க விடயமாகும். இந்த முயற்சியை மேற்கொண்ட தென்மராட்சி கல்வி வலயத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்கள்
-இவ்வாறு தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலகுப் பிரிவினரால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட தொழில் வழிகாட்டல் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக் கழக பௌதிகவியல்துறைப் பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:
20 வருடங்களுக்கு முன்னர் அரச தொழில் பெறுவதற்காக பல்கலைக்கழகம் செல்லும் நிலை இருந்தது. அந்தக் காலத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கையும் குறைவு. பல்கலைக் கழகங்களும் குறைவு. இன்று அவ்வாறான நிலை இல்லை. 50 க்கு மேற்பட்ட துறைகளைப் போதிக்கக்கூடிய் பல்கலைக் கழகங்களும் சிறந்த தொழில் பயிற்சியைப் பெறக்கூடிய தொழில்நுட்பக் கல்வி நிலையங்களும் எமது நாட்டில் நிறையவே உள்ளன.
தற்போது அரச தொழிலை விடத் தனியார் தொழில்களைத் தேடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது. அரச தொழிலுடன் போட்டி போடக் கூடிய விதத்தில் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய தனியார் துறைகள் செயற்படுகின்றன.
பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்கள் தம்மால் முடியுமென கருதும் தொழில் பயிற்சியைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.
மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை தயார் செய்ய வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கும், சமூகத்துக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டிய பொறுப்பு மாணவர்களுக்கும் உள்ள இன்றைய காலகட்டத்தில் இங்கு நடத்தப்படும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கின் மூலம் சிறந்த தொழிலை தீர்மானிக்கும் கடப்பாடு மாணவ செல்வங்களிடமே கையளிக்கப்பட்டுள்ளது. சுயதொழில்களால் முன்னேறிய பலரை நாம் காண்கின்றோம். உங்களது எதிர்காலத்தை என்ன மாதிரியாக அமைக்க வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்ய வேண்டும்- என்றார். (ஒ-9)

## விதை நெல்லின் கையிருப்பு முடிவு

மீசாலை. ஒக்.1
சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் விதை நெல் கையிருப்பு கடந்த வாரத்துடன் முடிந்து விட்டதாக நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் விதை நெல்லை வாங்க வந்தோர் ஏமாற்றத்துடன் திரும்பியதாக கூறப்பட்டது.
கடந்த வருடம் நெல் அறுவடை காலத்தின்போது கடும் மாரிமழை பெய்தமை காரணமாக நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் தேங்கியமையால் தரமான விதை நெல்லைச் சேமித்து வைக்கமுடியாத நிலையில் விவசாயிகள் தர்ம சங்கடத்துக்கு உள்ளாகினர். இதனால் விதை நெல் தேவைப்படுவோர் இக்கட் டான நிலையில் உள்ளனர்.
எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து விதைநெல்லை தருவித்துத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-122)



நவமகாஜனன் சிற்பி அமரர் தெ.து.ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்த தினத்தையொட்டி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியால் நடத்தப்படும் நிகழ்வுகள் வரிசையில் ஞாயிற்றுக்கிழமை பகல் புகைப்படம் எடுக்கும் போட்டி, செய்தியாக்கம் மற்றும் திரைப்பட விமர்சனம் ஆகிய போட்டிகள் திறந்த போட்டிகளாக இடம்பெற்றன. மகாஜனக் கல்லூரியின் அதிபரும், விழாக்குழுத் தலைவருமான கே.சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கான அறிவுரைகள், போட்டி விதிமுறைகள் சம்பந்தமாக விழாக் குழுத் தலைவர் விளக்கம் அளிக்கிறார். மற்றும் குறிப்பிட்ட போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் காணப்படுகின்றனர். (வ-86)

## கொடிகாமத்தில் வீதிப் போக்குவரத்து பொலிஸார் சோதனை நடவடிக்கை

கொடிகாமம். ஒக்.1
கொடிகாமம் பொலிஸ் பிரதேச எல்லைக்குள் மோட்டார் வாகனபோக்குவரத்துப் பொலிஸார் அண்மைக்காலமாக ஏ-9 வீதியில் பல இடங்களிலும் வீதியில் பயணிக்கும் வாகனங்களை மறித்து பரிசோதித்து போக்குவரத்து விதிகளை மீறிய வாகனச் சாரதிகளுக்கு அதே இடத்தில் வைத்து தண்டம் விதிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.
கொடிகாமம் பொலிஸ் பிரிவினுள் நடப்பு ஆண்டில் ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரையான 8 மாத காலப் பகுதியில் போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிகளிடமிருந்து இவ்வாறு அறவிட்ட தொகை ரூபா 8 லட்சத்து 15 ஆயிரத்து 120 ரூபா ஆகும் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கினறன.
சுமார் 2017 பேர் இந்தக்காலகட்டத்தில் இவ்வாறு தண்டப் பணம் செலுத்தியுள்ளனர். இவ்வாறு பொலிஸாரால் விதிக்கப்படும் தண்டப் பணம் தபாலகங்களில் செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

## கற்பூரச்சட்டி திருட்டு

வரணி. ஒக்.1
வரணி மாசேரி விக்கினமாகுளம் விநாயகர் ஆலய கற்பூரச்சட்டி இனம் தெரியாதோரால் அண்மையில் களவாடப்பட்டுள்ளது.
பித்தளையினால் அமைந்த சுமார் 10 கிலோ எடையுள்ள கற்பூரச்சட்டி ஆலயத்தின் வெளிப் பிரகாரத்திலேயே பன்நெடும் காலமாக வைக்கப்பட்டிருந்த நிலையில் களவாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்**: இளவயது நண்பர்கள் உதவு வார்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப் பார்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**இடபம்**: துணிச்சலாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**மிதுனம்**: தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்** : வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**சிங்கம்**: சில காரியங்களை அலைந்து. திரிந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.

**கன்னி**: திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். உறவுகள் தேடி வருவார்கள். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

நாளை

புரட்டாதி-16 புதன்கிழமை 02.10.2013
திதி: திரயோதசி முழுவதும்
நட்சத்திரம்: மகம் பி.ப.03.10 வரை
சுபநேரம்: 04.32 - 06.02 வரை
இராகுகாலம்: 12.02 - 01.32 வரை

**துலாம்**: உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: விலகிச்சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**தனுசு**: இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து நீங்கும். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**மகரம்**: எதிர்பாராத நன்மை உண்டாகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**கும்பம்**: கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மீனம்**: உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வேற்று மதத்தைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

# சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 7 | | | | | | |
| 4 | | | 7 | | | | | |
| 5 | | | | | | | | |
| 9 | | 8 | 3 | | 7 | | 2 | 4 |
| | | 4 | 1 | | 2 | 9 | | |
| 2 | 6 | | 8 | | 9 | 3 | | 7 |
| 1 | | | | | | | | 5 |
| | | 6 | | | 4 | | | 2 |
| 8 | 4 | | | | | 1 | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 2 | 4 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 5 | 2 | 7 | 6 | 3 | 1 | 4 | 9 |
| 4 | 3 | 9 | 1 | 5 | 8 | 7 | 6 | 2 |
| 5 | 7 | 3 | 8 | 2 | 6 | 4 | 9 | 1 |
| 9 | 2 | 8 | 5 | 1 | 4 | 6 | 7 | 3 |
| 6 | 4 | 1 | 3 | 9 | 7 | 2 | 8 | 5 |
| 1 | 8 | 4 | 6 | 3 | 5 | 9 | 2 | 7 |
| 2 | 6 | 5 | 9 | 7 | 1 | 8 | 3 | 4 |
| 3 | 9 | 7 | 4 | 8 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பிரபலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## புதிய வடக்கு மாகாண சபை

# வட பகுதி மக்களின் வாழ்வில் விடிவை ஏற்படுத்த வேண்டும்

புதிதாகப் பொறுப்பேற்க விருக்கும் வட மாகாண சபை வட பகுதி மக்களின் வாழ்வில் புதியதொரு விடிவினை ஏற்படுத்தித் தரவேண்டும்.

இவ்வாறு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார் கொழும்பு மநகர சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவரும் சப்த தீவு மக்கள் ஒன்றியத்தின் ஆலோசகருமான வேலணை வேணியன்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட மாகாண சபைத் தேர்தலிலே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஈழத்து காந்தி தந்தை செல்வாவின் நாமத்தினாலேயே பெரிய வெற்றியைத் தன் வசமாக்கிக் கொண்டது. உலக வரலாற்றிலே சரித்திரம் படைத்து விட்டதொரு மாபெரும் வெற்றி இதுவாகும். கொடிய போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் பல்வேறு அடாவடித்தனங்களுக்கு மத்தியில் துணிவுடன் வாக்களித்துள்ளார்கள். இந்த வெற்றியானது புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண உலக நாடுகளை எமது பக்கம் திரும்பிப் பார்க்க வழி வகுத்துள்ளது.

இன்று எமது சப்த தீவக மக்கள் பல்வேறு துன்பங்கள், துயரங்கள் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். சப்த தீவக மக்களின் பொருளாதார நிலைகளை உயர்த்த வேண்டிய தார்மிக கடமைகள் இன்று வட மாகாண சபைத் தேர்தலில் தந்தை செல்வா நாமத்தினால் மிகப்பெரிய சரித்திர வெற்றி பெற்ற வட மாகாண முதலமைச்சர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு உண்டு என்பதைத் தீவக மக்கள் ஒன்றியம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

தீவுப் பகுதி சார்ந்த உறுப்பினரான விந்தன் கனகரட்ணம் இந்த மாகாண சபையில் இந்த முறை தேர்வாகி இருக்கிறார். நிச்சயமாக அவர் தீவுப் பகுதி மக்களின் வறுமைப் பிணியைத் தீர்க்கவும் அவர்களின் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பாரென நம்புவோம்.

புதிய வட மாகாண சபை இனியாவது வட பகுதி மக்களின் வாழ்வில் ஒரு புதிய விடிவினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதே எமது தீவுப் பகுதி உட்பட அனைத்து மாகாண சபை உறுப்பினர் களின் பிரார்த்தனையும் எமது மக்களின் பிரார்த்தனையுமாக அமைய வேண்டும்- என்றுள்ளது.

## சிறு வியாபாரம், மனைக் கைத்தொழில் விவரம் கோருகிறது பொருளாதார அமைச்சு

யாழ்ப்பாணம், ஒக்.1

மனைக் கைத்தொழில் மற்றும் நடமாடும் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் தொடர்பான விவரங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கோரியுள்ளது.

இதற்கமைவாக நல்லூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட தொழில் முயற்சியாளர்கள் தமது விவரங் களை தமது கிராம சேவகர் பிரிவில் உள்ள பொரு ளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் விவரங்களை சமர்ப்பிக்கலாம்.

வாழ்வாதார எழுச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளர்களை ஒழுங்குபடுத்தி அவர்களது பிரச்சினைகளை இனங்காண்பதற்காக இந்த விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

வீடுகளில் உணவுகளைத் தயாரித்து தள்ளு வண்டில்களில் நடமாடும் விற்பனையை மேற்கொள்வோர், வெற்றிலை, பீடி விற்பனை தயாரிப்புக்களை வீடுகளில் வைத்து தயாரித்து விற்பனை செய்பவர்கள் தமது விவரங்களைத் தெரியப்படுத்தலாம்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். (ந-14.7)

## ரூ.6 மில்லியன் செலவில் முள்ளியவளை பொதுச்சந்தை புனரமைப்பு

முல்லைத்தீவு, ஒக்.1

முல்லைத்தீவு முள்ளியவளை பொதுச்சந்தை தற்போது ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த கால போரினால் சேதமடைந்த முல்லைத் தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் கீழ் உள்ள முள்ளிய வளைப் பொதுச் சந்தை தற்போது போதிய அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றது. அதனால் இந்தச் சந்தையைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் முதல் நுகர்வோர் வரை பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதுடன் மழை காலங்களில் பல சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த சந்தை தற்போது ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதன் புனரமைப்புப் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடையும் என்றும் அப்போது இந்தச் சந்தையின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும் எனவும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந-6)

## மரண அறிவித்தல்கள்

### ஜெகநாதன் லோகினி



காளி கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் லோகினி நேற்றுமுன்தினம் (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேஸ் மற்றும் அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், ஜெகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடேசு மற்றும் இராசேஸ்வரி தம்பதியரின் மருமகளும், வேணுஜன், கஜனா, ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகனதாஸ், ரஜனி பிறேமதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரி, பாலச்சந்திரன், சுந்தரவதனி, ரகுநாதன், புஸ்பதேவி, கிரிஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

காளி கோயிலடி, மல்லாகம்.
077 600 0652

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் இராஜரட்ணம்



சித்தரங்கர் வீடு, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் இலகடி வீதி, கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் இராஜரட்ணம் 29.0[illegible].2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா-தங்கம்மா தம்பதியரின் மருமகளும், இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், ஜெயப்பிரபாவின்(கனடா) அன்புத் தாயாரும், மோகன ராஜின்(கனடா) பாசமிகு மாமியாரும், சரஸ்வதியின் (ஆஸ்திரேலியா) பெறாமகளும் மற்றும் ஸ்ரீஸ்கந்த ராஜா(கொலன்ட்), சிவாஜினிதேவி (லண்டன்), யோகராஜா (ஆஸ்திரேலியா), ரவீந்திரராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலகடி வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
077 658 7643

(29539)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
இராஜரட்ணம்(கணவர்-ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இலங்கை புகையிரதப் பகுதி)

## இரு பிரிவுகளாக இயங்கும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக் 1

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் 28 கிராம அலுவலர் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட உள்ளன.

சங்கத்தை வலுவுடையதாக்க இரு பிரிவுகளாகப் பிரித்து அறிக்கையிடுமாறு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு வட மாகாண கூட் டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட் டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை தீர்மானத்துடன் விண்ணப்பத்தினை வட மாகாண ஆணை யாளருக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் விரைவில் இரு பிரிவுகளாக இயங்க வைக்கப்படும் எனஅவர்மேலும்தெரிவித்துள்ளார். (ந-50)

## டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள்

பருத்தித்துறைப் பிரதேசப் பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கையாக விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பிரதேச செயலகம் உள்ளிட்ட பொது அமைப்புக்கள் மத்தியில் இக் கலந்துரையாடல்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ந-8)

## காந்தி ஜெயந்தி தின நிகழ்வுகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ். கிளையினால் 144 ஆவது காந்தி ஜெயந்தி தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. நாளை புதன்கிழமை இரு அமர்வுகளாக நடை பெறும் இந்த நிகழ்வில் மு.ப. 10 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலை முன்பாகவுள்ள காந்தி திருவுருவச் சிலையடியில் நிகழ்வுகள் நடைபெறும்.

மாலை நிகழ்வு 774, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை காந்தி சேவா நிலைய யாழ். மாவட்ட பணிமனையில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் கலந்துகொள்வார். (ந)

## முள்ளியில் இன்று மண்டபம் திறப்பு

நவாலி, ஒக்.1

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில் உள்ள முள்ளிக் கிராமத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பலநோக்கு மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது. ஆனைக் கோட்டை கலை ஒளி சனசமூக நிலையத் தலைவர் றொபின்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெற்கு மேற்கு ஆசியாவுக்கான தலைவர் எவனா றிசின் கோவும்-கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யு.என்.டிபி. இணைப்பாளர் ஏசிநாபில் கிறமி ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ப.முரளிதரனும் கலந்துகொள்வர். (ந-100)

## கண்ணீர் அஞ்சலி



நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய ஆரம்ப கும்பாபிஷேக குருக்களாகவும், மகோற்சவ கால குருக்களாகவும் விளங்கிய அமரர் இராமநாதக் குருக்கள் அவர்களின் பாரியாரும், மேற்படி ஆலயத்தில் ஆரம்பகாலம் முதல் முப்பது வருடங்களுக்கு மேல் பூசகராகவும், குருக்களாகவும் விளங்கிய சிவஸ்ரீ .இ.ஸ்ரீதரக்குருக்கள் அவர்களின் தாயாருமாகிய

### திருமதி இராசம்மா இராமநாதக்குருக்கள் (இணுவில்)

அவர்கள் 18.09.2013 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா அமைதி பெற தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
சைவ மகா சபையினரும்,
நாரந்தனை வாழ் மக்களும்

நாரந்தனை. (32163) (6.3.11)

## மரண அறிவித்தல்கள்

### அப்புத்துரை தங்கரத்தினம்



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை தங்கரத்தினம் 29.09.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-நாகம்மா தம்பதியரின் புதல்வரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கௌசலா, மிதிலா, முருகநிரோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தரூபன், செந்தூரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான முருகையா, நாகேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரன், தவமணிதேவி, கனகலிங்கம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி, ஏழாலை. (32175)(6.3.11)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராசையா கிரிதரன் (கிரி)



அரியாலை, கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கிரிதரன் லண்டனில் 27.09.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொலிஸ் இராசையா-தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-சிவயோகம் தம்பதியினரின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன், கிரிஜா, ஜெயாதரன், கெங்காதரன் , வனஜா, ரவிதரன், சறோஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அஜிதா வசந்தகுமார், விஜிதா கஜன், றஜிதா கரன், சுஜிதா நரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2013)புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 1063 (32162)(4.6.3)

தகவல்:
அம்பிகா மாணிக்கவாசகர்
(கிளி)

# 2,000 காட்டு மரங்கள் கொழும்பு நகருக்கு



கொழும்பு.ஒக்.1

கெக்கிராவ. மடாடுகம பருங்கா ஹடி மலைப் பகுதியிலுள்ள காடுகளிலிருந்து சுமார் 2 ஆயிரம் காட்டு மரங்கள் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

உயர் மட்ட அரசியல்வாதி ஒருவரின் பெயரைப் பயன்படுத்தியே இந்த மரங்கள் கொண்டு வரப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த மரங்கள் தனியார் இடமொன்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்படுகின்றன என்று கெக்கிராவ வனப்பகுதி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச)

# புத்தளத்தில் மீண்டும் வாக்குச் சீட்டுகள் மீட்பு

## தொடர்கிறது சர்ச்சை

கொழும்பு,ஒக்.1

புத்தளம் சென். அன்ருஸ் மத்திய மகா வித்தியாலயத்திலிருது அண்மை யில் வாக்குச் சீட்டுகள் மீட்கப்பட்டு பெரும்பரபரப்பு ஏற்பட் டுள்ள நிலையில், குறித்த பாடசாலை யிலிருந்து கடந்த 27ஆம் திகதியும் மேலுமொரு தொகுதி வாக்குச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனால் குறித்த பகுதியில் தொடர்ந்தும் பதற்றமான நிலை காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஆப்டீன் யஹியா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

புத்தளம் சென். அன்ருஸ் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து கடந்த 24ஆம் திகதி ஒரு தொகை வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

குறித்த வாக்குச்சீட்டுகள் புத்தளம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதற்கு மறுதினமும் மீண்டும் அந்தப் பாடசாலையின் மண்டபம் ஒன்றில் இருந்து மேலும் ஒரு தொகுதி வாக்குச்சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

> வாக்குச் சீட்டுகள் கண்டெடுக்கப் பட்டமை தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் உறுதிப்படுத் தப்படவில்லை.


இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் குறித்த பாடசாலையின் அதிபர் ஊடாக புத்தளம் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆப்டீன் யஹியா தெரிவித்தார்.

எனினும், குறித்த வாக்குச் சீட்டுகள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த வாக்குச் சீட்டுகள் மாவட்ட செயலர் அலுவலகத்தில் பாதுகாப் பாக வைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-சி)

# காசல்ரீ நீர்த் தேக்க வனப்பகுதியில் தீ

## சுமார் 15 ஏக்கர் நாசம்



கொழும்பு,ஒக்.1

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக சில காட்டுப் பகுதிகள் தீக்கிரையாகியுள்ளன.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் உயர் பிரதேசத்தில் அமைந்துள்ள காட்டுப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை திடீரென தீப்பற்றியுள்ளது. இதனால் 15 ஏக்கர் வரையான நிலப்பகுதி தீக்கிரையாகியுள்ளதென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் மேற்கொண்ட நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.


இதேவேளை,சோமாவதிய தேசிய வனப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ பரவல் காரணமாக 10 ஏக்கர் நிலப்பரப்பு நாசமாகியுள்ளது. இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கை களையடுத்து தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

வெல்லவாய - கங்க அத்தர வனப் பகுதியில் 15 ஏக்கர் நிலப் பரப்பு தீக்கிரையானதாகவும், அந்தத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களில் மொனராகலை மாவட்டத்தில் வனப்பகுதிகளில் ஏற்பட்ட தீ பரவல்கள் காரணமாக சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பாதிப்படைந்துள்ளன. இந்நிலையில், திருகோணமலை - கப்பல்துறை வனத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட தீப்பரவலில் 10 ஏக்கர்கள் வரையான நிலப்பகுதி நாசமாகியுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப் பிலி தெரிவித்தார். (ச)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### சங்கரப்பிள்ளை நாகராஜா
(தம்பி அண்ணா)



தோற்றம்
17 . 05 . 1940

மறைவு
01 . 09 . 2013

எம் குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,
எமது தந்தையின் மறைவின் போது எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் எமது
மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய
போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(f/12199)(6.3.4)

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22.01.1939

உதிர்வு
12.09.2012

### அமரர் சுப்பிரமணியம் சோமசுந்தரம்
(முன்னாள் ஊழியர் (குவாரி), சிமெந்துக்கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)

காலம் ஓர் ஆண்டு சென்றாலும்
களங்கம் ஏதுவும் எமக்கு இன்றி
காலம் முழுவதும் எமை வளர்த்தெடுத்த எம்-தந்தையே
உங்கள் பாதங்களுக்கு எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்
காலனவன் கலக்கம் ஏதுவுமின்றி
உங்கள் மேல் கண் வைத்து
உங்களைக் கவர்ந்து சென்ற தன் காரணம் என்னவோ?
காலங்கள் பல கடக்கலாம்-ஆனால்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் இருந்து
என்றும் எமை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
ஆண்டிகேணி ஐயனாரை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புதுறோட், காரைநகர். (32165) (11.6.3)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பையா இலங்கைநாதன்
(முன்னாள் அதிபர், ந/கணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம்)

மலர்வு
01.11.1940

உதிர்வு
03.10.2002

வழியனுப்பி வைத்த விழிகள்
வருவீர்கள் என பார்த்திருந்த வேளையில்
காலனவன் கவர்ந்திட்ட
கணப்பொழுது என்றும் கசக்குதப்பா!
காலங்கள் பதினொன்று ஆகினும்
என் கடமை முடியுதப்பா
பிரிந்தும் பிரியாது எம்முடன் வாழ்கிறீர்கள்
உங்கள் ஆத்மசாந்தியடைய
அம்பிகை தாள் வணங்குகின்றோம்.

5 ஆம் வட்டாரம், நயினாதீவு. (32176)(3.6.4) குடும்பத்தினர்.

## தசாப்தத்தில் ஈரவிழிகளுடன்....

### கிறிஸ்ரியன் ஸ்ரனிஸ் ஜெயகானந்தன்





மண்ணில்
06.09.1974

விண்ணில்
01.10.2003

எம் இல்லறப் பூங்காவில் கருவாகி கலை பல கற்று உருவாகி
அறிவுக் கண் திறக்கும் குருவாகி வாழ்வின் இடையினில் சருகாகி
விண்ணக வாழ்வினில் திருவாகி எம் உள்ளமதில் உறைந்த பெருமகனே!
மீண்டும் பிறப்பாயோ எம் மடிமீதில் விண்மீனாய் ஒளிர்வாயோ வான்மீதில்
எம் நீரோடும் விழிதனில் - தினம் உன் நினைவோடும் ஜெயவதனம்.

(32226) (45.3.6)

985/13,மலரகம்,
வளன்புரம், கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கை.

# பிளாஸ்ரிக் வாக்குப்பெட்டி பயன்படுத்தியமை நன்மை



கொழும்பு.ஒக்.1
இந்த ஆண்டு இடம்பெற்றிருந்த மாகாண சபைகள் தேர்தலில் பரீட்சார்த்த திட்ட மொன்றாக அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட ஊடுருவித் தெரியும் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டமை வெற்றியளித்துள்ளது என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.
எதிர்வரும் தேர்தல்களில் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகளின் தொகையை அதிகரிப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.
கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போது பரீட்சார்த்த திட்டமாக கண்டி, மாத்தளை, குருநாகல், புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் வாக்குச் சாவடிகளில் 228 பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# சொத்து வெளியிடாதோரை கண்டறியப் பரிசீலனை

## தேர்தல் ஆணையாளர் தகவல்



கொழும்பு. ஒக்.1
மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் வெற்றியீட்டியுள்ள வேட்பாளர்களில் சொத்துக்கள், வைப்புக்கள் விவரங்களைக் கையளிக்காதவர்கள் உள்ளனரா என்பதைத் தேடிக் கண்டறிவதற்கு விசேட பரிசீலனை மேற் கொள்ளப்படவுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
இது தொடர்பாக ஆராய அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்வுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
இந்தப் பரிசீலனையின் போது சொத்து விவரம் வெளியிடாத வேட்பாளர்கள் சிக்கிக் கொண்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

# தேசத்துக்கு மகுடம் சேவை 2014 இல் நாடு முழுவதும்

## பஸில் தெரிவிப்பு



கொழும்பு.ஒக்.1
தேசத்துக்கு மகுடம் நடமாடும் சேவையை 2014 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது கேகாலை, குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தேசத்துக்கு மகுடம் நடமாடும் சேவை வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.
அடுத்த வருடம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெக்க அரசு தீர்மானித்துள்ளது. குடிதண்ணீரைப் பாதுகாப்பதற்காக குளங்கள் அமைத்தல், நீர் நிலைகளை உருவாக்குதல், நீர் ஊற்றுக்களைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.
கிராமத்துக்கு ஓர் அபிவிருத்தித் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் மக்களது தேவைகளை அடையாளங்கண்டு. அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.-என்றார். (ச)

# கடந்த வருடம் மட்டும் மின்சாரம் தாக்கி 200 பேர் சாவு

கொழும்பு.ஒக்.1
கடந்த வருடத்தில் மாத்திரம் மின்சாரம் தாக்கி சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
மின்சாரத்தினால் ஏற்படும் விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு பொலிஸார் மின்சார சபையுடன் இணைந்து விசேட திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர் என்று ஆணைக் குழுவின் பணிப்பாளர் தமித குமாரசிங்க கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
2016 ஆம் ஆண்டளவில் வருடாந்தம் மின்சாரத்தால் ஏற்படும் விபத்துக்



களின் எண்ணிக்கையை 50 ஆக குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்
ஏனைய வருடங்களுடன் ஒப்படுகையில் கடந்த வருடம் மின்சாரத்தினால் ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.
கடந்த 5 வருடங்களாக மின்சாரத்தினால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பில் பொலிஸாருடன் இணைந்து விசேட ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பாதுகாப்பான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் பொதுமக்களைத் தெளிவூட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்வுள்ளன.
இதுதொடர்பில் எதிர்காலத்தில் புதிய சட்டங்களும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.அடுத்த மூன்றாண்டு காலப் பகுதியில் மின்சாரத்தினால் ஏற்பட்டும் விபத்துக்களைத் தவிர்க்க பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.-என்றார். (ச)

# ஹோட்டல் பரிசோதனை; மாநாட்டை முன்னிட்டு

## 45 சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையில்



கொழும்பு. ஒக்.1
இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தரும் அரச தலைவர்கள் மற்றும் தூதர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் 7 ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் 30 முன்னணி உணவகங்கள், ஓய்வு விடுதிகள் ஆகியவற்றை பரி சோதிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
இந்தத் தகவலை கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப்காரியவசம் தெரிவித்தார்.
இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் ஓய்வு விடுதிகளின் உணவு வகைகள், தண்ணீர், ஊழியர்களின் சுகாதார நிலைப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் உணவுப் பரிசோதர்கள் 45 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.
எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மாநாடு ஆரம்பமாகும் சந்தர்ப்பம் வரை இந்தப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.
இந்தக் ஹோட்டல்களின் சமையல் அறை, சுற்றாடலின் சுத்தம், சமையல் அறைகளில் சமையலுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும் மூலப் பொருள்களின் தரம் என்பனவற்றை பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். (ச-22)




கிண்ணியா கல்வி வலயத்தில் குறிஞ்சாகேணி மகளிர் மகா வித்தியால்ய ஆரம்பக் கல்வி பிரிவில் மாணவர்களின் மாபெரும் சந்தை அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றபோது...

# தொல்பொருள் காட்சியகத்தை வெலிக்கடைக்கு மாற்ற முயற்சி

கொழும்பு. ஒக். 1
கொழும்பு 07, ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள கட்டடத்தில் அமைந்துள்ள இலங்கையின் தேசிய தொல்பொருள் காட்சிச்சாலையை வெலிக்கடை சிறைச்சாலைக் கட்டடத்துக்கு மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
புதிய தேசிய தொல்பொருள் காட்சியகம் ஒன்றினை நிறுவுவது தொடர்பாக கொழும்பை மையப்படுத்தும் பொருத்தமான காணியொன்றைத் தேடிப் பெறுவதற்கான முயற்சிகள் சம்பந்தப்பட்ட பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
வெலிக்கடை சிறைச்சாலையை கொழும்பு நகரத்துக்கு அப்பாலுள்ள பிரதேசமொன்றுக்கு மாற்றிவிடும் திட்டத்துக்கு அமைய வெலிக் கடை சிறைச்சாலை வளாகத்தில் தேசிய தொல்பொருள் காட்சியகத்தை தற்காலிகமாக நிறுவுவதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச-22)

# பதவி உயர்வு வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை

## எச்சரிக்கிறது வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு.ஒக்.1
வைத்தியர்களின் பதவி உயர்வுகள் விரைந்து நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அடுத்து வரும் இரு வார காலத்துள் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு தெரிவித்துள்ளது.
வைத்தியர்களின் பதவி உயர்வுகளுக்கு தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு, நிர்வாக சேவைகள் அமைச்சு, நிதி அமைச்சு, மற்றும் சுகாதார அமைச்சு என்பன அனுமதி வழங்கியுள்ள போதிலும், அரச சேவைகள் ஆணைக்குழுவின் மேலதிகச் செயலர் அந்த பதவி உயர்வுகள் ஒழுங்கு விதியை நடைமுறைப் படுத்துவதை ஆறுமாத காலமாக தாமதப்படுத்தி வருகிறார் என்று சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நவீன் டி சொய்ஸா, தெரிவித்தார்.
அது வைத்தியர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
02/2006 நிர்வாக சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைய வைத்தியர்களுக்கு பத்தாண்டுகளில் பதவி உயர்வுகளைப் பெறுவதற்கு மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைகளைப் பின்பற்றியுள்ள வைத்தியர்களுக்கு ஆறு ஆண்டுகளில் அந்தப் பதவி உயர்வுகளைப் பெறுவதற்குத் தகுதி உள்ளது என்று அவர் கூறினார்.
முறைப்படியாக வைத்தியர்களுக்கு தராதரப் பதவி உயர்வுகளை வழங்

"ஆறு ஆண்டுகளில் அந்தப் பதவி உயர்வுகளைப் பெறுவதற்குத் தகுதி உள்ளது."

காதிருப்பதானது வைத்தியர்களின் பதவி உயர்வுகளுக்கு சம்பளங்கள் மற்றும் சம்பள மீளாய்வுகளுக்கு ஒவ்வாத விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்று அவர் கூறினார். (ச-22)

# பொதுச் சொத்தைப் பயன்படுத்திய வேட்பாளர்களுக்கு வழக்கு

## 'பவ்ரல்' அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு. ஒக்.1
நடந்து முடிந்த மாகாண சபைகள் தேர்தலில் பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடர்வதற்கு 'பவ்ரல்' அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
அது தொடர்பான அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.
இந்த முறை இடம்பெற்ற தேர்தலின்போது இனங்காணப்பட்டிருந்த குறைபாடுகள் மீண்டுமொரு தேர்தலில் நடைபெறாதிருக்க கருத்தரங்கு ஒன்றை நடத்துவது குறித்தும் பவ்ரல் அமைப்பு கவனம் செலுத்தி வருகிறது என்று அவர் கூறினார்.
பொதுச் சொத்துக்களின் பயன்பாடு போன்றே தேர்தல் சட்ட விதிகளில் உள்ள குறைபாடுகள் சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.
சிறந்த வேட்பாளர்களை முன்நிறுத்துவது சம்பந்தமாக அரசியல் கட்சிகள் தமக்கிடையிலான சந்திப்பின் போதே மதுவகைகள், போதைப் பொருள்கள் மற்றும் தனிப்பட்ட இலாபங்கள், பயன்களை வழங்கி வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் கலாசாரத்தை மாற்ற தேசிய மட்டத்திலான கருத்துக்களமொன்று கட்டமைக்கப்பட வேண்டியுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.
அரசியல் கலாசாரத்தில் மாற்றத்துக்கு உள்ளாக வேண்டியுள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்த மாற்றங்களை ஏற்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

**விற்பனைக்கு**

L 300 டெலிகா டீசல் வான் (390,000/=), 5KV டைனமோ (லிஸ்ரர் இஞ்சின்), மேலும் ரயர்கடை, வாகன சுத்திகரிப்பு நிலையம், தொலைத் தொடர்பகம், உணவகம், பலசரக்குக்கடை, வீடு, வெல்டிங் என்பவற்றுக்குரிய பாவனைப் பொருள்கள்
தொடர்பு: பிருந்தா மில்ஸ்
No-18, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
Tele : 0779912304 (32186) (10,14)

**இலவசமாக இருப்பதற்கு வீடு உண்டு**

மாதா கோயில் அல்லைப்பிட்டியில் உள்ள திறமான அறை வீட்டில் இருந்து கோயிலையும், காணியையும் பராமரிக்கக் கூடிய சுத்தோலிக்கக் குடும்பம் ஒன்று தேவை. குடும் பத்தில் O/L, A/L படித்த பிள்ளைகள் இருந்தால் பக்கத்தில் உள்ள உல்லாச விடுதியில் நல்ல சம்பளத் துடன் வேலை வாய்ப்பும் உண்டு.
தொடர்பு: 077 835 0478 (32179) (4.6.5)

# மதிப்பீட்டு படிவம் பூர்த்தியாக்கும் பணி இன்று

புதுக்குடியிருப்பு, ஒக். 1
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் கிராம சேவகர் பிரிவு மக்களுக்கான இந்திய வீட்டுத்திட்டற்கான மதிப்பீட்டு படிவம் பூர்த்தியாக்கும் பணி இன்று செவ்வாய்க் கிழமை சிவநகர் கிராம அலுவலர் பணிமனை யில் நடைபெறவுள்ளது.

இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்பவர்களே இந்திய வீட்டுத் திட்ட பயனாளிகள் பட்டிய லில் இணைத்துக் கொள்ள இருப்பதால் இந்தக் கிராம சேவகர் பிரிவிலிருந்து வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட அனை வரையும் தவறாது மதிப்பீட்டுபடிவங்களை பூர்த்தி செய்யுமாறு புதுக்குடியிருப்பு பிர தேச செயலக உதவித் திட்டமிடற் பணிப் பாளர் அறிவித்துள் ளார்.

இதேவேளை கோம் பாவில், உடையார் கட்டு தெற்கு ஆகிய பகுதிகளிலிருந்து இந்திய வீட்டுத்திட்டத் துக்கு தெரிவு செய்யப் பட்டவர்கள் தமது விவரங்கள் பயனாளி கள் பட்டியலில் உள் ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

(400)

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் (கலைவாணி மில் ஒழுங்கையில்) 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அரைவாசி யாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 917 4095 (32180) (10,14)

**வேலைக்கு ஆள்தேவை**

யாழ். நகர் மத்தியில் இயங்கும் ஹோட்டலுக்கு றூம் போய் தேவை. விவாஹமாகாதவரும் இரவில் தங்கி இருந்து வேலை செய்யக் கூடியவரும், ஒட்டோ ஓட்டக் கூடியவரும் விரும்பத்தக்கது.
சம்பளம் தொடக்கத்தில் 17,000/= கொடுக்கப்படும்.
Photocopy இல் அனுபவமுள்ள பெண் பிள்ளைகளும் தேவை
தொடர்பு: 071 856 5375, 077 717 2039 (32189) (10,14)

## மரண அறிவித்தல்

### அரியமலர் நடராசா



மலேசியாவை பிறப்பிடமாகவும், அச்சுவேலி உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் நடராசா நேற்று (30.09.2013) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பவான், மாலினி ஆகியோரின் அன்புத் தாயும், மாலதியின் மாமியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (அச்சுவேலி) மற்றும் சுலோஜனா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாயிலுள்ள கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
பவான் (மகன்)
(32184)(10,14)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் வே. நகுலின் அவர்களின் அன்புத் தந்தை

### நடேசு வேலாயுதம்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(32181) (4.6.3)
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர்அஞ்சலி

திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம்
அவர்களின் பாசமிகு தாயாரும்
கார்த்திகேசு தர்மலிங்கம் அவர்களின்
(எமது நிறுவனத்தின் பங்குதாரர்)
மாமியாருமாகிய

### திருமதி சின்னம்மா நடேசன்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை எமது நிறுவனத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றோம்.


நியூ ஆரோக்கியா புரடக்
பணியாளர்கள்.
(C/12510)
(6.3.11)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
22.12.1946

மறைவு
12.10.2012

திதி:
அபரபக்கத் துவாதசி



அமரர்

### தம்பிஐயா யோகராசா

ஆண்டொன்று ஆனதுவோ-அப்பா
எம்மைவிட்டு நீங்கள் சென்று
எம்மால் உங்களை மறக்கவே முடியாதப்பா
என்றென்றும்

உங்கள் அற்புதமான அறிவுரைகளும்
கனிவான கண்டிப்புக்களும்-அருமருந்தாய்
எமக்களித்த ஆங்கிலமும் கல்வியும்
அவனியிலே எம்மைச் சிறப்புடனே வாழவைக்கும்

தாங்க முடியவில்லை உங்கள் மறைவை
ஏங்கியே அழுகின்றோம் கண்கள் சொரிய
சடுதியான உங்கள் மறைவினால் -நாம்
உயிர் இருந்தும் ஊனமாகிவிட்டோம்


இன்று(01.10.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும் எங்கள் அன்புள்ளத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மனைவி,பிள்ளைகள்,
உறவினர்.

அரியாலை,யாழ்ப்பாணம். (32178) (5.6)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை இராசேஸ்வரன் (யப்பான்)



டச்சு றோட், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராசேஸ்வரன் (யப்பான்) நேற்று (30.09.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், பண்ணாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னையா-பொற்கொடி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பஞ்சலிங்கம், செல்வராசா, காலஞ்சென்றவர்கள சண்முகநாதன், சிவகுமார் மற்றும் தெய்வேந்திரம், காலஞ்சென்ற யோகமலர் ஆகியோரின் சகோதரரும், பகீரதன் (ஹொலண்ட்), சுதாகரன் (ஜேர்மனி), ஜெயகௌரி அனுஷா(ஹெலண்ட்) ஸ்ரீதரன், பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகி யோரின் தகப்பனாரும், சசிரேகா (ஹொலண்ட்), வனிதா (ஜேர் மனி), ஜெயந்தன், லிங்கேஸ்வரன் (ஹொலண்ட்), சஞ்ஜீலா ஆகி யோரின் மாமனும், ரக்ஷா, அணிஸ் (ஹொலண்ட்), அபர்ணா, அபி லாஷ் (ஜேர்மனி), லக்ஷனா, கோமதன், பிரியதர்சன் வர்மிகா, பிரதி, நிதுலன் (கொலண்ட்), கானுஜன், ஹம்சிஜன் திபிஜன், அபிஷஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு றோட்,
சண்டிலிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(32201)(10,14)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

**தவறிவிட்டது**

யாழ்ப்பாணத்துக்கும் - மாவிட்டபுரத்துக்கும் இடையில் செ. திரவியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 592881888 V), சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை கொண்ட பேஸ் தவறிவிட்டது.
தொடர்பு: 075 247 9782, 021 222 1704 (32182) (10,14)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04 . 03 . 1963

உதிர்வு
03 . 10 . 2002



அமரர்

### நடராசா உதயகுமார்

திதி: அபரபட்ச துவாதசி

காலங்கல் பல கடந்தாலும்
என்றும் உம் நினைவுகள்
எம் மனதில் நிலைத்திருக்கும்

பக்கஸ் லேன்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
(32183)(10,14)

**சேவை விவரம்**

முழு உழுந்து பாதியாக்குதல், கச்சான் கோது நீக்குதல், ஈர அரிசி திரித்து வறுத்தல், உறைப் பில்லாமல் சரக்குத்தூள் அரைத்தல், தேங்காய் எண்ணெய் ஊற்றுதல் மற்றும் சகல விதமான அரைத்தல் வேலைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
பிருந்தா மில்ஸ்
No-18, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
Tele : 0779912304 (32186) (10,14)

## காணவில்லை



கூழா முறிப்பு ஒட்டிசுட்டான் முல்லைத்தீவை சேர்ந்த

### சுந்தரலிங்கம் திலகவதி

என்பவரை கடந்த முள்ளிவாய்க்கால் யுத்தகாலத்தில் இருந்து காணவில்லை. தற்போது கடந்த 5 நாள்களுக்கு முன் யாழ் நகரப் பண்ணை வீதியில் கண்டதாக கூறினர். இவருக்கு 57 வயது. இவரை கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 4050899, 077 1600 648 (32187) (10,14)

**வங்கியியல் கற்கைநெறிகள் (Banking Courses)**
வங்கி வேலை வாய்ப்பினை பெற்றுத்தரும் கற்கைகள் CBF & DBF

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தினால் (IBSL) நடத்தப்படும் இக்கற்கை நெறிக்கான தகைமைகள்

O/L இல் 6 பாட சித்தி. இதில் 5C காணப்படல் வேண்டும்.

கணிதம் C மற்றும் தமிழ் C உள்ளடங்கி இருத்தல்

அல்லது

A/L 3 பாட சித்தி

பதிவுகள் நடைபெறுகின்றன
தொடர்பு:
N. UMAKANTH
COLLEGE OF BUSINESS MANAGEMENT (CBM)
33, Temple Rd, Kokuvil East, Kokuvil.
291, Arasady Rd, Nallur, Kantharmadam.
0777 110 756
(32180)(10,6)

## வடக்குக்கான அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதற்கு முயற்சி

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வு என்றுகூறியஆட்சியாளர்கள்இன்று 13 ஆவது திருத்தத்தின் மூலம் வடக்குக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களையே வெட்டிக் குறைக்க முற்படுகிறார்கள். இதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 56 ஆவது பேராளர் மாநாட்டில் உரையாற்றிய பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் அரசியல் நெருக்கடிகளை மட்டுப்படுத்துவதற்காகக் கல்வியை ஒரு கருவியாகப் பாவிக்கின்றனர். கல்வி அமைச்சுக்கூட இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையுமின்றி கல்விச் சேவை அமைச்சு ஒன்று உருவாக் கப்பட்டு பெருந்தொகை நிதி நாசமாக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேலும் குழப்பப்பட்டுள்ளன. அரசின் திட்டமிடப்படாத செயற்பாடுகளால் ஆசிரியர், அதிபர் உட்பட மாணவர்கள் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர். கல்வித் துறைக்கு நிரந்தர செயலாளரை நியமிப்பதற்குப் பதிலாக பதில் செயலாளரின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

மாணவர்களிடமிருந்து பணம் அறவிடுவதை நிறுத்துவதாகக் கூறிக்கொண்டு 2013.03.13 ஆம் திகதிய 2013/11 ஆம் இலக்கத்தின் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையானது கிராம அலுவலரின் அத்தாட்சியின் பேரில் பணம் அறவிடலாம் என்பதை உறுதிப்படுத்துகிறது. கல்வித்துறையில் மோசடிகள், பண அறவீடுகளை நிறுத்தும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதனால் கடந்த 7 மாதங்களின் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கான முறைப்பாடுகள் ஆயிரத்து 545 ஆக உயர்ந்தன. தேசிய பாடசாலைகள் தொடக்கம் கோட்ட மட்டத்தில் நடைபெறும்பரீட்சைகள் வரை அனைத்தும் ஒழுங்கற்ற வருந்தக் கூடிய நிலையில் இடம்பெறுவதால் பாடசாலைக் கல்வியின் மதிப்பீடு தரம் குறைந்துள்ளது. இந்த நிலை தனியார் கல்வியை நாடுவதற்கு மக்களிடையே ஊக்கத்தை அதிகரிக்கும் நோக்கமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நடைமுறையிலுள்ள கல்வி முறையை புனரமைப்புச் செய்வதாகப் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு அரசு தன்னிச்சையாகக் கல்வித் துறைக்குள் மாற்றங்களைச் செய்து வருகின்றது.

பாடசாலைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் ஆபத்தான சதியில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது -என்றார்.

(து-4)

## சர்வதேச விசாரணை இலங்கை மீது உறுதி

### அடித்துக் கூறுகிறார் சுமந்திரன் நவியின் அறிக்கைக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் இலங்கை சர்வதேச விசாரணையை எதிர்கொள்ளத்தான் போகின்றது என்று குறிப்பிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நவநீதம்பிள்ளையின் அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கைகள் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாய்மொழி மூல அறிக்கையைச் சமர்ப்பித்த நவநீதம்பிள்ளை, எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை அரசு போர்க் குற்றங்கள் தொடர்பில் நம்பத்தகுந்த விசாரணைகள் நடத்தப்பட்ட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இல்லாவிட்டால் சர்வதேச சமூகம் தனியான விசாரணை மேற்கொள்ளும் என்றும் எச்சரித்திருந்தார்.

ஆயினும் அல்ஜசீரா தொலைக் காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நவநீதம்பிள்ளையின் அறிக்கையை நிராகரித்து விட்டார்.

இதன் மூலம் இலங்கை நம்பத்தகுந்த விசாரணைகளை மேற்கொள்ளப்போவதில்லை



என்பது தெரிகின்றது. இதனால் சர்வதேச விசாரணையை அது எதிர்கொள்ளத் தான் போகின்றது.

அத்துடன் இலங்கை தொடர்பில் நவநீதம்பிள்ளை அம்மையாரின் கரிசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கிறது - என்றார்.

(த-5)

## அமெரிக்காவின் கிரீன் காட் வீசா விண்ணப்பம் கோரல்

பச்சை அட்டை அதிஷ்ட குலுக்கல் (Green Card Lottery) என்று அழைக்கப்படும் 2015 அதிர்ஷ்ட குலுக்கல் மூலம் பல்வகைமை குடியேற்ற வீசா நிகழ்ச்சித்திட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது என கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

பச்சை அட்டை அதிர்ஷ்ட குலுக்கல் சீட்டு தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு.

இன்று முதலாம் திகதி இலங்கை நேரம் பிற்பகல் 9 மணி முதல், நவம்பர் 2 ஆம் திகதி பிற்பகல் 9 மணி வரை மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப் படிவங்கள் இணையத்தளத்தின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்படும்.

அதிர்ஷ்ட குலுக்கல் மூலம் பல்வகைமை குடியேற்ற விசா வழங்கும் வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் இலங்கை, மாலைதீவுகள் உட்பட தகைமை வாய்ந்த நாடுகளில் பிறந்தோருக்கு குடியேற்ற விசா பெறும் வகையில் நேர்காணலுக்கான ஒரு சந்தர்ப்பம் எழுந்தமானமாக வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் சட்டபூர்வமான நிரந்தர குடிமக்களாகக் கருதப்படுவதற்கான குடிவரவு விசாக்களுக்கு அவர்கள் தகைமை பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் விபரமான ஆலோசனைகளையும், தகைமைகளையும் கண்டறிவதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களாயின் தயவு செய்து கொழும்பு அமெரிக்க தூதரகத்தின் www.srilanka.usembassy.gov/visas/diversityvisad lottery dprogram.html இணையத்தளத்தைப் பரிசீலிக்கவும்.

அதிர்ஷ்டக் குலுக்கலுக்கு விண்ணப்பிப்பதாயின் தயவுசெய்து www.dvlottery.state.gov இணைய தளத்தைப் பார்வையிடவும்.

**ஆலோசனைகள்**

இன்று 1ஆம் திகதி முதல் நவம்பர் 2 ஆம் திகதி வரை யிலான கால எல்லையில் அதிஷ்ர்டக் குலுக்கலுக்கான விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும். இலங்கை மாலை தீவுகள் உட்பட ஒரு சில நாடுகளில் பிறந்தோருக்கு மாத்திரமே அதிஷ்டக் குலுக்கல் செல்லுபடியாகும்.

ஒருமுறை மாத்திரமே நீங்கள் விண்ணப்பிக்க முடியும். பல முறை விண்ணப்பித்தால் அதன் பெறுபேறாகத் தகைமையை இழக்க நேரிடும்.

இணையத் தளத்திற்கான விண்ணப்பம் முற்றிலும் இலவசமானது. எதுவித மறைமுகமான செலவுகளும் கிடையாது. அமெரிக்க அரசுடன் தொடர்பு கொண்டவர்கள் எனத் தம்மை அறிமுகப்படுத்தும் போலித் தனி நபர்களிடமோ அல்லது நிறுவனங்களிடமோ ஏமாற வேண்டாம்.

**அடுத்த நடவடிக்கை தொடர்பான அறிவித்தல்கள்**

2014ஆண்டு மே மாத ஆரம்பத்தில் விண்ணப்பதாரிகள் www. dvlottery.state.gov என்ற இணையதளத்தைப் பார்வையிட்டு விசாவிற்கான நேர்காணலுக்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்களா எனப் பரிசீலிக்க முடியும்.

நீங்கள் தெரிவு செய்யப்பட்டு இருப்பின் அமெரிக்கப் பேராளர் அதிகாரியோடு (U.S.Consular Officer) ஒரு நேர்காணல் இடம்பெறும். நீங்கள் விசாவைப் பெறத் தகுதி பெற்றுள்ளீர்களா என அவரே தீர்மானிப்பார்.

இப்படி அதில் குறிபிடப்பட்டுள்ளது.

(சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜனாதிபதி

பாரங்களிலிருந்து அறியமுடிகிறது. இதனையடுத்தே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவிப் பிரமாண நிகழ்வை ஜனாதிபதி முன்னிலையிலோ அல்லது ஆளுநர் முன்னிலையிலோ நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் அழைப்பின் பேரில் நேற்று அவரை, வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

யாழிலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பிலும் பதவிப்பிரமாணம் குறித்து பேசப்பட்டுள்ளது.

"முதலமைச்சரொருவர் அம்மாகாணத்துக்குரிய ஆளுநர் முன்னிலையில் பதவியேற்க வேண்டும் என்பது தான் இதுவரை காலமும் இருந்து வந்த சம்பிரதாயம் என்றும், அந்த நடைமுறையைப் பின்பற்று மாறும் ஆளுநர் சந்திரசிறி இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரும் வடமாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்கவுள்ள க.வி.விக்னேஸ்வரன், அவ்வாறு செய்ய வேண்டும் என்று எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். ஆளுநரும் அந்தக் கூற்றை ஏற்றுக்கொண்டுள்ளார் என்று அறியமுடிகின்றது.

வடமாகாண சபையின் முதல்வர் மற்றும் அமைச்சுகளின் அலுவலகங்கள் எங்கெங்கு அமைய வேண்டும் என்பது தொடர்பிலும், மாகாணசபையின் முதல் அமர்வுக்கான திகதி சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கைதடியில் அமைக்கப்பட்டுள்ள வடமாகாண சபைக் கட்டடத்தின் கீழ்ப் பகுதி எதிர்வரும் 12 ஆம் திகதி வடமாகாணசபை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும் என்று ஆளுநர் இச்சந்திப்பின்போது கூட்டமைப்பினரிடம் கூறியுள்ளார்.

கட்டடத்தின் மூன்றாவது மாடியின் புனரமைப்புப் பணிகள் இன்னும் பூர்த்தியாகாததால், முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கான அலுவலகங்களுக்கு வேறு கட்டடமொன்றை ஏற்பாடு செய்யுமாறும் அதற்கான வாடகைப் பணத்தை அரசு செலுத்தும் என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று ஆளுநர் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர்தான் முதலமைச்சர் பதவி ஏற்க முடியும். எனவே, அதற்கான கடிதத்தையும் சந்திப்பின்போது கூட்டமைப்பினர் கோரியுள்ளனர். குறித்த கடிதத்தை ஆளுநர் இன்று கையளிப்பார் என்று தெரியவருகிறது.

### மாகாண

கள் இன்னமும் முடிவு செய்யவில்லை. முடிவு செய்ததும் அறியத்தருகின்றோம் என்று கூறினோம்.

அமைச்சுக்களின் பொறுப்புக்கள் தொடர்பில் அவர்கள் பட்டியலைத் தயாரித்து வைத்திருந்தனர். அதன்படி செயற்படுத்துவதா அல்லது வேறு ஏதாவது வழியில் செயற்படுவதா என்பது தொடர்பில் இதில் ஆராயப்பட்டது.

கைதடியில் அமைக்கப்பட்டு வரும் வடக்கு மாகாண சபையின் சபை அமர்வுகள் நடத்தும் பகுதியை எதிர்வரும் 12 ஆம் திகதி எம்மிடம் கையளிப்பதாக ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் முதலாவது சபைக் கூட்டத்தை நடத்துவதற்கு 7 தினங்களுக்கு முன்னர் தனக்கு அறியத்தருமாறும் தான் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும் என்பதையும் ஆளுநர் கூறினார்.

அத்துடன் அமைக்கப்பட்டுவரும் மாகாண சபைக் கட்டடத்தின் 3 ஆவது மாடியிலேயே முதலமைச்சர் அலுவலகம் அமைக்கப்படும் என்றும் அதுவரை எங்களை வெளியில் வேறு ஒரு இடத்தில் அலுவலகத்தை அமைக்குமாறும் அதற்கான வாடகைப் பணத்தை மாகாண சபை செலுத்தும் என்றும் அவர் தெவித்தார் - என்றார் சுமந்திரன். (த-5)

### இந்தியத்

புப் படிமம்' எனும் கவிதைத் தொகுப்பு நூல், யாழ். நகரிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று மாலை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதன் பின்பு ஈழத்து கவிஞர்களான பா. அகிலன், சோ. பத்மநாதன், சித்தாந்தன், சாந்தன் ஆகியோரது கவிதைகளும் சிங்களக் கவிஞரான ஆரியவன்ச ரணவீர வின் சிங்களக் கவிதை வாசிப்பும் இடம்பெற்றது.

ஈழத்துக் கவிஞர்கள் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வு மற்றும் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை உள்ளடக்கிய போர்க் காலக் கவிதைகளை மிகவும் உருக்கமாக -உணர்வுபூர்வமாக வாசித்தனர்.

இவர்களின் கவிதைகள் கேட்போர் நெஞ்சை நெகிழ வைக்கும் வகையில் உணர்வுபூர்வமாக கடந்த காலப் போர் அவலங்களை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தின.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதர் வி.மாகலிங்கம், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், நூலாசிரியர் ரஜீவ விஜேசிங்க மற்றும் எழுத்தாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஒ-5)

### போனஸ்

வடக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதனிடம் நேற்றுக்காலை யாழ்.மாவட்ட செயலக தேர்தல்கள் திணைக்களத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்றவர்களின் பெயர் விவரங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளன. (த-5)

### 'பைக்கற்'

கப்பட்டே வழங்கப்பட்டு வந்தது. கடந்த சில வாரங்களாக கொழும்பிலிருந்து வருவிக்கப்பட்ட பைக்கற் பால் வழங்கப்படுகிறது.

உணவு ஒவ்வாமையாலேயே மாணவர்கள் பாதிக்கப்பட்டனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின.

இது தொடர்பில் தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அதன் பின்னரே என்ன நடந்தது என்று தெரியவரும் என்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4-9)

### இருளில்

கிருஸ்ணராஜா (வயது-57) என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

பருத்தித்துறை வீதியில் வல்லை, மண்டான் சந்திக்கு அருகில், வீதித் திருத்தப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் றோளர் வாகனம் வீதியோரத்தில் சமிக்ஞை இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வாகனத்தை செலுத்தி வந்தவர்கள் அருகில் இருந்த மதுபான சாலையில் மது அருந்திக்கொண்டிருந்தனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த நபர் எதிரேவந்த வாகனம் ஒன்றுக்கு வழிவிடும் போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதிக்கொண்டார். இதனால் படுகாயமடைந்த அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவத்தை அறிந்த வாகனச் சாரதியும் அவரது நண்பர்களும் தலைமறைவாக தப்பி ஓடிவிட்டனர்.

விபத்து நடந்த உடனே சம்பவம் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் பொலிஸார் 2 மணித்தியாலங்கள் கழித்தே சம்பவ இடத்துக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-4-8-5-400)

### இராணுவ

விபத்து இடம்பெற்றது. இராச வீதி, கோப்பாயைச் சேர்ந்த திருமதி சதீஸ்குமார் கீர்த்தனா (வயது - 20) என்ற இளம் குடும்பப் பெண்ணே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். இவரது கணவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு கே.கே.எஸ். வீதி வழியாக பயணித்த இராணுவ பஸ், முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை தட்டா தெருச் சந்தியில் வைத்து மோதித் தள்ளியது. இதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற பெண் வீதியில் விழுந்தார். அவர் மீது பஸ் சில்லு ஏறியதில் அதில் நசியுண்டு அவர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதுடன் விபத்துக்குள்ளான பஸ்ஸையும் அவ்விடத்திலிருந்து எடுத்துச்செல்ல அனுமதித்தனர் என்று கூறப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-5-4-400)

# அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற அணிகள்



உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம், ஒக்.1
முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இதுவரை இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் பொக்கணை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
புதுக்குடியிருப்பு சூப்பர் றாங் விளையாட்டுக் கழக அணிக்கும் ஆனந்தபுரம் ஆனந்தம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சூப்பர் றாங் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
ஒட்டுசுட்டன் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணிக்கும் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக் கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.1
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் 'பி' அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளன. (400-422)

## இறுதியாட்டம் இன்று



உடுவில் உதய சூரியன்



கொக்குவில் 'ஏபி'

யாழ்ப்பாணம், ஒக்.1
கம்பர்மலையங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 20/20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் கொக்குவில் 'ஏபி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது றோயல்

யாழ்ப்பாணம், ஒக்.1
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## பொம்மர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், ஒக்.1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், திக்கம் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம். (த-23)

# வட்டு. ஓல்ட் கோல்ட்ஸை வீழ்த்தியது சென்ரலைட்ஸ்

வலி.வடக்கு, ஒக்.1
யாழ்ப்பாணம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 20/20 கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் சென்ர லைட்ஸ் விளையாட்டுக் கழகம் 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 20 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 05 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.
ஜேம்ஸ் 8 ஆறுகள் 7 நான்குகளுடன் 90 ஓட்டங்களையும் கனிஸ்ரன் 4 ஆறுகள் 4 நான்குகளுடன் 54 ஓட்டங்களையும் பிரசாந் 4 ஆறுகளுடன் 24 ஓட்டங்களையும் எட்வேட் எடின் 18 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 7 ஓட்டங்களும் பெறப்பட்டன.
ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திலீபன், ஜெயசுதன், சோபிநாத், கஜேந்திரன் முறையே 22, 29, 30, 44 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினார்கள்.

> முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட் டுக் கழகம் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறை வில் 05 இலக் குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் 19.3 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.
ஜெயசுதன் 43 ஓட்டங்களையும், மதுசன் 24 ஓட்டங்களையும், ஸ்ரீகுகன் 23 ஓட்டங்களையும், நிரோசன் 13 ஓட்டங்களையும், குகன், கஜீதரன் தலா 11 ஓட்டங்களையும் பெற்றார்கள்.
சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரசாந் 04 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும், சாள்ஸ் 04 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், மயூரன் 3.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், அலன் ராஜ் சோபிநாத் முறையே 07,18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

# இரு அணிகளுக்கும் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.1
நாவாந்துறை சென்.நீக்கிலஸ் இளைஞர் மன்றத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளைஞர் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.
ஜோசவ்வாஸ் அணியை எதிர்த்து அந்தோனியார் மோதிக் கொண்டது. ஆட்டநேரத்தில் இரு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
சமநிலை தவிர்ப்பு உதைக்குப் போதிய வெளிச்சம் இல்லாமையில் இரு அணியினருக்கும் வெற்றி வழங்கப்பட்டது. (த-23)

# கரப்பந்தாட்டத்தில் எஸ்.கே.எஸ். அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.1
மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்காக திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.
இதில் எஸ்.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.



5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் எஸ்.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வடமராட்சி ஆசிரியர்களின் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.1
ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் இரு தினங்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
ஆசிரியர்களுக்கிடையில் இடம்பெறும் இந்தப் போட்டியில் எறிபந்து, கிரிக்கெட், வலைப்பந்து மற்றும் மெய்வன்மைப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன.
இந்தப் போட்டி தொடர்பான அறிவுறுத்தல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் தமது பாடசாலை அதிபர்களூடாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
இதேவேளை, இந்தப் போட்டிகள் எதிர்வரும் முதலாம், 2 ஆம், 4 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.
இந்தக் காலப்பகுதியில் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதனால் இந்த விளையாட்டுக்கள் குறித்த திகதிக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-400)

# திருகோணமலை லீக்கின் உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.1
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளத்தினால் தலைவர் கிண்ணத்துக்காக திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
ஈஸ்ரேர்ன்ஈகிள் விளையாட்டுக் கழக அணிக்கும் பிக்வூட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஈஸ்ரேர்ன்ஈகிள் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கிறீன்லைட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# ஹைதராபாத்தை வென்றது ரைற்றன்ஸ்

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரில் நேற்று முன் தினம் முதலாவது போட்டியில் ரைற்றன்ஸ் அணி வெற்றி பெற்றது. சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கெதிரான இப்போட்டியில் ரைற்றன்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

றாஞ்சியில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைவெல்ட் ரைற்றன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டுக்காக 6.3 ஓவர்களில் 62 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து, % விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களுடன் தடுமாறியது. இறுதி நேரத்தில் டேல் ஸ்ரெய்ன் அதிரடியாக ஆடி அவ்வணி 145 ஓட்டங்களைப் பெற உதவினார்.

துடுப்பாட்டத்தில் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி ஷீகர் தவான் 21 பந்துகளில் 37 ஓட்டங்களையும், டேல் ஸ்ரெய்ன் 12 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், பார்த்திவ் பட்டேல் 24 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹைவெல்ட் ரைற்றன்ஸ் அணி சார்பாக டேவிஸ் வியஎி 4 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஹென்றி டேவிட்ஸ், றொவான் றிச்சர்ட், மார்ச்சன்ட் டீ லாங்க மூவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

146 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ரைற்றன்ஸ் அணி 16.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 12.1 ஓவர்களில் 112 ஓட்டங்களைக் குவித்த அவ்வணி, அதன் பின்னர் வெற்றி இலக்கை இலகுவில் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஹைவெல்ட் ரைற்றன்ஸ் அணி சார்பாக ஹென்றி டேவிட்ஸ் 42 பந்துகளில் 64 ஓட்டங்களையும், ஜக்ஸ் ருடோல்ப் 42 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன், இஷாந்த் சர்மா இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஹென்றி டேவிட்ஸ் தெரிவானார். (த)

# சுப்பர் ஓவர் முறையில் வென்றது ஒட்டாகோ

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் 14ஆவது போட்டியில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது. தென்னாபிரிக்காவின் லயன்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி சுப்பர் ஓவரில் வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூர் சவாய் மன்சிங் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 7 ஓவர்களில் 44 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குயின்டன் டீ கொக் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் லயன்ஸ் அணி சார்பாக குயின்டன் டீ கொக் 63 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களையும், ஜீன் சைம்ஸ் 15 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி சார்பாக நிக் பியர்ட் 2 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் மக்மிலன், நீல் வக்னர் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

168 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றமையால் போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி சார்பாக ஜேம்ஸ் நீஷம் 25 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களையும், ஹேமிஷ் றதர்போர்ட் 21 பந்துகளில் 32 ஓட்டங்களையும், டெரக் டீ பூடர் 37 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்,

பந்துவீச்சில் லயன்ஸ் அணி சார்பாக இம்ரான் தாஹிர், லொன்வபோ சொற்சொபி இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், சொஹைல் தன்வீர், எதன் ஓ றெய்லி, ஹார்டஸ் விலோ ஜோன் மூவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி 13 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய லயன்ஸ் அணி முதலிரு பந்துகளிலும் 10 ஓட்டங்களைப் பெற்ற போதிலும், இறுதியில் 13 ஓட்டங்களையே பெற, சுப்பர் ஓவரும் சமநிலைக்குள்ளாகியது. அதன் பின்னர் போட்டியில் பெறப்பட்ட ஆறு ஓட்டங்களும் சமனாக இருக்க, நான்கு ஓட்டங்களின் அடிப்படையில் ஒட்டாகோ வோல்ற்ஸ் அணி ஒரு நான்கு ஓட்டத்தை அதிகமாகப் பெற்றிருந்ததால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இப்போட்டியின் நாயகனாக ஜேம்ஸ் நீஷம் தெரிவானார்.





# இந்திய கிரிக்கெட் சபையின் தலைவராக ஸ்ரீனிவாசன்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக என். ஸ்ரீனிவாசன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் இடம்பெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே அவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் 84ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று முன் தினம் சென்னையில் இடம்பெற்றது.

இதன்போது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்கு என். ஸ்ரீனிவாசனைத் தவிர வேறு எவரும் தங்களுடைய நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கவில்லை. எனவே என். ஸ்ரீனிவாசன் தெரிவு செய்யப்பட்டார்.



அவர் தவிர, புதிய செயலாளர், பொருளாளர்களும் தெரிவு செய்யப்பட்டதோடு, புதிய ஐ.பி.எல் பணிப்பாளராக றாஞ்சிப் பிஸ்வால் தெரிவுசெய்யப்பட்டார். தேர்வாளர்களில் மாற்றம் ஏற்படுத்தப் படவில்லை.

**புதிய பதவிகள்:**

தலைவர்: என். ஸ்ரீனிவாசன்
செயலாளர்: சஞ்சய் பட்டேல்
இணைச் செயலாளர்: அனுராக் தாகுர்
பொருளாளர்: அனிருத் சௌத்ரி
உப தலைவர் - வடக்குப் பிராந்தியம்: எஸ். பி.பன்சால்
உப தலைவர் - மத்தியப் பிராந்தியம்: ராஜிவ் சுக்லா
உப தலைவர் - தெற்குப் பிராந்தியம்: ஷிவ் லால் யாதவ்
உப தலைவர் - மேற்குப் பிராந்தியம்: ரவி சவந்த்
உப தலைவர் -கிழக்குப் பிராந்தியம்: சித்ராக் மித்ரா. (த)

# முர்ரேயின் சவாலுக்கு பதிலடி கொடுத்த வீனஸ்



இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரேயின் சவாலுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் வீனஸ் வில்லியம்ஸ்.

விம்பிள்டன், அமெரிக்க ஓபன் போன்ற கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டி களில் ஆண்கள் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவு களில் சம்பியன் பட்டம் வெல்லும் வீரர், வீராங் கனைக்கு சம அளவிலான ரொக்கப்பரிசு வழங்கப் படுகிறது. இதற்கு முன்னணி வீரர்களிடையே அதிருப்தி நிலவுகிறது.

இது குறித்து இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரே, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நாங்கள் ஒவ்வொரு போட்டியிலும் 5 செற் வரை கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. ஆனால், மகளிர் பிரிவில் அதிபட்சம் 3 செற் தான் விளையாடுகிறார்கள். பரிசுத் தொகை மட்டும் சரிசமமாக வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்கிறார்கள், இதில் நியாயம் இல்லை.

மகளிர் ஒற்றையர் ஆட்டங்களும் 5 செற்கள் நடைபெற வேண்டும். வீராங்கனைகள் இதற்குத் தயாராக இருந்தால் மட்டுமே சரி சமமான பரிசுத் தொகை கேட்கலாம். இல்லாவிட்டால் எங்களுக்கும் 3 செட் ஆக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் இதற்கு பதிலடி கொடுத்திருக்கிறார்.

இவர் கூறுகையில், தற்போது மகளிர் பிரிவில் 3 செற் ஆட்டங்களே நடந்து வருகின்றன. அதை 5 செட்களாக மாற்றினாலும் நாங்கள் விளையாடத் தயாராகவே இருக்கிறோம்.

குறிப்பாக கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளில் இந்த மாற்றம் செய்யப்பட்டால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

மகளிர் ரென்னிஸ் சங்க தலைவர் ஸ்டேசி அலஸ்டரும், வீராங்கனைகள் இந்த சவாலுக்கு தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (த)

# இங்கிலாந்து பிறீமியர் லீக் முடிவுகள்

இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் போட்டிகளில் நோர்விச் சிட்டி, லிவர்பூல் அணிகள் வெற்றிபெற்றன.

ஸ்ரோக் சிற்றி அணிக்கும், நோர்விச் சிற்றி அணிக்குமிடையிலான போட்டியில் நோர்விச் சிற்றி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி-பெற்றது.

இப்போட்டியில் 34ஆவது நிமிடத்தில் நோர்விச் சிற்றி அணியின் ஜொனதன் ஹொவ்சன் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்து. 1-0 என்ற முன்னிலையைப் பெற்றுக் கொடுத்தார். அதன் காரணமாக நோர்விச் சிற்றி அணி முதற்பாதியை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக் கொள்ளாது விட, நோர்விச் அணி 1-0 என்ற கோல் கணக்கில் இப்போட்டியில் வெற்றிபெற்றது.

லிவர்பூல் அணிக்கும், சண்டர்லான்ட் அணிக்குமிடையிலான போட்டியில் லிவர்பூல் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் ஆரம்பத்திலிருந்து ஆதிக்கம் செலுத்திய லிவர்பூல் அணி சார்பாக 28 ஆவது நிமிடத்தில் டானியல் ஸ்ரார்ட்ஜ் கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார். 38 ஆவது நிமிடத்தில் லூயிஸ் சுவரேஸ் கோலொன்றைப் பெற்றுக் கொடுக்க, லிவர்பூல் அணி முதற்பாதியில் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இப்போட்டியின் இரண்டாவது பாதியின் ஆரம்பத்திலேயே, 52ஆவது நிமிடத்தில் எமானுலே கியச்செரினி கோலொன்றைப் பெற்று சண்டர்லான்ட் அணிக்கு நம்பிக்கையளித்த போதிலும், அதன் பின்னர் கோல்களைப் பெற்றுக் கொள்ள அவ்வணி தடுமாறியது. 89 ஆவது நிமிடத்தில் லூயிஸ் சுவரேஸ் தனது இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுக்க லிவர்பூல் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த)

# சச்சினின் 200ஆவது டெஸ்டை கொல்கத்தாவில் நடத்த முடிவு



இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் 200ஆவது டெஸ்ட் போட்டியை, புகழ்பெற்ற கொல்கத்தா ஈடன்கார்டன் மைதா னத்தில் நடத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக இந்திய அணியின் சுற்றுப் பயணம் மற்றும் போட்டி அட்டவணையை நிர்ணயிக்கும் குழுவின் தலைவர் ராஜீவ் சுக்லா தலைமையில் வருகிற மூன்றாம் இறுதி முடிவு எடுக்கப்படும்.

# மொன்டி பனசருக்கு தடை

இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் மொன்டி பனசர் ஒத்திவைக்கப்பட்ட ஒரு போட்டித் தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்துப் பிராந்தியப் போட்டிகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்காகவே அவர் தடைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.


2014ஆம் ஆண்டுக்கான இங்கிலாந்துப் பிராந்தியப் போட்டிகளின் முடிவு வரை இந்தத் தடை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த பருவகாலம் முடியும் வரை அவர் இன்னுமொருமுறை தவறொன்றில் ஈடுபட்டால் அவருக்குத் தடை விதிக்கப்படும்.

எசெக்ஸ் அணி சார்பாக வோர்செஸ்ரெர்ஷெயர் அணிக்கெதிரான போட்டியில் பங்குபற்றும் போது எதிரணி வீரர்களை மிரட்டியதன் காரணமாகவும், சரியான முறையில் நடந்து கொள்ளாத காரணமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போட்டியின் போது எதிரணி வீரரான றொஸ் வைற்றெலியுடன் மொன்டி பனசர் மோதலில் ஈடுபட்டதாகவும், நடுவர்களும், அணித்தலைவரும் உட்புகுந்தே அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

அதேபோல், அப்போட்டியில் மொன்டி பனசர் இரண்டாவது இனிங்ஸில் தனது பெறுபேறுகள் குறித்துத் திருப்தியடையாமல் எரிச்சலையடையத் தொடங்கியதாகவும், அதன் காரணமாக அவர் பந்துவீச்சிலிருந்து அணித்தலைவரால் மாற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக ஒழுக்கவியல் பிரச்சினைகளில் அகப்பட்டு வரும் மொன்டி பனசர், இதற்கு முன்பு இரவு விடுதியொன்றின் காப்பாளர்கள் மீது சிறுநீர் கழித்தமைக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)



# ரியல் மட்ரிட்டை வீழ்த்தியது அட்லெடிகோ



" ஐரோப்பிய கண்டத்தில் உள்ள புகழ்பெற்ற 20 உதைபந்து அணிகள், இந்தப் போட்டியில் விளையாடி வருகின்றன.

லாலிகா உதைபந்து போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த உதைபந்து அணியான அட்லெடிகோ மட்ரிட் அணி, பலம் வாயந்த ரியல் மட்ரிட் அணியை தோற்கடித்தது.

இப்போட்டியில் 1999ஆம் ஆண்டுக்குப் பிறகு, ரியல் மட்ரிட்டிடம் அட்லெடிகோ தொடர்ந்து (23 ஆட்டங்களில்) தோல்வியைச் சந்தித்து வந்தது.

தற்போது, அந்த மோசமான சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள புகழ்பெற்ற 20 உதைபந்து அணிகள், இப்போட்டியில் விளையாடி வருகின்றன.

கடந்த ஓகஸ்ட் மாதம் தொடங்கிய இப்போட்டி அடுத்த ஆண்டு மே மாதம் முடிவடைய உள்ளது. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் இருமுறை மோதும். 7ஆவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடந்து வருகின்றன.

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில் சனிக்கிழமை நடைபெற்ற 7ஆவது சுற்று ஆட்டத்தில் அட்லெடிகோ மட்ரிட் 1-0 என்ற கோல் கணக் கில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தியது.

அட்லெடிகோ அணியின் டியகோ கோஸ்டா, ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். இது, கிறிஸ்டியானோ ரொனால்டோ, கேரத் பேல், பெபே உள்ளிட்ட பலம் வாயந்த வீரர்களைக் கொண்ட ரியல் மட்ரிட் அணிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதன்பிறகு ரியல் மட்ரிட் வீரர்கள் கடுமையாகப் போராடியபோதும் கோல் அடிக்க முடியவில்லை.

இந்த வெற்றியின் மூலம் அட்லெடிகோ அணி 21 புள்ளிகள் பெற்று புள்ளிகள் பட்டியலில் 2ஆம் இடத்தில் உள்ளது.

லியோனல் மெஸ்ஸியின் பார்சிலோனா அணி 21 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ரியல் மட்ரிட் அணி 16 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது.

கோஸ்டா முதலிடம்: ரியல் மட்ரிட் அணிக்கு எதிராக ஒரு கோல் அடித்ததன்மூலம், லா லிகா உதைபந்து போட்டியில் அதிக கோலடித்தவர்கள் வரிசையில் 8 கோல்களுடன் கோஸ்டா முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த படியாக மெஸ்ஸி (8 கோல்கள்), ரொனால்டோ (6 கோல்கள்) ஆகியோர் அடுத்த இடங்களில் உள்ளனர். (த

சிறுவர் தின நல்வாழ்த்துக்கள்
சிறுவர் தினத்தை முன்னிட்டு
அன்றைய தினம் மட்டும்
சிறுவ்ர்களுக்கான புத்தகங்களுக்கு
விசேட கழிவு, சலுகை வழங்கப்படும்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
No.234,கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
TP- 021 222 2573 (32095) (6,311)

கார் விற்பனைக்கு
வைத்தியரின் பாவனையில் உள்ள
JX-xxxx இலக்கமுடைய மாருதி கார்
உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
(32174) (10,6,3) 077 805 2324

CIMA சாதனைச்சித்திகள் MCS இல்!
Foundation level 100%
F.M:67% F.O:80% P.O:70% E.O:66%
Save 40000 Rs
Week days, 2nd Oct
Week End, 5th Oct
Type <CM><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS Near University of Jaffna
Supported by UNDP/JRRP 772 395 895



S.Kanisdda
Po -75%

Mobile Repairing
புதிய பிரிவுகள் 05.10.2013
சனிக்கிழமை முதல்
ஆரம்பமாகின்றன
Duration - 2Months
வார இறுதி வகுப்புகள் சனி, ஞாயிறு
மாலை 4.00 - 6.00
அனுபவமிக்க ஆசிரியர் மூலம்
தொழில்முறைப்பயிற்சிகள் வழங்கப்படும்
அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
மேலதிக விபரங்களுக்கு:
306. கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
021-221-1220, 0779122997

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.10.2013 சனிக்கிழமை
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 1.00-03.00
4. மாலை 3.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 1.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.